# சோழர் கோயிற்பணிகள்



# சோழர் கோயிற் பணிகள்

ஆசிரியர் :
**ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை,** பி. ஏ., பி. எல்.,

அண்ணுமலை நகர்

*உரிமை ஆசிரியருக்கே ]* : : *[ விலை ரூ. 2-50*

ஆறாம் பதிப்பு—1964

## ஆசிரியரின் நூல்கள்

*The Great Temple at Tanjore, 1935.*
இராஜராஜேசுவரமும், பிற சோழர் கோயில்களும், 1938.
தஞ்சைத் திருக்கோயில்கள், 1939.
சோழர் கோயிற் பணிகள்—முதற் பதிப்பு—1939.
*Palani, the Sacred Hill of Muruga, 1941.*
பழநித்தல வரலாறு, 1944.
*A Plan for Tiruchendur, 1946.*
*Five Tamil Idylls of Pattup-pattu, 1947.*
*Tiruchendur,—the Sea-shore Temple of Subrahmanyam, 1948.*
பழநித்தல வரலாறும், திருக்கோயில் வழிபாடும், 1948.
*The University's Environs and Chidambaram, 1955.*
தில்லைச் சிற்றம்பலவன் கோயில், 1956.
*Two Thousand years of Tamil Literature, 1959.*
ஸ்ரீரங்கநாதர் தல வரலாறு, 1959.
சிற்பமும் கலை வாழ்வும், 1962.

20415
T

**

### புத்தகம் கிடைக்குமிடங்கள் :

ஆசிரியர், 28, கொற்றவன்குடி, அண்ணாமலைநகர்.

பாரம்பு நிலையம், 131, பிராட்வே, சென்னை—1.

மற்றும் புத்தகசாலைகளிலும்.

Printed at Jeevan Press, Madras-5 *(906)*

சிவமயம்

## மதிப்புரை

தஞ்சாவூர் ஸ்ரீ பிரகதீசுவரஸ்வாமி கோயில் மானேஜராக வுள்ள ஸ்ரீமான் ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய **சோழர் கோயிற் பணிகள்** என்னும் புத்தகத்தைப் பார்த்தேன். தமிழ் நாட்டு முடியுடைய வேந்தராகிய சோழர்களது பெருமையையும் அவர்களுடைய ஆலயத் திருப்பணிகளையும் பற்றி விரிவாக எழுதியிருப்பது கண்டு மகிழ்ந்தேன். கர்ணபரம்பரைச் செய்தி, நூல் வழக்கு, சிலா சாஸனங்கள் முதலியவற்றாலறிந்த விஷயங்களை ஒழுங்கு படுத்தி எளிய தமிழ் நடையில் எழுதியிருத்தலின், இது தமிழ் நாட்டாருக்கு மிகவும் பயன்படுமென்பது என் கருத்து.

திருவல்லிக்கேணி
20—7—'39

இங்ஙனம்,
**வே. சாமிநாதையர்.**

## இரண்டாம் பதிப்பின் முகவுரை

நம் தமிழகத்தை முற்காலத்தில் ஆட்சிபுரிந்த முடியுடை வேந்தர் மூவருள் சோழரே அரசியல் அமைப்பிற்கு முதலில் வைத்து எண்ணத்தக்கவர் ஆவர். இச்சிறு நூல், அன்னோரது அரசியற்றிறனையும், அவர்கள் இறைபணி நின்று எடுப்பித்த கோயில்களையும் பன்னூறாண்டுகட்குப் பின்னர்த் தமிழ் மக்கட்கு நினைப்பூட்ட நினைந்து எழுதப்பெற்றதாகும். இதன் முதற்பதிப்பைத் தமிழுலகம் நன்கு மதித்து ஏற்றுக்கொண்டமைக்கும், இதன் பொருளைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் தமது மாணவர் தேர்வுக்குரிய பாடப் புத்தகங்களுள் ஒன்றாக இதனை அமைத்தமைக்கும், இதனைச் செம்மைப்படுத்த உதவிய அரிய நண்பர் பலருக்கும், எனது நன்றி உரியதாகும்.

**ஜே. எம். சோமசுந்தரம்.**

பழநி, விஷு, சித்திரை 1.

## மூன்றும் பதிப்புரை

தமிழகத்துச் சரிதம் இன்னும் விரிவாக எழுதப்பெற வேண்டிய தொன்றும். இதுவரை, சரித்திர ஆசிரியர் பலரும் அதனைத் தமது நூற்களில் மிகச் சுருக்கமாகவே கையாண்டுள்ளனர். இக்கடமையும் பொறுப்பும் தமிழ் அறிஞருடையனவேயாகும். இவ்வரிய பணியை எதிர்காலம் விரைவில் வரவேற்கின்றது.

'சோழர் கோயிற் பணிகள்' சோழர்களது அரசியற் றிறனையும் அருட்பணிகளையும் ஒருவாறு விளக்குவதாகும். சென்னை, திருவாங்கூர், மைசூர், அண்ணுமலை பல்கலைக் கழகத்தாரும் முற்போந்த பதிப்பினை ஆதரித்தனர். இந் நூலிற் காணும் பல அரிய படங்களை உதவியவர்கள் : இந்திய தொல் பொருள் பாதுகாப்புக் கழகத்தாரும், தஞ்சாவூர் அரண்மனைத் தேவத்தானங்களின் பரம்பரை தர்மகர்த்தரும் ஆவர். இந்நூலைச் செம்மையாக்க உதவியவர் என் நண்பர்கள் ; இந்நூலை அரிய முறையில் அச்சேற்றித் தந்தவர், சென்னை ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தின் உரிமையாளர் ; இவர்கள் யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்நூலை அறிஞருலகம் ஏற்று, நமது அருட் கலைச் செல்வங்களின் பண்பும் பயனும் பெறுவதாக.

இந்நூலை இவ்வாண்டு கல்லூரி இடைநிலை வகுப்பிற்குப் பாடநூலாக வைத்துதவிய சென்னை, திருவாங்கூர், அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் அறிஞர் குழுவினர்க்கு எனது உளமார்ந்த நன்றி உரியதாகும்.

சென்னை, 1948. **ஜே. எம். சோமசுந்தரம்.**

## ஐந்தாம் பதிப்புரை

இறையருளால், மீண்டும் இந்நூலை அறிஞருலகிற்கும் மாணவருலகிற்கும் உரிமையாக்குகின்றேன்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
சுபகிருது, ஆனி, 1962.

# பொருள் [redacted]


| | | |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| I. | திருக்கோயில்களின் வளர்ச்சி<br>முற்காலச் சோழர்—பல்லவர் காலக் கோயில்கள் | 5 |
| II. | பிற்காலச் சோழர் கோயில்கள் | 18 |
| III. | முதலாம் இராசராசனும் இராசராசேச்சரமும் | 44 |
| IV. | முதல் இராசேந்திரனுக்குப் பிற்பட்டவர்களின்<br>கோயிற் பணிகள் | 99 |
| V. | சோழர் கோயிற் பணிகளும் மக்கள்<br>வாழ்க்கையும் | 135 |

இணைப்பு :

| | | |
|---|---|---|
| 1. | கருவூர்த்தேவர்—தஞ்சை—திருவிசைப்பா | 166 |

# சோழர் கோயிற் பணிகள்

தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தருள், சோழரது வள்ளன்மையும் சமயப்பற்றும் இன்றும் உலகம் சிறப்புறக் கொண்டாடப்படுவனவாம். தமிழ் மூதாட்டியார், அவரைக் கூறுமிடத்து,

> "தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
> மண்ணாவதும்சோழ மண்டலமே"

என, நீர், இறை, நிலம் எனும் மூன்றையும் ஒருங்கு போற்றுவராயினர். கலிங்கத்துப்பரணி யாசிரியரும்,

> "பல்கொடி
> தாழ மேருவி லுயர்த்த செம்பியர்
> தனிப்பு லிக்கொடி தழைக்கவே"

எனப் புகழ்ந்து பாடியுள்ளார். சூரிய குலத் தோன்றல்களாகிய சோழ மன்னர்கள் சரித்திர காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சீரும் சிறப்பும் எய்தியிருந்தமை பல சான்றுகளால் அறியக் கிடக்கின்றது. அவர்களுள் தலைசிறந்து விளங்கிய சிலர் பெயரையே பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காண்கிறோம்.

சோழர்கள் ஆங்காங்கு எடுப்பித்த கற்றளிகளே, அன்னோரை நினைப்பூட்டும் வெற்றித் தூண்களாக இன்றுவரை நின்று நிலவுகின்றன. பண்

டைச் சோழர்களும் அவர்கள் பின்வந்த சரித்திர காலப் பல்லவ, பாண்டிய, சோழர்களும் பழைய கோயில்களைப் பெரியவை ஆக்கியும், சீர்பெறப் புதுப்பித்தும், புதிய கோயில்களைத் திருச்சுற்று லயம், எழுநிலைக் கோபுரம், விமானம் முதலிய பல உறுப்புக்களுடன் எடுப்பித்தும் தங்களுடைய வலியையும், புகழையும் நிலைநாட்டினர். ஆயினும், தமிழகத்திலே பழைய காலமுதல் அழகினாலும், உருவத்தினாலும், அற்புதச் சிற்பங்களாலும், கடவுள் திருமேனிகளாலும் கண்டோர் வியக்கும் படி எண்ணற்ற கோயில்களைக் கட்டிய பெருமை சோழர் குலத்தாருடையது.

சோழர்களுள் முன்னோனாகிய முசுகுந்தச் சக்கர வர்த்தி, இந்திரனுக்குச் செய்த உதவியின் நன்றி யாகப் பெற்ற ஏழு தியாகராச விடங்க மூர்த்திகள் கோயில்கொண்ட இடங்கள் **சப்தவிடங்கத் தலங்க** ளெனக் கூறப்பெறுகின்றன. அவை திருவாரூர், திருநாகைக்காரோணம், திருக்காறாயில், திருக் கோளிலி, திருமறைக்காடு (வேதாரணியம்), திரு நள்ளாறு, திருவாய்மூர் ஆகிய பதிகளிலுள்ள திருக்கோயில்களென்பதைக் கந்தபுராணம், கந்த விரதப் படலச் செய்யுட்களால் அறியலாம். அதற் கடுத்து, மனுச்சோழன், கிள்ளிவளவன் ஆகிய இவர்கள் காலத்தில் சைவசமயம் சிறப்புற்றிருந் தது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவ ரும், பழைய சோழ மன்னருமான கோச்செங்கணான் சோழ தேசத்தில், "எண்டோ ளீசற்கு எழில் மாடம் எழுபதுசெய் துலகாண்ட செங்கட் சோழன்" எனத் திருநறையூர் (நாச்சியார் கோயில்) திருப்

பதிகத்தில் திருமங்கை மன்னன் அருளிய திருவாக்காலும் மற்றும் தமிழ் மறைகளாலும்[1] உணரக் கிடக்கின்றது.

காலப்போக்கில், சோழமன்னரின் சீரும் சிறப்பும் மூன்ரும் நூற்ருண்டில் குன்றவே, ஆருவது நூற்ருண்டின் இறுதியில், அன்ஞர், பல்லவ பாண்டியர்களின் பேரரசுக்கு உட்பட்டவராகவும், ஆங்காங்குச் சிற்றரசர்களாகவும், சேனைத் தலைவராகவுமிருந்து பிறகு, பாண்டியருக்கும் பல்லவருக்கும் இடைவிடாது நடந்த போரில் மாறிமாறி இரு பக்கங்களிலும் சேர்ந்து துணைபுரிந்ததாகவும் தெரிகிறது. வேள்விக்குடிச் செப்பேட்டிலும், வேலூர்ப் பாளையம் பட்டயத்திலும் இவ்விடைக்காலச் சோழ மன்னர்களைப் பற்றிய அருகிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. 7-ஆவது, 8-ஆவது நூற்ருண்டிலுங்கூட, பொன்னி நாடெனப்படும் தஞ்சாவூர் சில்லாவிலும் அதற்கு அருகிலும் அவர்கள் வாழ்ந்திருந்தனர் என்பது, பல்லவர், பாண்டியர், மேலைச்சாளுக்கியர், இராட்டிரகூடர் முதலியோர் கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. அரசியற்றுறையில் பொலிவிழந்த இக்காலத்திலுங் கூட இச்சோழர்கள் சைவசமய வளர்ச்சிக்குப் பாடுபட்டு வந்தமையும், சோழ அரசன் மகளாகிய

---

1 தேவாரம் : சம்பந்தர்: திருவைகன் மாடக்கோயிற் பதிகங்கள் 1, 4, 5, திருவம்பர் ; சுந்தரர் : திருநன்னிலம். 10. திருநறையூர் பதிகங்கள். இத்தகைய கோயில்கள் திருமங்கை மன்னன் (ஆழ்வார்) காலத்து எழுபதுதான் இருந்தன போலும். இவை பெருங்கோயில் எனவும், மாடக்கோயில் எனவும் கூறப்படுவன. அவைகளுள் எட்டுக் கோயில்கள் இவர் காலத்து மறைந்து போயிருத்தலும் கூடும்.

மங்கையர்க்கரசியார் பாண்டியற்கு மாதேவியாகி, அமண் சமயம் மிகுந்திருந்த பாண்டிநாடு, மீண்டும் சைவ சமயம் நிலைபெற்றோங்கச் செய்த செய்தியும், ஆளுடைய நம்பிகள் ஆலவாய்க் கெழுந்தருளிய காலத்து, ஆண்டு, "தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு" இனிதமர்ந்த சோழனைப் பற்றிய செய்தியும், பிறவும் பெரிய புராணம் என்ற அருள் நூலில் காணப்படுவனவாம்.

# I

# திருக்கோயில்களின் வளர்ச்சி

## முற்காலச் சோழர், பல்லவர் கோயில்கள்

தமிழகத்தில் முற்காலக் கோயில்கள் மரத்தாலும் செங்கல் (சுடுமண்) களாலும் சுண்ணும்பாலும் கட்டப்பட்டவையாகும். இதனுல், அக்காலத்திலிருந்த கோயில்களுள் ஒன்றுமே நமக்குக் காணப்படவில்லை.

ஆயினும், ஏழாம் நூற்றுண்டினவும் இதற்கு முற்பட்டனவுமான கோயில்கள், பல திறப்பட இருந்தனவாக அப்பமூர்த்திகள் தேவாரத்தில் காணப்படுகின்றன.

'பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
'பெருங்கோயி லெழுபதினே டெட்டு மற்றுங்,
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்,
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில், மணிக்கோயில் ஆலக் கோயில்,
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து,
தாழ்ந் திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே.''

—அப்பர்-அடைவு திருத்தாண்டகம். 2

இவைகளின் சிறப்பியல்புகள்[4] தெளிவாகக் காணக் கிடையாவிடினும் ஆராய்ச்சியால் தெரிந்தவரை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

---

4 தமிழ்ப் பொழில் xv. p. 83. அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறை, வித்துவான் T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்களால் தெரிவன :—பெருங் கோயில்களெல்

ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து காஞ்சியிலிருந்து அரசு புரிந்த பல்லவப் பேரரசர்களே முதன் முதல் கற்றளி (கற்கோயில்) எடுக்கத் தொடங்கிஞர்கள். இவ்வுண்மை, வடமொழி, தென்மொழி இலக்கியங்களால் அறியப்படுதலோடு, தென்ஞர்க்காடு சீமையிலுள்ள மண்டகப்

---

லாம் செய்குன்றுகள்மேல் எடுப்பிக்கப் பெற்றவை. இவற்றை மலைக் கோயில்கள் என்றும் கூறலாம். சம்பந்தப் பெருமான் திருநல்லூரிலுள்ள பெருங்கோயிலை 'மலைமல்கு கோயில்' என்று கூறியிருப்பது அதன் அமைப்பை ஒருவாறு உணர்த்துவதாகும். நன்னிலத்துப் பெருங்கோயில், குடவாயில் பெருங்கோயில், வைகல் மாடக்கோயில், தண்டலைச்சேரி மாடக்கோயில் முதலியன காண்க. மாடக்கோயில் பெருங்கோயில் எனினும் ஒக்கும். மாடக்கோயில் என்பது யானை ஏருத வண்ணம் பூமி மட்டத்துக்குமேல் மிகவும் உயரமாகப் படிக்கட்டுகள் அமைத்துக் கட்டப்பெற்றதாகும். இத்தகையவை கோச்செங்கணன் எடுப்பித்தவையாகும். இம் மாடக் கோயிலின் விமானம் யானை தூங்கும் நிலையில் கட்டப் பெற்றிருக்குமாயின் அதனைத் தூங்கானை மாடக்கோயில் என்பர். உதாரணமாகப் பெண்ணுகடம் திருக்கோயிலையும், திருப்பனந்தாள் ஊருடையப்பர், திருத்தணி, இன்னம்பர் கோயில்களையும் காண்க.

**கரக்கோயில்** என்பது தேர் வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பெற்ற கோயிலாகும். அத்தகைய கோயில் நம் தமிழ் நாட்டில் ஒன்றுதான் உளது என்பது தேவாரப் பதிகத்தால் அறியக் கிடக்கின்றது. அது சிதம்பரம் தாலுகாவில் காட்டு மன்னுர் கோயிலுக்குத் தெற்கே ஐந்து மைலிலுள்ள மேலைக் கடம்பூரில் இருக்கிறது. இக் கோயிலின் கர்ப்ப இல்லம் தேர்போன்ற அமைப்பாகும். தமிழ்ப்பொழில் xvi. p. 223. பார்க்க.

இக் கோயிலின்கண் மற்றெரு தனிச் சிறப்பு :

இதன் மூன்று சுவர்களிலும் இரண்டு வரிசைகளாக 63 நாயன்மார்களது வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.—பெரிய புராண ஆராய்ச்சி, p. 149.

பட்டு என்ற சிற்றூரில், மகேந்திரவர்மன் [கி. பி. 600-630] செய்வித்த ஒரு கல் மண்டபத்தில், ''இக்கோயில் பிரமனுக்கும், ஈசுவரனுக்கும், விஷ்ணுவுக்கும், விசித்திர சித்தனால் செங்கல்,

---

**ஞாழற்கோயில் :** ஞாழல் என்பது ஒரு மரத்தின் பெயர். அம் மரத்தினடியில் எழுந்தருளியுள்ள பெருமான் ஞாழற் பெருமான் என்று வழங்கப் பெற்றனராதல் வேண்டும். ''பாதிரிப் புலியூர்த் திருக்கடை ஞாழற் பெருமானடிகளுக்கு'' என வரும் கல்வெட்டின் (S. I. I, vii. 744) துணைகொண்டு, திருப்பாதிரிப் புலியூரிலுள்ள கோயில் முற்காலத்தில் ஞாழற் கோயில் என்று வழங்கப் பெற்றிருத்தல் கூடும்.

**கொகுடிக் கோயில் :** கொகுடி என்பது ஒருவகை முல்லை. அம் முல்லை மிகுதியாகவுள்ள ஓரிடத்தில் அமைந்த பெருங் கோயில் என்பதாகும். திருக்கருப்பறியலூரின்கண் உள்ள கோயில் கொகுடிக் கோயில் எனத் தேவாரம் கூறும். இவ் வூர் இப்போது சீர்காழிக்கு மேற்கே ஆறு மைல் தூரத்தி லுள்ளது. இவ்வூர் இப்போது மேலைக்காழி என்றும், தலை ஞாயிறு என்றும் வழங்கப் பெறுகிறது.

**இளங்கோயில் :** பேரளம் ரயில் நிலையத்திற்கு மேற்கே ஒரு மைலிலுள்ள திருமீயச்சூரின்கண் குறிக்கப்படுகிறது. பழைய கோயிலைப் புதுப்பிக்குங்கால் அதற்குச் சமீபத்தில் இறைவனை எழுந்தருளுவித்து வழிபாடு புரிந்த கோயில் இளங்கோயில் ஆகும். அப்பர் சுவாமிகளால் பாடப்பெற்றது. மற்றுமொன்று இளங்கடம்பூர் கோயிலாகும்.

**மணிக்கோயில் :** ஆழ்வார்களின் பாசுரங்களில் ''திரு நறையூர் மணிமாடஞ் சேர்மின்களே'' என்ற தொடர் காணப்படுகின்றது. நம்பியாண்டார் நம்பியின் கோயிற் றிருப்பண்ணியர் விருத்தத்தில் (செ. 67) ''தில்லை தன்னுள்—செற்றரு மாமணிக் கோயில்'' என்ற தொடர் வருகின்றது. இவற்றால் திருநறையூரிலும் (நாச்சியார் கோயில்) சிதம்பரத் திலுமுள்ள கோயில்கள் மணிக்கோயில்களாக இருத்தல் வேண்டும் என்று கருதற்கு இடமுளது. அவற்றின் அமைப்பு முதலானவை மேலும் ஆராயற்பாலன.

**ஆலக்கோயில் :** திருக்கச்சூரின்கண் சிவபெருமானை ''ஆலமர் செல்வன்'' எனக் கூறியிருப்ப, இறைவன் ஆலமர நிழலில் எழுந்தருளியுள்ள கோயில் ஆலக்கோயில் என்று

சுண்ணும்பு, மரம், உலோகமில்லாமல் அமைக்கப்பட்டது'' என்று பொறிக்கப்பட்டிருப்பதால்,[2] அவ்வரசனுக்கு முன்னர் மண், மரம் முதலிய பொருள்களாலேயே கோயில்கள் கட்டப்பட்டு வந்தன என்பது அறியப்படுகிறது. இப் பல்லவர்களே, மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம், நாமக்கல் முதலிய ஊர்களில் திருமால் கோயில்களும்; சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், திரிசிராப்பள்ளி, திருமயம் முதலிய இடங்களில் சிவன் கோயில்களும்; மண்டகப்பட்டில் திரிமூர்த்திகள் கோயிலும், சித்தன்னவாயிலில் சமணர் கோயிலும் எடுப்பித்தனர். இத்தகைய குன்றுகளையும், பாறைகளையும் உட்புறமாகவே குடைந்து இறைவனுக்கு மண்டபம் போல் கோயில்கள் சமைக்கப்பட்டன என்பது மகேந்திரவர்மனது மேற்கூறிய மண்டகப்பட்டுக் கல் வெட்டாலும் பிறவற்றாலும் தெரிகிறது. மகேந்திரவர்மன் சமண சமயியாக இருந்த போது இக்குடைவரைக் கோயில்கள் சமணப் பள்ளிகளாகச் செதுக்கப்பெற்றவையாகும். சைவ

---

வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும். திருக்கச்சூர்—செங்கற்பட்டிற்கு வடக்கேயுள்ள சிங்கப்பெருமாள் கோயில் புகை வண்டி நிலையத்திற்கு அண்மையிலுள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நண்பகலில் சிவபெருமான் அன்னம் அளித்த தலம்.

2 Epi. Ind. xvii p. 7; Ins. 51 of 1914; தமிழ்ப் பொழில் vi. p. 361. செங்கல்லால் கட்டப்பெற்ற திருவைகாவூர் மகாதேவர் கோயிலைக் கற்களால் கட்டுவதற்கும், ஏற்கனவே உள்ள தேவஸ்தான நிலங்கள் போதாமையிற், கோயிலின் செலவுக்கும் நிலதானம் கொடுத்ததை முதலாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு அறிவிப்பது காண்க.

ராக மாறிய அப்பமூர்த்திகளுக்குப் பலவகைத் துன் பங்கள் செய்து அவை அவரைச் சாராதொழிய, மகேந்திரவர்மன் சைவனாக மாறினான். அதன் பின்பே, அவனுடைய குடைவரைக் கோயில்கள் யாவும் சிவன் கோயில்களாக மாறின. திரிசிராப் பள்ளி மேலக் குடைவரைக் குகையும், ஆங்குக் கங்காதரமூர்த்தியின் அருமைச் சிற்பமும், மூலத் தானத்துக் குகையில் இலிங்கமும், தனது உருவச் சிலையும் அமைத்ததாக அவ்விடத்துக் கல்வெட்டுக் கள் [3a] கூறுகின்றன. திரிசிராப்பள்ளி மேவிய தாயுமானச் செல்வருடைய இலிங்கமூர்த்தியையும் கோயிலையும் எடுப்பித்தவனும் இவனே.

அதற்கு அடுத்தபடியாக, மாமல்லன் என்று சிறப்புப் பெயர் பெற்ற முதலாம் நரசிம்மவர்மன் [3](கி. பி. 640-674) காலத்தில், அக் குகைக் கோயில் களின் உட்புறமேயன்றி வெளிப்புறத்தினும் பாறைகளையே விமானங்கள் போன்று செதுக்கி அமைத்தமை, "கலங்கள் இயங்கும் கடல் மல்லை" யிலுள்ள கடற்றுறையோரக் கோயில்களிலிருந்து தெரிகிறது. அவை '**ஏழு ரதக் கோயில்**'களென மாமல்லபுரத்தில் இன்றும் சிறப்புடன் விளங்குவது யாவரும் அறிந்ததே. தனித்தனிக் கருங்கல்லால் கட்டிய விமானங்கள் போல, ஒவ்வொன்றும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கின்றது. இவைகளை ஆசாக வைத்துக் கொண்டே, பிற்காலத்தில், ஆலய விமானங்கள் எடுக்கப்பெற்றன. சிவ சூடா மணி என்ற இராசசிம்ம பல்லவன் காலத்து உண்

---

[3a] Ins. *63, 64* of *1888.* [3] Ins. *368* of *1908.*

டாய மாமல்ல புரத்திலுள்ள நெய்தற்கோட்டமும் (Shore-Temple at Mamallapuram), காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோயிலும், அவ்விடமே நந்திவர்மபல்லவ மன்னன் எடுப்பித்த வைகுந்தப் பெருமாள் கோயிலும், கல்லாலும் சாந்தாலும் ஆக்கப் பெற்றவை. இவைகளே பல்லவர் காலக் கோயிற் சிற்ப முதிர்ச்சிக்குச் சான்றாவன. இராசசிம்மன் காலத்தில் (கி.பி. 685-720) எடுக்கப்பட்ட கோயில்கள், மலைகளைப் பெருங் கற்களாகப் பெயர்த்துச் செதுக்கி இசைவு தெரியாமல் அடுக்கி எழுப்பியனவாகும். இத்தகைய கோயில்கள், முதற்படியாக, இறைவன் கோயிலும் முன் மண்டபமுமாகவே அமைந்தவை; பின்பு சுற்றாலைகளும் ஏற்படுத்தப் பட்டன. படுத்த யானைபோல் பார்வைக்குத் தோன்றுபவை தூங்கானை மாடம், (கஜப்பிரஷ்ட விமானம்) என்று சிற்ப நூலுடையோர் கூறுவர்.

## கோயிற் சிற்ப அமைப்பு

பிற்காலச் சோழர் பேரரசு, விசயாலயனுடன் தோன்றியது. அவ்வொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கிப் பதினொன்றாவது நூற்றாண்டின் முற்பகுதிவரை, சோழர்களின் ஆதிக்கத்தில் எடுப்பித்த கோயில்களின் சிற்ப அமைப்பு ஏறக்குறைய ஒரு தன்மையன எனலாம். அளவில் சில சிறிதும் சில மிகப் பெரிதுமாக இருப்பினும், அவை யாவும் உபானமுதல் ஸ்தூபி வரையில் (கற்றளி)—கற்களாலாகிய கோயில்களாகவே சமைக்கப்பெற்றிருந்தன. அவைகளின் நிலப் பரப்பு (axial lengths) கிழக்கு-

மேற்கு நோக்கியவையாகும். இறைவனது கருவறை (கருப்பக்ருகம்) சதுர வடிவின. அதன் முன் அந்தராளமும், முக மண்டபம் என்ற அர்த்த மண்டபமும் இருந்தன. மற்றும் சில, அதன் முன் மண்டபமாகிய மகா மண்டபத்தையும் பெற்றிருந்தன. இவை, இம் மூன்று அங்கங்களைப் பொருந்திய தன்மையால் **திரையங்க**மெனக் கூறுவர் சிற்ப நூலார். இக் கோயிலுக்கு மூன்று திருவாயில்கள், கிழக்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்தன. அதன் முன்னணியில் நந்திப்பெருமானுக்குப் பீடமாகிய மேடையுமிருந்தது. கருப்ப கிருகத்துக்கு மேல் உயர்ந்து விளங்கியது அதன் **விமானம்.** சிவனது இருப்பை நினைந்து, அதனை மேரு என்றும், கைலாசமென்றும், திருமலையென்றும் அழைத்தனர். இக் கோயிற் கட்டடங்களைச் சுற்றித் திருச்சுற்றுலை என்ற பிராகாரம் அமைந்தது. அதனில் பரிவார ஆலயங்கள் பல இடம் பெற்றிருந்தன. மூலத்தானத்து வெளிப்புற மதில்களில் மாடங்கள் ஏற்பட்டு, ஆங்கும் சிவ பரிவாரத் திருமேனிகள் இடம் பெற்றன. பிராகாரமாக வலம் வரும் முறையில், தென்கிழக்கில் சூரியன், தென் மேற்கில் கணேசர், சப்த கன்னிகையர், மேற்கில் சுப்ரமணியர், வடமேற்கில் ஜேஷ்டாதேவி, வடக்கே சண்டேசுவரர், வடகிழக்கில் சந்திரனும் இடம் பெற்றிருந்தனர். இத் திருச்சுற்றுலயங்கள் கோயிலைச் சுற்றி வளைந்த திருமதிலை யொட்டியும், சில தனித்தும் பொருந்தி யிருந்தன. திருமதிலின் திருவாயில்கள், அழகிய கோபுரத்துடன், பொதுவாகக் கிழக்கிலும், சில விடங்களில் மேற்கிலும் அமைந்திருந்தன. கோயிலைச் சுற்றியும் உள்ளிட்ட

வெளியிடங்களிலும் நந்தவனம் அமைந்திருந்தன. பொதுவாக, கோயில்களின் அமைப்பு, நீர் வளம் சூழ்ந்த பூம்பொழில், கோயிலுக்கு முன்னர்த் திருக்குளமாகிய நீர்நிலை என ஓர் இலக்கணத்தைப் பெற்றிருந்தது. சில இடங்களில் சிற்சில வேற்றுமைகளும் காணப்பட்டன.

இவைகளுக்குச் சிறந்த வழிகாட்டி, எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், வடக்கே விக்கிரமாதித்தன் மனைவி எடுப்பித்த "விரூபாக்ஷாலோகேச்சுரம்" என்ற பட்டக்கல் கோயிலாகும். அதன் சந்நிதி கிழக்கு நோக்கியும், மகா மண்டபத்தின் மூன்று திருவாயில்கள் கிழக்கு, வடக்கு, தெற்கில் பொருந்தியும், நந்தியின் பீடம் அதன் முன்னணியிலும், பரிவார ஆலயங்கள் திருச்சுற்றுலையில் இடம் பெற்றும், இவை யாவையும் வளைந்த திருமதிலில், இருவாயில்கள் கோபுரங்களுடன் கிழக்கிலும் மேற்கிலும் திகழ்ந்ததாகும். இத்தன்மையாகவே, தெற்கே காஞ்சியில் கயிலாசநாதர் கோயிலும், வடக்கே எல்லோராக் குகை (Ellora Caves) கயிலாசக் கோயிலும், எலிபெண்டா (Elephanta Caves) திரிமூர்த்தி கோயிலும் அமைந்திருந்தன. ஆங்குப் பிரதான கயிலாசர் சந்நிதியைச் சுற்றி வளைந்த குகையில் ஒரே வரிசையில் கணேசர், பைரவர், பார்வதி, சண்டேசுரர், சப்த கன்னிகையரும் இடம் பெற்றிருக்கின்றனர். இதனைச் சுற்றிய இரண்டாம் மாடிக் குகையில், சிவ, விஷ்ணு மூர்த்தங்கள் பல இடம் பெற்றுள்ளன. நந்தியின் முன்னும் ஒரு சிறு மண்டபம் அமைக்கப்பெற்றிருக்கிறது. எலிபெண்டா குகையிலும், திரிமூர்த்தியின்

கோயிலைச் சுற்றிய மண்டபம், மூன்று திருவாயில்களை யுடையதாக அவ்வொவ்வொன்றின் வாயிலின் இருமருங்கும் இரு குகைகளும், பின் பக்கம் பாறையில் மூன்று குகைகளும் குடையப்பட்டுள்ளன. இவைகளில் பார்வதி, அர்த்தநாரீசுவரர், திரிமூர்த்தி, கங்காதரர், கலியாண சுந்தரர், அந்தகாசுர சம்ஹாரமூர்த்தி, நடராசர், லகுலீசர், சிவபெருமான் யாவரும் இடம் பெற்றுள்ளனர். தென்னாட்டில், இவ்வமைப்பைச் சித்திரிக்கும் முயற்சியை, முற்றுப்பெறாத நிலைமையில் கழுகுமலைக் கோயிலிலும் காணலாம்.

இப் பொதுமுறையை யொட்டியும், சில சிறு வேற்றுமைகளோடும் கொடும்பாளூர் மூவர் கோயில், பனைமலைச் சிவன் கோயில், காஞ்சியில் பல்லவன் இராசசிம்மன் கட்டிய கயிலாசநாதர் கோயில், பிற்காலச் சோழர்களாலாய விசயாலயச் சோழேச்சரம், திருக்கட்டளை சிவன் கோயில், பனங்குடி, காளியாபட்டி, விசலூர், முசுகுண்டேச்சுரம், திருப்பூர் கோயில்களிலும் விமான அமைப்புகளும் திருச்சுற்றாலயங்களும் இடம் பெறுவனவாயின. இவைகளில், முகமண்டபமாகிய அர்த்த மண்டபத்தைச் சுற்றி அஷ்ட பரிவாராலயங்கள், சப்த கன்னிகையருக்கும், கணேசர், சுப்பிரமணியர், ஜேஷ்டாதேவி, சூரியன், சந்திரன், நந்திக்கும் சந்நிதிகள் இருந்தன. இன்னும், சிற்சில பெரிய அளவினவாக எடுப்பித்த கோயில்களில், சிறிய மாறுதல்களும் காலப்போக்கில் காணப்படுகின்றன. கொடும்பாளூர் மூவர் கோயிலில், மூன்று பிரதான சந்நிதிகள் ஒரே வரிசையில் இடம் பெற்றன. அவை

களின் முன்னர் ஒரே மகா மண்டபம், அதன் முன்னர் ஒரு நந்தி மண்டபம், கோயிலைச் சுற்றிய பதினாறு சுற்ராலயங்களில் ஐம்பத்தொன்பது பரிவாரத் திருமேனிகள், ஒரு நாழிக்கிணறு, இவை யாவையும் சுற்றியதும், முன் கோபுர வாயில் பொருந்தியதுமான திருமதிலுடையதாகும். தஞ்சைப் பெரிய கோயிலிலும், முதன் முதல் ஏற்பட்டிருந்தபடி தக்ஷிண மேரு விமானமும், முன் மண்டபமும், முப்பத்தைந்து பரிவார சுற்ராலயங்களும், திருமதிலுக்கு முன்னர் இரு கோபுர வாயில்களும் காண்கிறோம். இப்போதுள்ள மற்றவை யாவும், நாளடைவில் அங்குப் புதியனவாக ஏற்பட்டன வாகும்.

பார்வதியாகிய அம்பிகைக்கு முதன் முதல் தனிக்கோயில் எடுப்பித்தது எட்டாம் நூற்றாண்டிலேயாகும். அவை, பாறையில் செதுக்கப்பட்ட எல்லோராக் கயிலாசர் கோயிலிலும், எலிபெண்டா குடைவரைக் கோயில்களிலும் மாத்திரமே ஏற்பட்டிருந்தன. பொதுவாகப் பல்லவர் காலத்தும், ஆதிச் சோழர் காலத்தும், தேவிக்குத் தனிக்கோயில் ஏற்படவில்லை. தேவியைக் கொற்றவை, துர்க்கை, நிசும்பசூதனி, பிடாரி எனச் சிறு தெய்வமாகப் பரவி வந்தனரென்று தெரிகிறது. ஆனால், இறைவன் சந்நிதியிலேயே தேவி போகசக்தி அம்மன் எனத் தனி இடம் பெற்றிருந்தாள். இராசராசன் இத்தேவியை உமாபரமேசுவரி என்றழைக்கிறான். கி.பி. 8 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே காஞ்சியில் காமாட்சியம்மனுக்குத் திருக்காமக்கோட்டம் என்ற பெயரால் தனிக்கோயில்

ஏற்பட்டதென்பது சுந்தரர் தேவாரத்தால் தெரிகிறது. அதனை யொட்டிக் கி.பி. 11 ஆம் நூற்றுண்டில் திருக்கோயில்களில் அம்பிகைக்குத் தனிச் சந்நிதி, சுவாமி கோயிலின் வடபாகத்தில் ஏற்படுவதாயிற்று, இதன் சான்று, தஞ்சையிலுள்ள பெரியநாயகியின் தனிக்கோயில், பிற்காலத்தில் அதன் இப்போதைய இடத்தில் கட்டப்பெற்றதும், கங்கைகொண்ட சோழேச்சரம் கட்டி முடித்த பின்னரே தான், பெரியநாயகியின் கோயிலும் அங்கு வேருகத் தனி இடம் பெற்றதும் நினைவுகூரவேண்டுவதாகும். முதல் இராசேந்திரனது எண்ணுயிரம் கல்வெட்டே, முதன் முதலாக அம்பிகையின் தனிக் கோயிலைப்பற்றித் திருச் சுற்ருலையில் பரிவாராலயங்களைக் குறிக்குமிடத்து இடம் பெறுகின்றது. அதன் பின்னரே, அம்பிகையின் தனிக்கோயில்கள் ஏற்கனவே எடுக்கப்பட்ட கோயில்களில் இடம் பெறுவனவாயின. மூன்றும் இராசராசன் தனது 18-ஆம் யாண்டுக் கல்வெட்டு, திருவாஞ்சியம் கோயிலில் பிராட்டியாரின் கோயிலை எடுப்பித்தானெனக் கூறும். இன்னும் கோயிலமைப்பில் சில வேற்றுமைகளும் தோன்றின. முற்காலத்து இடம் பெற்ற சப்த கன்னிகையரும் ஜேஷ்டாவும் பின்னர் இடம் பெறவில்லை. க்ஷேத்திர பாலரும், சைவ, வைணவக் கோயில்களில் நாயன்மாரும், ஆழ்வார்களும், சுற்ருலயங்களில் இடம் பெற்றனர். மேலும் காலஞ் செல்லச் செல்ல, சபாபதிக்கும், சுப்பிரமணியர், கணேசர், சோமாஸ்கந்தருக்கும், சூரியனுக்கும் தனிப்பட்ட கோயில்கள் திருச்சுற்ருலை

---

* Ins. 70 of 1911,

யில் ஏற்படுவனவாயின. வேறு சில பெரிய கோயில்களில் கிராம தேவதைகளான சத்தி தேவதைகளும் இடம் பெற்றுள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலில், நான்கு திருக்கரங்களை யுடைய காலப்பிடாரி என்றும், துர்க்கா பரமேசுவரி என்றும் இரண்டு திருமேனிகள் பிரதிட்டிக்கப் பெற்றன என்று கல்வெட்டு ஒன்று குறிக்கின்றது. இதற்கு முன்னர் இத்தேவதைகள், கிராமங்களிலே சிறு கோயில்களில் இடம்பெற்றிருந்தன. அவை கிராமங்களில் **திருமுற்றம்** எனவும், பிற சிவன் கோயில்களில் **ஸ்ரீகோயில்** எனவும் அழைக்கப் பெற்றமையும் காண்கின்றோம்.

கதிரவனாகிய சூரியனுக்கும் சந்திரனுக்கும் தமிழகத்தில் தனித்தனிக் கோயில்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே அமைக்கப் பெற்றிருந்தன என்ற செய்தி, "பகல் வாயில் உச்சிக்கிழான் கோட்டம்......நிலாக் கோட்டம்" 'என வரும் சிலப்பதிகாரத் தொடராலும், உச்சிக்கிழான் கோட்டம் —சூரியன் கோயில் எனவும், நிலாக் கோட்டம்— சந்திரன் கோயில் எனவும் வரும் உரைக் குறிப்பாலும் நன்கு விளங்கும். இவ்வாறு முற்காலத்தில் தனித்தனியே அமைந்திருந்த கோயில் தெய்வங்கள் பிற்காலத்தில் சிவன் கோயில்களில் பரிவார தெய்வங்களாக இடம் பெற்றன.

---

*** அப்பர், சம்பந்தரால் பாடப்பெற்ற குடந்தைக் கீழ்க் கோட்டமாகிய நாகேசுவர சுவாமி கோயில் சூரியனால் பூசிக்கப்பெற்ற தலமென்க. இங்கு ஆண்டுதோறும், சித்திரைத் திங்கள் 11, 12, 13ஆம் நாட்களில் காலையில் சூரியகிரணம் சுவாமிமேல் படுகின்றது. இக் கோயிலில் மிக அருமையான சிற்பங்களுள.

முதற் குலோத்துங்கச் சோழன், சோழர்குல முதல்வனாகிய சூரியனுக்கு ஆடுதுறையையடுத்த திருமங்கலக்குடியின் அருகே ஒரு தனிக்கோயில் கட்டி, அதற்குக்குலோத்துங்க சோழ மார்த்தாண்டாலயம் எனப்பெயரிட்டு, நாள் வழிபாட்டிற்குநிவந்தங்களும் வழங்கியுள்ளான். அத்திருக்கோயில் உள்ள பகுதி, **சூரியனார் கோயில்** என்ற பெயரால் இக்காலத்து வழங்குகிறது சூரியனுக்கென்று அமைந்த அக்கோயிலில், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய ஏனைய கிரகங்களுக்கும் தனித்தனிச் சிறு கோயில்கள் சூழ அமைக்கப் பெற்றுள்ளமை காணலாம். சூரிய ஆராதனை** பிற்காலத்ததேதான், சூரியனை வழிபடும் கன்னோசியிலுள்ள காஹறங்வாலாக்களுக்கும் சோழர்களுககுமிடையே இருந்த கூட்டுறவால் ஏற்பட்டதென்பர் ஆராய்ச்சியாளர். கால அளவில் விழாக்களை ஒட்டி, நிருத்த மண்டபம், சோபான மண்டபம், தேவார மண்டபம், வாத்திய மண்டபம், அரங்க மண்டபம், கலியாண மண்டபம் எனப் பல மண்டபங்களும் கோயில்களில் இடம் பெறலாயின. தஞ்சை, கங்கைகொண்ட சோழேச்சரம், திரிபுவனம் போன்று, முன்னர் கருப்பக் கிரகத்துக்கு மேல் ஓங்கி வளர்ந்த விமானங்கள் நாளடைவில் சிறிய அளவில் நிற்கவும், கோயில் வாயிற் கோபுரங்களோ ஏழுநிலை, ஒன்பது, பதினொன்று நிலைகளாகவும் ஆகியன காண்க. இவை யாவும், சோழப் பேரரசு தாங்கிய முடிமன்னர்களின்தெய்வ பத்தியாலும், மக்களின் குன்றா ஒழுக்கத்தினாலும், கோயில்களும், மடங்களும் ஊட்டிய சமய வளர்ச்சியாலும் காலப்போக்கில் விளைந்தன ஆகும்.

# II

## பிற்காலச் சோழர் கோயில்கள்

ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில், சோழர் ஆதிக்கத்தை மீண்டுந் தலையெடுக்கச் செய்த **விசயாலயன்** மிக்க பராக்கிரமசாலியாவான். இவனைத் தமிழ் நூல்கள் "தொண்ணூற்றாறு புண்கள் மார்பிலே கொண்ட வீரன்" எனப் புகழ்கின்றன. இவனே சரித்திரகாலச் சோழர்களின் பேரரசுக்கு அடிகோலியவன். செந்தலைக் கல்வெட்டால்[5] முத்தரையர் என்ற குறுநில மன்னர், தஞ்சாவூருக்கும் புதுக்கோட்டைக்கும் இடைப்பட்ட ஒரு சிறு நிலப் பரப்பை ஆண்டுவந்த செய்தி புலனாகின்றது. இச்சமயத்தில், சோழ மரபினர் தஞ்சை சில்லாவின் மற்றொருபால் பழையாறையைத் தலைநகராகக் கொண்டு பல்லவரின்கீழ் அரசு செலுத்தி வந்தனர். தஞ்சையை அப்போது ஆண்டுவந்த பெரும்பிடுகு முத்தரையனை வென்ற அவர்கள் வரலாறு திருவாலங்காட்டுச் [6]செப்பேட்டில் குறிக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறு, தஞ்சாவூரில் சோழ அரசை நிலை நாட்டிய விசயாலயன் அங்கு துர்க்கைக்கு **நிசும்ப சூதனி** என்ற பெயரால் கோயில் சமைத்தான். அஃது, இஃதெனக் குறிப்பிட முடியாதிருப்பினும்* தற்போதைய தஞ்சை விண்ணாற்றங்கரைப் பாதை

---

[6] I. I. iii. p. 415. [5] Epi Inp : xiii pp. 134-148; xv 49 : *கள்ளர் சரித்திரம்* p. 23.

* *"தஞ்சை குலாலர் தெருவையடுத்த உத்திர காளியம்மை என்பதும் ஒன்று. தமிழ்ப்பொழில்* XXXV. 1960. *பக்கம்* 377-384.

யில் உள்ள கோடியம்மன் கோயிலாகவோ, தஞ்சைக் கீழ்வாயில் கோட்டத்துப் பூமாலை ராவுத்தன் கோயிலுக்கு அணித்தாக உள்ள வடபத்ரகாளி அம்மன் கோயிலாகவோ அமையலாம். தேவியாரின் திருவுருவம் பழமையான சிற்ப முறையில் நின்ற திருக்கோலமாக உள்ளதை இன்றும் காணலாம். இஃதன்றிப் புதுக்கோட்டைச் சமத்தானத்தில் எட்டுச் சிறு குன்றுகளாற் சூழப்பட்ட நார்த்தாமலை என்ற சிறு கிராமத்தில் மேலைமலை என்ற தென் மேற்குக் குன்றின் கீழ்ச்சரிவின் மேலுள்ள **விசயாலய சோழீச்சுரம்** என்ற ஓர் அழகிய கற்றளியும்[7], திருப்பூர் சோழீச்சர முடையார் கோயிலும்[8]

---

[7] *Vide* No 282 of Pudukkottai Inscriptions. இம் மேலைமலையில் மற்றும் பல்லவ மகேந்திரவர்மனது **சமணகுடகும்,** பிந்திய பல்லவர் காலத்துப் **பழியிலிஈசுவரமு**மாகிய இரண்டு குடைவரைக் கோயில்களும் உள. "இவ்விரண்டு கோயில்களுக்கும் எதிராகவுள்ளது கற்கோயிலான **விசயாலய சோழீச்சரம்.** இக்கோயில், மத்தியில் பிரதான கோயிலும் சுற்றிலும் ஏழுசுற்றுக் கோயில்களும் இவைகளைச் சூழ்ந்துள்ள கல் மதில்களும் அடங்கியது. கோயில் மேற்குப் பார்த்தது. மேற்கேயும் வடகிழக்கேயும் இரண்டு வாயில்கள் உள. கருப்பக்கிருகம் ஓங்கார வடிவமுடையது, குறுக்கில் 9 அடியும், உயரத்தில் 8 அடியும் உள்ளது. வட்டச்சுவர் 5 அடி கனமுள்ளது. நான்கு மூலையிலும் சதுர வடிவு உடையது. இது முழுவதும் 29 அடி சதுரமுள்ள மண்டபத்திலிருக்கிறது. கருப்பக் கிருகத்துக்கு மேல் அதே மாதிரி இரண்டு தளங்கள் இருக்கின்றன. சிகரம் வரவரக் குறுகிக் கடைசியில் கல் ஸ்தூபியுடையதாய் வட்டமாய் முடிகிறது. இது பல்லவ சிற்பமான மஹாபலிபுரத்தில் உள்ள தர்மராஜ இரதத்தின்; சிகரத்தை ஒத்திருக்கின்றது. நான்கு பக்கங்களிலும் நான்கு சிம்மலலாடங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு இடையில் கீழ் வரிசையில் நான்கு திக்குகளிலும் நான்கு ரிஷபங்கள் விளங்குகின்றன. நான்கு புரைகளில் கற்சிலைகள் உள. மேற்கில், சிவனும் பார்வதியும், தெற்கில், வீணாதர தக்ஷிணாமூர்த்தியும் காணப்படுகின்றனர். கருப்பக்கிருகத்திற்கு முன் ஓர் அர்த்த மண்டபம் உள்ளது. இது சுவருடன் உள்ளடங்கிய அரைத்

காளியாபட்டி, பனங்குடி சிவன் கோயில்களும் இவன் எடுத்தனவே. இவைகளின் சிற்ப அமைப்புக் கள் காணத்தக்கவை.

---

தூண்களால் (pilasters) அடைபட்ட மண்டபம். இதன் வெளிப்புறத்தில் புரைகள் இல்லை. இம் மண்டபத்தைத் தாங்க மத்தியில் கற்றூண்கள் இருக்கின்றன. தூண்களின் தலைப் பாகத்திலுள்ள போதிகை பல்லவ காலத்தவை போலச் சாதாரணமாயும் நடுவில் பட்டையாயும் இரு பக்கத்திலும் சுருள் சுருளாயும் வருவினதாயும் இருக்கிறது.

அடுத்த மண்டபத்தின் வாசலுக்கு இருபுறத்திலும் ஐந் தடி உயரமுள்ள இரண்டு துவாரபாலகர் இருக்கின்றனர்; கால்கள் ஒன்றின்மேல் ஒன்று போட்டபடி இருக்கின்றனர். ஒரு கையில் கதை உளது. மற்றொரு கை **'விஸ்மய'**க் குறி காட்டுகிறது. அவர்கள் சடாமகுடதாரிகளாக விளங்குகின் றார்கள. தலையில் கொம்புபோல் இரண்டு வளைவுகள் உள. இக் கொம்புகள் பல்லவ குகைக் கோவில்களிலுள்ள துவாரபாலகர் பலருக்கும் உள. காதில் பத்ர குண்டலமும், உடம்பில் கடிபந்தமும், உதரபந்தமும், சலங்கை போன்ற குஞ்சத்துடன் முறுக்கின துணிபோன்ற யஞ்ஞோபவீதமும் (பூணூலும்), கையில் வளையங்களும் காணப்படுகின்றன. இம் மூலக்கோயிலைச் சுற்றி ஆறு சுற்றுக் கோயில்கள் இருக்கின் றன—ஏழு கோயில்கள் இருந்திருக்க வேண்டும். இவை சூரி யன், சத்தமாதர்கள், கணபதி சுப்பிரமணியர், ஜேஷ்டா தேவி, சண்டேசுவரர், சந்திரன் இவர்களின் தளிகளாக இருக்கவேண்டும். இவைகள் யாவும் கற்றளிகள். அஸ்தி வார முதல் ஸ்தூபி வரையில் முழுதும் கருங்கல்லே. சுண் ணம்பு இல்லாமல் செவ்வையாகவே, சாமர்த்தியமாகவும் இணைக்கப்பட்ட கற்களால் ஆக்கப்பட்டவை.—கலைமகள். xiii. p. *30-31*.

[8] J. O. R. viii. *1934* pp. *205-10*, xii-iv, pp. *300-29*, xiii-iv, pp. *300—2*.

# முதலாம் ஆதித்த சோழன்

விசயாலயனுக்குப் பின், அவன் மகன் **இராச கேசரி வர்மனுன முதலாம் ஆதித்தன்** கி. பி. 879 முதல் 907 வரை, இருபத்தெட்டு யாண்டுகள் ஆணை செலுத்தினன். "தொண்டை நாடு பரவின சோழன்" எனத் திருநெய்த்தானம் கல்வெட்டு ஒன்று இவனைச் சிறப்பிக்கின்றது. இவன் கல்வெட்டுக்கள் வடக்கே திருக்கோவலூர், காஞ்சி, உக்கல் முதலிய இடங்களிலும்; தெற்கே திருக்கோகரணம், குற்ருலம், சுசீந்திரம் முதலிய இடங்களிலுமுள்ள கோயில்களிற் பொறிக்கப்பட்டுள்ளன. தக்கோலம், திருக்கழுக்குன்றம் கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களால் இவன் காலத்தில் தொண்டைமண்டலம் முழுதும் இவன் ஆணைக்குள் அடங்கி யிருந்ததென்பது புலனும். இதன் வெற்றியின் ஞாபகார்த்தமாக எடுத்த பல கற்றளிகளில், திருப்புறம்பயத்துள்ள ஆதித்தேச்சுரம்* என்ற கோயிலும், பண்டாரவாடை ரயில்பாதைத் தளத்திற்கு அணித்தான திருச்சேலூர் என்ற தேவராயன் பேட்டைக் கோயிலும்[9], கண்ணனூரிலுள்ள சுப்பிரமணியரது [10]கோயிலும் புதுக்

---

* தமிழ்ப் பொழில். xviii-ii. *393;* S. I. I. VI. *80* of *1897.*

*9* Epi. Rep : *1924.* இராஜகேசரி சதுர்வேதிமங்கலம் என்பது இப்போது இராஜகிரி என்ற சிற்றூராக உள்ளது.

*10* **கண்ணனூர்,** புதுக்கோட்டை தலைநகரின் தென்மேற்கே *23* மைல் தூரத்திலுள்ள சிறு கிராமம். சுப்பிரமணியர் கோயில் ஆதித்தனது ஒரு கற்றளி. முழுவதும் சுண்ணும்பு சம்பந்த மில்லாமல் செவ்வையாய்ப் பொருந்தும்படி இணைக்கப்பட்ட கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இம்

கோட்டைக்கு நான்கு மைலுக்கு அருகிலுள்ள கார் குறிச்சித் திருக்கற்றளிக் கோயிலும். திரிசிரபுரத் திற்கு அடுத்த திரு எறும்பியூர் மலையின்மீ துள்ள திருவெறும்பீச்சுவரமுடைய மகாதேவர்

---

மாதிரியான கோயில்கள் சில பல்லவர் காலத்தும், பழைய சோழர் காலத்தும் கட்டப்பட்டன. இது கருப்பக்கிருகம், அந்தராளம், மூடப்பட்டுள்ள முகமண்டபம், பிராகாரம் என்ற பாகங்கள் அடங்கியது. கோபுர வாயிலின் நடுவிலுள்ள இரு கல் தூண்களே தற்காலம் எஞ்சியுள்ளன. இக்கோயிற் கல்வெட்டுக்களைக் கவனிக்குமிடத்து முக மண்டபம் 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததெனினும், கருப்பக்கிருகமும் அந்தரா ளமும் பழமையானவை.

கருப்பக்கிருகம், சுப்பிரமணிய தேவருக்கே யானை வாக னத்துடன் தனிக் கோயிலாக அமைந்திருக்கிறது. கோயில், கிழக்கு மேற்கில் 49 அடி நீளம் உள்ளது. கருப்பக்கிருகம் சதுரமானது. ஒவ்வொரு பக்கமும் $12\frac{1}{2}$ அடி நீளம் உள்ளது. கிழக்குத் திக்கைப் பார்த்த கோயிலில், கருப்பக் கிருகத்தைச் சுற்றிக் கனமான சுவர்களும் இடையில் பதித்த அரைத் தூண்களும் (pilasters) இருக்கின்றன. ஒவ்வொரு தூணும் திருக்கட்டளைச் சுந்தரேசுவரர் கோயில் தூண்களைப் போல் நேர்த்தியான **கால், கலசம், கும்பம், பலகை** என்ற முக்கிய பாகங்கள் அடங்கியவை.

நார்த்தாமலை விசயாலய சோழீச்சுவரத்துக் கோயிற் போதிகையைப் போல், பக்கத்தில் சாய்வு வாய்ந்தது. (angular profile of the corpel). காளியாபட்டி, திருப்பூர்க் கோயிற் போதிகைகளும் இத்தகையனவே. **போதிகைக்கும் கபோதத்திற்கும்** இடையில் விசயாலய சோளீச்சுவரத்தைப் போல் ஒரு பூதகண வரியுள்ளது.

கபோதத்தின் மூலையில் அழகிய சித்திரங்கள் வரையப் பட்டுள்ளன. மேலே **யாளிவரிமானமும் கிரிவமும்** விளங்கு கின்றன. கிரீவத்தில் நான்கு தேவ கோட்டங்கள் இருக் கின்றன. தற்காலம் இரண்டில்தான் சிலைகள் உள. இத் திரு வுருவங்கள் என்னவென்று தெரியவில்லை. அவ்வளவு தேய்ந்து போயிருக்கின்றன. இதைச் சுற்றி நான்கு திக்கிலும் நான்கு யானைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு யானையும் இரண்டடி மூன்றங்குல நீளமும், ஓர் அடி எட்டு அங்குல உயர மும் உடையது. இதே மாதிரி மற்றொரு யானை முகமண்டபத்

கோயிலும்** சிறந்தவை. அன்பில் செப்பேடுகள், ஆதித்தன் காவிரியின் கரை முழுவதும் (சஹ்யமலை முதல் கடல் வரை) சிவனுக்கு உயர்ந்தோங்கிய கற்கோயில்களைக் கட்டினன் என்று கூறும்.

ஆதித்த சோழன் இறந்த இடம் திருக்காளத்திக்கு அண்மையிலுள்ள தொண்டைமாநற்றூர்

---

தில் இருக்கிறது. இதனால் யானை இக் கடவுளின் வாகனம் என்று தெரியவருகிறது. பத்துப் பாட்டு, பரிபாடல் புறநானூறு என்ற சங்க நூல்களில் பிணிமுக மென்னும் பெயருடைய யானையொன்று முருகக்கடவுளின் ஊர்தியாகச்சொல்லப்படுகிறது.

இக் கோயிலின் சிகரம் மணி யுடையது. சிகரத்தின் தலைப்பில் மகாபத்மம், பட்டிகா என்ற பத்ம இதழ்களும், அவற்றிற்கு மேல் அழகு வாய்ந்த கல் ஸ்தூபியும் இருக்கின்றன.

கருப்பக்கிருகத்தின் வெளிச் சுவர்களிலுள்ள மூன்று புரைகளிலும் தேவகோட்டங்களில் விக்கிரகங்கள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். இவைகளில் தெற்கேயுள்ள கோட்டத்தில் **ஞான தக்ஷிணாமூர்த்தி** உருவம் மாத்திரமே தற்காலம் எஞ்சி நிற்பது. கருப்பக்கிருகத்தில் புதிய சிலையொன்றை வைத்துப் பூசை செய்து வருகிறார்கள். பழைய உடைந்த சிலை இப்பொழுது முக மண்டபத்திலிருக்கும் நின்ற கோலத்திலமைந்த விக்கிரகமாகும். இவ்வுருவம், $3\frac{1}{2}$ அடி உயரமும், $1\frac{1}{2}$ அடி குறுக்களவும் அரையடி கனமுமுள்ளது; நான்கு கைகள் உடையது மேற் கைகளில் சக்தியும் அக்கமாலையும் இருக்கின்றன. கீழ் வலக் கை அபயஹஸ்தமும் இடக் கை தொங்கும் நிலையுமுடையன. மார்பில் இரண்டு அக்க மாலைகளைக் குறுக்காக அணிந்துள்ளார்; கரண்ட மகுடமும் தரித்துள்ளார். இது மிகப் பழைய சிலை''.—கலைமகள் xiii. pp. *205-211;*

J. O. R. xi-iii—iv. *315-20.*

**Ins. *100, 101* of *1892.*

என்னும் தொண்டைமான் நாடு என்பதாம். அவன் மகனான பராந்தகன், ஆதித்தன் இறந்த அச் சிற்றூரிலுள்ள கோதண்ட ராமேசுவரமாகிய ஆதித்தேச்சுவரர் கோயிலை அச்சோழன் நினைவாக அமைத்துள்ளான். அது அவ்வேந்தனை அடக்கஞ் செய்த **பள்ளிப்படை** எனத் திருமால்புரம்[11] கல்வெட்டால் தெரிகிறது. அரசர்களும் அரசர் குடும்பத்தினரும் அடங்கிய இடத்தில் அவர்களை நினைவு கூர்தற்கென எடுக்கும் கோயில் **பள்ளிப்படை** என்ற பெயருடையதென்பது சோழபுரம் கல்வெட்டாலும் தெரிகிறது.

## முதற் பராந்தக சோழன்

ஆதித்த சோழனது திருமகனான முதற் பராந்தகன் கி. பி. 907 முதல் 953 வரை சுமார் 46 ஆண்டுகள் அரசாண்டான்; சேரன் மகளான கோக்கிழான் அடிகள் முதலாகப் பன்னிரு தேவியரைப் பெற்றிருந்தான். பிள்ளைகள் : இராசாதித்தன், கண்டராதித்தன், அரிகுலகேசரி, உத்தமசீலி, அரிஞ்சயன் என ஐவராவர். பெண் மக்கள் வீரமாதேவி, அநுபமா என்பவர்கள். வீரமாதேவி, கோவிந்த வல்லரையன் என்னும் இராஷ்டிரகூட அரசனையும், அநுபமா கொடும்பாளூர் அரையனையும் மணந்திருந்தனர். இராசாதித்தன் தாய் கோக்கிழான் அடிகள்; அரிஞ்சயன் தாய் சேரன் மகளாவாள்; அரிகுலகேசரி என்னும் இளவரசன் கொடும்பாளூர் அரசன் மகளான பூதி ஆதித்த பிடாரி என்பவளை மணந்திருந்தான். இத்தகைய திருமண உறவு

11 Epi : Ind : VII p. 193; Ins. No. 286 of 1907.

களால் சேர அரசனும் கொடும்பாளூர் வேளிரும் பராந்தகனுக்கு உறு துணைவராய் இருந்தனர்; இவருடன் கங்க அரசனான இரண்டாம் பிருதிவீ பதியும் உற்ற நண்பனாய் இருந்தான்.

**முதற் பராந்தகன்** சிறந்த சிவபக்தன். இவனைச் "சிவனது பாத தாமரையில் உறையும் வண்டு" என்று திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகின்றது. ஆதித்த சோழன் கட்டாதுவிட்ட பல கோயில்கள் இவன் காலத்தில் முற்றுப்பெற்றன. வீரநாராயணபுரம் போன்ற பல கிராமங்களை வேதம் வல்லார்க்கு முற்றூட்டாக அளித்தனன். உத்திர மேரூர் அவையிற் பல சீர்திருத்தங்களைச் செய்தான். இன்னும், ஹேமகர்ப்பம், துலாபாரம் செய்து புகழ் பெற்றவன். இவனும் தில்லை நடராசர் சிற்றம்பலத்தைக் கனக சபையாக ஆக்கப் பொன் ஓடு வேய்ந்தான்;[12] அரிய பல நிபந்தங்களை (Endowments) ஏற்படுத்தியும் வழிபட்டான். இவன் கட்டிய கோயில்கள், திருவாவடுதுறைக் கோயில்[13] காட்டுமன்னார்குடிக் கடுத்த உடையார் கோயில்,

---

*12* "கோதிலாத் தேறன் குளிக்குந் திருமன்றங்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்"

—விக்கிரம சோழனுலா, கண்ணி *16*

*13* Ins. *143* of *1925*. திருவாவடுதுறைக் கோயிலைக் கட்டுவித்தவன் பராந்தகனது சேனதிபதியாகிய திருக்கற்றளிப்பிச்சன் ஆவான். இத் தொண்டிற்கு முதற் பராந்தகன் *500* கழஞ்சு பொன் அளித்தான். பிச்சனது உருவச்சிலை இக் கோயில் உள் மண்டபத்தின் தூணிலுள்ளது. Ins. *132* of *1925*.

முசிரித் தாலுகா சீனிவாசநல்லூர்க் குரங்கநாதர் கோயில்[14], தில்லைக் கடுத்த எறும்பூர்க் கடம்பவ னேசுவரர் கோயில்[15], முதலியனவாம். இவன் வீரநாராயணன் ஏரி என்னும் வீராணத்தேரியை அமைத்தான்.

பராந்தகனின் முதல் மகனுன, இராசாதித்தன் தென்னார்க்காடு சில்லா திருநாவலூர்த் திருக்

---

14 Jonrnal of the India Society ot Oriental Art II. i. p. 3 **குரங்கநாதர் கோயில்** *அளவில் சிறிதேயாயினும், பழைய சோழர் காலத்துக் கோயில்களின் இலக்கணத்திற்கியைய விமானப் பகுதியுள்ள கருப்பக் கிருகமும், அதற்கு முன் நான்கு கற்றூண்கள் நிறுத்திய அந்தராள மண்டபமும் இவ்விரண்டின் மத்தியில் மூடப்பெற்ற வழி நடையுள்ள அர்த்தமண்டபமும் பொருந்தியதாகும். இவைகளின் நீளம் ஐம்பது அடி. விமானக்கோயில் ஐம்பது அடி உயரம். கருப்பக்கிருகம் 12 அடி உள்ள சதுரமானது. வெளிச்சுவர் 25 அடி சதுரம். அந்தராள மண்டபம் 25 அடி நீளம், 20 அடி அகலம், 16 அடி உயரம்.*

*இக்கோயில் தென்னிந்தியக் கோயில்களின் வளர்ச்சியில் பல்லவரது கைதேர்ந்த சிற்பக் கோயில்களுக்கும் சோழர் கோவில்கட்கும் இடையே, ஒரு சிறப்பியலைப் பெற்றதென்ன லாம் இதற்கு முன்னதான கோயில்களை ஒத்து நோக்குமிடத்து இக்கோயிலின் அகலப் போக்குச் சிற்ப நுட்பங்கள் மிகுந்ததில் லாமையும், சுவரின் பாகங்களில் வெளியிடை மிகுந்து இருப் பதும் நோக்கற்பாலன. சிற்பங்கள் சிலவேயாயினும் வனப் புற்றவையாகும். மற்றொன்று, இதன் பிற்காலக் கோயில் களில் பெரிதும் காணப்படும் பூதகணங்களின் தலை வரிசை களில், கோயிலின் கீழ் வரியில் நசுக்குண்டு வெளிக்கிளம்பு வனபோல் சித்திரித்திருப்பது இதுவே முதலாவதெனச் சொல்லலாம். சிவ மூர்த்தங்கள் பல, கோயிற் சுவர்ப்புரை களில் உயிரளவினவாக இலங்குகின்றன. அவற்றுள் தென் முகப் பரமாசிரியனது தொகுதி உருவங்களே மிக்க அருமை யானவை. இவ்வேலைத் திறனுக்கு மாமல்லபுரத்துச் சிறந்த சிற்பங்களே அடிப்படையெனவும் கூறலாகும்.*

15 Epi: Rep. 1914 p. 94.

கோயிலில் இராசாதித்தேச்சரம்'[11] எனத் தன் பெயரால் கற்றளி ஒன்று அமைத்தான். இவ்வூரே சுந்தரமூர்த்திகள் வளர்ந்த ஊர். இவன் காட்டுமன்ஞர்குடியில் அனந்தேச்சுரர்[17] கோயிலையும் கட்டினன். இராசாதித்தன் கி. பி. 949-இல் தக்கோலப் போரில் கங்க அரசனுன இரண்டாம் பூதுகனுல் கொல்லப்பட்டான்.

## கண்டராதித்தன்

பராந்தனுடைய இரண்டாம் மகனுன **கண்டராதித்தன்**, கி. பி. 949-இல் இராசகேசரி எனப் பட்டம் பெற்று அரியணை ஏறிக் கி. பி. 957 வரை அரசாண்டான். இவன் மழவரையன் மகளார் செம்பியன் மாதேவியார் என்பவரை மணந்து, மதுராந்தகன் உத்தமசோழன் என்பவனைப் பெற்றுன். கண்டராதித்தனுக்கு வீரநாராயணி என்ெருரு தேவியும் இருந்தனள். இவன் காலத்தில் சிவன் கோயில் கட்டும் வழக்கம் பெருகிற்று. இக் கண்டராதித்தன் சிறந்த சிவபத்தனுகவும் சிவனடியாராகவும் விளங்கினுன். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாம் திருமுறையில் சிதம்பரத்தைப் புகழ்ந்து திருவிசைப்பா அருளிச்செய்த நாயன்மார் ஒன்பதின்மருள் இவ்வரசர் பெருமானும் ஒருவன் ஆவன். கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள திருமழபாடி என்னும் தலத்திற்கு மேற்கே ஒருமைல் தூரத்திலுள்ள கண்டாரதித்தச் சதுர்வேதி மங்கலம் என்ற நகரம் இவன் அமைத்ததே

16. Ins. *335* of *1902*. 17 Epi. Rep. *1921*. ii. *27*,

யாகும். தென்னார்க்காட்டுத் திருக்கோவலூர் தாலுக்காவிலுள்ள கண்டராதித்தம் என்ற கண்டராச்சிபுரமும் இவன் பெயரால் ஏற்பட்டதாகும். கல்வெட்டுகளில் இவன் தன் சைவ வாழ்க்கையைப் பெரிதும் போற்றிச் "சிவஞானக் கண்டராதித்தர்" என வழங்கப் பெற்றான்.

## உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார்

கண்டராதித்தனது மாதேவியார் உடைய பிராட்டியார் **செம்பியன் மாதேவியார்**, தம் கணவன் போலவே சைவத்தில் ஈடுபட்டு, இறை பணியே தமது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த[18] சிறந்த சைவப் பெண்மணியாவர். தம் பத்தி விளங்க இவர் எடுப்பித்த கற்றளிகளும் அவற்றிற்கு அமைத்த நிபந்தங்களும் மிகப் பல வாகும். பல கோயில்களுக்கு ஆடை, அணிகள், வெள்ளிப் பாத்திரங்கள் அளித்ததல்லாமல் விருத்தாசலத்து அபிடேக மண்டபம், கோபுரம், திருச்சுற்று மாளிகைகள், பரிவாராலயங்கள் யாவும் இவ்வம்மையாரால் கட்டப்பெற்றவை. இவை யன்றி மிகப் பல நிபந்தங்களையும் செய்துள்ளார். மற்றும், திருவாரூரில் திரு அரனெறிக் கோயிலும் இவராற் கட்டப்பெற்றதே. திருமணஞ்சேரிக் கோயிலில் இவரால் பல நிபந்தங்களும் ஏற்பட்

18 Epi: Rep: 1914. p. 21; 1926. ii. 22; Ins: 159 458, 459 of 1908; 28 of 1807; 570 of 1904. ஞானசம்பந்தம் அறிவுரைப் பூம்பொழில் மலர் Oct. 1949.

டிருந்தன. இவர் முதல் இராசராசன் ஆட்சியிலும் உயிரோடு இருந்தவர், தம் கணவன், மகன், மருமகளார் பலர், சுந்தரசோழன் ஆகிய பலராலும் பாராட்டப் பெற்றவர். இவ் வம்மையாரது நீண்ட சைவ வாழ்க்கையே, பின் தோன்றிய சோழ மன்னர்கள் பெருங்கோயில்களைக் கட்டுவதற்கு ஊக்கம் அளித்ததெனக் கருதவும் இடமுண்டு. இவர் தம் மகன் **உத்தம சோழன்** ஆட்சியில்,[19] எடுப்பித்த கோயில்கள் திருநல்லம் என்று தேவாரத்தில் சிறப்பிக்கப்படும் கோனேரிராசபுரம், திருமணஞ்சேரி, தென் குரங்காடுதுறை[19a] ஆகிய தேவாரப் பதிகம் பெற்ற கோயில்களேயாம். இவைகளேயன்றித் திருத்துருத்தி (குற்ாலம்), திருக்கோடிகா, திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) முதலிய கோயில்களில் திருப்பணிகள் நடந்தன. திருவையாறு, திருவோத்தூர், தலைச்செங்காடு, திருப்புறம்பியம், திருவெண்காடு, திருக்குடித்திட்டை, திருமங்கலம், திருத்தவத்துறை, பந்தணைநல்லூர், திருவேள்விக்குடி, திருமுல்லைவாயில் முதலிய கோயில்களில் இவர் பலவித தானங்கள் செய்ததாகவும் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

சிவபத்திச் செல்வம் வாய்ந்த மாதேவடிகளாரான செம்பியன் மாதேவியார் தஞ்சை சில்லாவில்

---

19. S. I. III :— iii ; Ins. 146, 147, 151 ; Ins. 450 of 1908.

19a. 356-70 of 1907. தென் குரங்காடு துறை என்பது காவிரியின் தென்கரையிலுள்ள ஆடுதுறை இரயில் நிலையமாகும்; திருவிடைமருதூருக்குக் கிழக்கே $2\frac{1}{2}$ மைலிலுள்ளது. சுக்கிரீவன் பூசித்த தலமாகும். இத்திருத்தலம் சம்பந்தர், அப்பர் சுவாமிகளுடைய பதிகங்கள் பெற்றது.

கோனேரிராசபுரம் என இக்காலத்தில் வழங்கப் பெறும் திருநல்லம் என்னும் ஊரிலுள்ள சிவாலயத் தைத் தம் கணவர் கண்டராதித்தர் பெயரால் 'கண்டராதித்தம்' எனக் கருங்கற்றளியாகப் புதுப் பித்ததுடன், அக்கோயிலில் தம் கணவர் கண்ட ராதித்தர் இறைவனைத் திருவடி தொழுகின்றாராக அவர்க்கு ஒருபடிமமும் அமைத்துள்ளார். அவரது படிமம் கோனேரிராசபுரம் திருக்கோயில் விமானத் தின் தென்புறச் சுவரில் அமைந்துள்ளது. அப்படி மத்தின்கீழ் வரையப் பெற்றுள்ள "ஸ்வஸ்திஸ்ரீ கண்டராதித்ததேவர் தேவியார் மாதேவடிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார், தம்முடைய திருமக னார் ஸ்ரீமதுராந்தகதேவரான ஸ்ரீ உத்தம சோழர் திருராஜ்யஞ் செய்தருளா நிற்கத் தம்முடையார் கண்டராதித்ததேவர் திருநாமத்தால் திருநல்ல முடையாருக்குத் திருக்கற்றளி எழுந்தருளுவித்து இத்திருக் கற்றளியிலே திருநல்லமுடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளுவித்தகண்ட ராதித்ததேவர் இவர்" எனவரும் கல்வெட்டு, இத் திருப்பணியினைத் தெளிவாகக் குறித்தல் காண லாம்.

செம்பியன் மாதேவியார் ஆணையின்படி இத் திருக்கோயிலைச் சிறந்த கற்றளியாக எடுப்பித்த வன் ஆவத்துருடையான் சாத்தன் குணபத்தன் அரசரண சேகரனான இராசகேசரி மூவேந்த வேளான் ஆவன்.[1]

---

1. பிற்காலச் சோழர் சரித்திரம்—பகுதி I பக்கம்—93 (தி. வை. சதாசிவ பண்டாரத்தார்.)

இம் மாதேவியார் தம் பெயரால் நாகபட்டினத்திற்குத் தென்மேற்கே சுமார் எட்டு மைலில் செம்பியன் மாதேவி என்ற ஊரும் திருக்கோயிலும் அமைந்துள்ளன. அவ்வூரிலுள்ள கோயில் கயிலாசநாதர் கோயில் என்ற பெயருடையது. இக்கோயிலில் மாதேவியாரின் திருவுருவப் படிமத்தை நிறுவி, கங்கைகொண்ட சோழனான இராசேந்திரன் அதன் ஆராதனைக்குப் பல நிபந்தங்களையும் அளித்தான். மாதேவியாரால் கி. பி. 1001-இல் புதுப்பிக்கப்பட்ட மற்றொரு கோயில் தென் ஆர்க்காடு சில்லா, திருவக்கரை சந்திர மௌளீசுவரராலயமாகும்.

காவிரியின் வடகரையிலுள்ள அறுபத்து மூன்று சிவத்தலங்களில் வடகுரங்காடுதுறையும் ஒன்றாகும்; அது அய்யம்பேட்டை இரயில் நிலையத்திற்கு வடபுறம் மூன்றுமைல் தூரத்திலும், திருவையாற்றுக் குடந்தைப் பாதையில் ஏழு மைலிலுமுள்ள சிற்றூர். முன் கோபுரம் ஐந்து அடுக்குத் தோற்றமும், உள் நுழைந்ததும், வடபுறம் 32 கல்தூண்களை உடைய வசந்த மண்டபமும், சிறிது தூரத்தில் அம்பிகையின் சந்நிதியும், அதற்கடுத்துத் தனிப் பிராகாரம் அமைந்த இறைவன் கோயிலும் உள்ளன. அதன் உள் நுழைந்ததும் 24 கல்தூண்கள் நிறுத்திய மண்டபத்தின் வடபால், நடராசப் பெருமானுக்கு மூலத்தானம் சிறப்பாக இத்தலத்தில் ஏற்பட்டிருப்பது காணலாம். அந்தராள மண்டபம் ஆறு தூண்களாலும், மகாமண்டபம் 12 தூண்களாலுமானவை. சுற்றுத் தனிக் கோயில்கள் விநாயகருக்கும், சண்டேசுவரருக்கும் உள்ளன. சுவாமி பெயர் அழகுச் சடைமுடி நாதர், குலை

வணங்கீசர், வாலிநாதர், ஆபத்சகாயர், தயானீசு வரசுவாமி என்பன; அம்மையார் அழகுச் சடை முடி அம்மை.

சுவாமியின் பெயருக்கு ஏற்ப, இக்கோயில் கொண்டருளிய ஈசனுக்குப் பல வரலாறுண்டு. பத்தி சிறந்த செட்டிப் பெண்ணின் தாகத்தைத் தீர்க்க இறைவன், அங்குள்ள தென்னையால் குலை வணங்கி இளநீர் கொடுப்பித்துதவியதும், இதற்குச் சான்ருக இரு தென்னைகள் இத்தலமரங்களாக இருப்பதும் காணலாகும் இச் செட்டிப் பெண்ணின் உருவச் சிலை கோயிலில் இன்றும் உள்ளது. வாலி பூசித்ததால் வாலிநாதர் என்றும், சிட்டுக் குருவிக்கு அருள் சுரந்தமையால் சிட்டுலிங்க நாதர் என்றும் பல பொருள்படத் தயானீச்சுவரரென்றும் அழைக்கப் பெறுகிருர். இவ் வரலாற்றுக்கேற்ப சுவாமி சந்நிதி விமானத்திலும் இந்த ஐதீகங்கள் சாந்தாகாரமாக உருவகப்படுத்தியிருப்பது காண லாகும்.

கோயில் மிகப் பழமையானது. ஏழாம் நூற்ருண்டில் சைவ சமயாசாரியரான திருஞான சம்பந்தர் இறைவனைத் தரிசித்துத் தேவாரம் பாடியருளிய* திருத்தலமுமாகும்.

செம்பியன் மாதேவியாரால் இக் கோயில் பெரிதும் புதுப்பிக்கப்பட்டது மின்றி அவ் வம்மையார் இக் கோயிலுக்கு நிலதானம் விட்ட செய்தியும் இக் கோயில் கல்வெட்டுக்களால் தெரிகின்றது. இக் கோயில் சுவரில் பொறிக்கப்பட்ட பதினைந்து கல் வெட்டுக்களைக் கல்வெட்டு இலாகா ஆராய்ந்துள்

ளது. சமீப காலத்தில், 1907-இல், தஞ்சையை ஆண்ட மகாராட்டிர வமிசத்தில் இராணிமாது ஸ்ரீ ஜிஜாம்பா பாய் சாகேப் அவர்களால் இக் கோயில் பழுதுபார்த்து, குடமுழுக்குச் செய்யப் பெற்றதென்றும் தெரிகின்றது.

## திருவடகுரங்காடுதுறைத் தேவாரம்

### திருஞான சம்பந்தர்

**பண் — சாதாரி**

*திருச்சிற்றம்பலம்*

*கொங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடிமுல்லை*
*வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே விரவியெங்கும்*
*ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை*
*ஊங்குநீர்ச் சடைமுடி அடிகளா ரிடமென விரும்பினரே. (1)*

*நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடொல்க*
*வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்*
*ஏலமோ டிலையில வங்கமே யிஞ்சியே மஞ்சளுந்தி*
*ஆலியா வரும்புனல் வடகரை யடைகுரங் காடுதுறையே. (3)*

*தாழிளங் காவிரி வடகரை யடைகுரங் காடுதுறைப்*
*போழிள மதிபொதி புரிதரு சடைமுடிப் புண்ணியனைக்*
*காழியான் அருமறை **ஞானசம் பந்தன்** கருதுபாடல்*
*கோழையா அழைப்பினுங் கூடுவார் நீடுவா*
*னுலகினூடே. (11)*

*திருச்சிற்றம்பலம்*

---

20. Epi; Rep: *1908* p. *33;* Ins. *336-70;* S. I. I. III Ins. *144.*

பிற்காலச் சோழர் மரபில், செம்பியன் மாதேவி யார் ஓர் அருட்பெருஞ் செல்வராவர்; இறை பணியே தமது திருத்தொண்டாகக் கொண்டவர்; நீண்ட காலம் வாழ்ந்த பெருந்தகையார். அவர்களது திருத்தொண்டு, தமது மாமனுர் பராந்தகன் கி. பி. 907 காலம் முதல், தன் பேரன் முதலாம் இராசராசன் கி. பி. 985 வரையில் வந்துள் ளது. அக்காலம் முழுதும் தம் தூய வாழ்க்கை யானும், இறைபணியாலும் மிக்க செல்வாக்குப் பெற்றிருத்தல் வேண்டும். இந்த அம்மையார் ஆயுளிலேயே, பராந்தகன் I, (மாமனுர்), கண்டா ராதித்தர் (கணவனுர்), அரிஞ்சயன் (மைத்துனர்), சுந்தர சோழன் என்ற பராந்தகன் II, (மைத்துனர் மகன்), உத்தமசோழன் என்ற மதுராந்தகன் (மகன்), ஆதித்தன் (மைத்துனர் பேரன்), இராச ராசன் I (மைத்துனர் பேரன்) என்ற அரசர்கள் ஆண்டனர். இவர்களோடு மற்ற அரசர்களின் தேவிமார்களும், சிவத்தொண்டில் ஈடுபடுவதற்கு இவர்களே காரணமாவர்.

சமயச் சரித்திரத்திலும், பண்டைச் சோழர் சரித்திரத்திலும், **செம்பியன் மாதேவியார்**, பாண்டி யன் நெடுமாறன் தேவியாகிய சோழர் பெருஞ் செல்வி, **மங்கையர்க்கரசியார்**, இருவரும் தமிழ் உல கம் என்றும் போற்றுதற் குரியராவர்.

## அரிஞ்சயன்

அரிஞ்சயன், கண்டராதித்தன் தம்பியாவன். கண்டராதித்தன் மகன் **மதுராந்தகன்** குழந்தையாக

இவன் தன் தமையனுக்குப்பின் **பரகேசரி** எனப் பட்டம் பெற்றான். அரிஞ்சயன் ஒரே ஒரு யாண்டு (கி. பி. 956-957) அரசனாக இருந்து, தொண்டை நாட்டைக் கைப்பற்றும் முயற்சியில், மேல் பாடிக்கு அருகில் உள்ள ஆற்றூர் என்னும் இடத்தில் இறந்தான் எனத் தெரிகிறது. அந்த இடத்தில், முதல் இராசராசன், இறந்துபட்ட தன் முன்னோனுக்கு அரிஞ்சயேச்சுரம் (அரிஞ்சிகையீச்சுரம்) என்ற **பள்ளிப்படைக்** கோயில் கட்டியதாகக் கல்வெட்டொன்று* கூறுகிறது.

## இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழன்

சுந்தர சோழன், அரிஞ்சயன் மகனாவான். இரண்டாம் பராந்தகன் என்ற புகழ்ப் பெயருடன் கி. பி. 956 முதல் 969 வரை சோழர் பேரரசைத் தாங்கினான். இவன் தன் தந்தை, பெரிய தாதை இவர்களைப் பின்பற்றித் தொண்டை மண்டலத்தைக் கைப்படுத்த முயன்றான். அவன் காலத்தில் முழுத் தொண்டைநாடும் சோழர் ஆட்சிக்கு மீண்டும் ஆட்பட்டதென்று விளங்குகின்றது. இவனுக்கு இரு தேவியர்கள். வானவன் தேவியாருக்கு ஆதித்த கரிகாலன் (கி. பி. 957-969), இராசராசன் (கி. பி. 985-1013), குந்தவை என்னும் மக்கள் மூவர் இருந்தனர். மற்றொரு தேவியார், சேரன் மாதேவியாவர். இவர் பெயரால் அமைந்த ஊரே

---

*Ins. 587 of 1920. S. I. I. III. No. 17.

Ins. வட ஆர்க்காடு மாவட்டம் திருவல்லம் என்னும் ஊருக்கு ஆறு கல் தொலைவிலுள்ளது.

இன்று சேரமாதேவி என வழங்குகிறது. இவனும் இவன் பட்டத்தரசி வானவன் மாதேவியாரும் சிவ பத்தர்கள். இவன் தனது வாழ்க்கையிலேயே முடி துறந்து, இறுதி நாட்களைக் காஞ்சியில் தனக்கென் றிருந்த பொன்மாளிகை எனப்பட்ட அரண்மனை யில் கழித்து இறைவனடியினை எய்திஞன்.** இவன் இறந்தபோது இவனது தேவி மலையமான் மகளார் வானவன் மாதேவியார் உடன்கட்டை ஏறிஞரெனத் திருவாலங்காட்டுச் சாசனத்துக் காண்க. இவ்விருவர் படிமங்களையும், இவர் தம் மகளார் குந்தவையார் தஞ்சை இராசராசேச்சரத் தில் எழுந்தருளுவித்து நிபந்தங்கள் கொடுத்துள் ளதைக் கல்வெட்டுக்களில் [21] காணலாகும்.

"பழையாறை நகர்ச்
சுந்தரச்சோழரை யாவரொப் பார்களித் தொன்னிலத்தே"

என்ற பழந்தமிழ்ச் செய்யுள் இச்சோழனைப் புகழ்ந் திருப்பது காண்க. இவனது ஆட்சியின் ஐந்தாம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று திரு வியலூர் சிவயோகநாதசுவாமி கோயிலில் உள் ளது. இக்கோயிலின் உட்கோபுரமும், திருச்சுற்று லயமும் இராசேந்திர சோழன் [22-I] காலத்துக் கட்டப்பட்டன என்பது மற்றொரு கல்வெட்டால் [23]

---

**அதனுல் "பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்" எனப் பெயர் பெற்ருன். S. I. I. III. p. 288.

21. Ins. 287 of 1917; 47 of 1918; S. I. I. II. i. pp. 69-70.

22. Ins. 314-55 of 1908.

23. Epi. Rep. 1904 p. 36.

தெரிகிறது. ஆகவே, இக்கோயிலானது சுந்தர சோழனால் ஆரம்பிக்கப்பெற்று, நாளடைவில் பிற சோழர்களால் பெரிதாக அமைக்கப்பட்டதென்பதும் புலனாகும். இம்மாதிரியாகவே, கோயில்கள் நாளடைவில் வளர்ச்சிபெற்றமை கல்வெட்டாராய்ச்சியால் அறியலாம்.

சோழமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலம் என்ற வேம்பற்றூர் இப்போது **திருவியலூர்** என்ற பெயருடன் கும்பகோணத்துக்குக் கிழக்கே நான்குமைல் தூரத்திலுள்ளது. இது காவிரியின் வடபாலுள்ள 63 சிவத் தலங்களில்[24] ஒன்றாகும். சுவாமி பெயர், சிவயோகநாதர், அம்பிகை சௌந்தரநாயகி; இவ்வூரில் சடா தீர்த்தம முதலிய எட்டுத் தீர்த்தங்களுள்ளன; கோயில், புராதன சோழர் காலத்து; ஏழாம் நூற்றாண்டில் சமயகுரவர் திருஞான சம்பந்தமூர்த்திகள் தேவாரம் பாடிய திருத்தலமுமாகும்.* இக்கோயிலுக்குச் செம்பியன் மாதேவியார்,[25] ஆபரணங்கள் கொடுத்துள்ளனர். உத்தம சோழன், ஆதித்த கரிகாலன், இராசராசன் I, இராசேந்திரன் I, இராசாதிராசன் I, மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் இக்கோயிலுக்கு விட்ட நிபந்தங்களும் பலவாம். இக் கோயிற் சுவர்களிலுள்ள 94 கல்வெட்டுக்கள் ஆராயப்பெற்றுள்ளன. அவற்றுள், முதல் இராசராச சோழன் இக்கோயிலில் துலாபார தானமும், அவன் தேவி தந்திசக்தி

---

24. உமாபதி சிவாசாரியாரருளிய **திருப்பதிக்கோவை**யிற் காண்க.

25. Epi. Rep. *1908;* Ins. *28* of *1907.*

# திருவியலூர்த் தேவாரம்*

## திருஞானசம்பந்தர்

### பண்—நட்டபாட்டை

திருச்சிற்றம்பலம்

குரவம்கமழ் நறுமென்குழல் அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன் உரிவையுடல் அணிவோன்
அரவும்அலை புனலும்இள மதியும்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே. (1)

செம்மென்சடை யவைதாழ்வுற மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி யெனநின்றிசை பகர்வாரவ ரிடமாம்
உம்மென்றெழும் அருவித்திரள் வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல் விரிநீர்விய லூரே. (3)

விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதோர் புகலித்தகு தமிழ்ஞான **சம்பந்தன்**
துளங்கில்தமிழ் பரவித்தொழும் அடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணும் உடையாரே. (11)

திருச்சிற்றம்பலம்

இப்போது இக்கோயில் தஞ்சை அரண்மனை தேவத் தானத்தாரின் ஆளுகைக்குட்பட்டது.

வடமொழி திருவியலூர்ப் புராணம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த இடம் ஆதியில் வில்வக் காடாக இருந்தமையால் வில்வ வனமென்ற பெயரை யுடைய தெனவும், **புராதனன்** என்ற அசுரன், இங்குக் கோயில் கொண் டிருக்கும் இறைவன் சந்நிதியில் இறந்து பதவி பெற்றமை யால் புராதன புரமென்றும் கூறுவர். சிவயோகர் ஒருவருக்கு முத்தி அளித்ததால் இறைவனுக்குச் **சிவயோக நாதர்** எனவும் பெயர் வழங்கும்.

மற்றும், சித்தாந்த சாத்திரம், திருவுந்தியார் அருளிய வரும் திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனருக்குக் குருவுமாகிய ஆளுடைய தேவநாய னர் அவதரிக்கப் பெற்றும்; மகாராட்டிர மன்னர் காலத்து,

விடங்கியார் ஹேமகர்ப்ப தானமும் செய்த செய்தி[26] ஒரு கல்வெட்டில் காணப்படுகின்றது. இக் கோயிலை எடுப்பித்த அனந்தசிவன் என்ற சிற்பி, இறைவனைப் புட்பம், பழங்களுடன் இலிங்க பூசை செய்கிற பாவனையும் தெற்கு வெளிப்பிராகாரச் சுவரில் உள்ளது.[27] முன்னது சமீபத்தில் திருப் பணி செய்யும்போது, அறியாமையால் செதுக்கப் பெற்றமை வருந்தக் தக்கதாகும்.

இரண்டாம் பராந்தகனுக்குப் பின்பு, அவன் மகன் ஆதித்தகரிகாலன் பட்டம் பெற்று ஆண் டிலன்; தன் தந்தைக்கு உதவியாக இருந்து தன்

---

ஆரிய திராவிட வித்துவ சிகாமணிகள் நிறையப்பெற்று, அவர் களுக்கு இக் கிராமத்தை சாஜி மன்னர் தம் பெயரால், **சாஜி ராஜாபுரம்** எனப் பெயரிட்டுத் தானமாக விடப்பட்டதும், அப் புலவர்களின் சிறந்த ஸ்ரீதர வெங்கடேசாச்சார் என்ற சைவப் பெரியார் வசித்து வந்ததும், அவர் தமது தனயன் சிரார்த்த தினத்தில் பட்டினிப் பிணியால் வருந்துமொரு புலையனுக்கு அன்னமிட்டது தவறன்று எனக் காட்டிய பெருமையுடையதும் இத் தலமாகும்.

இக் கோயில் 1933-ல் தேவகோட்டை அ. ராம. அ. லெ. அருணசலஞ் செட்டியாரவர்களால் மிகுந்த பொருள் செலவு செய்து திருப்பணி செய்து புதுப்பிக்கப்பட்டுள்ளது. அம்பிகை சந்நிதியும் தேவகோட்டை கரு. மெ. கதிரேசஞ் செட்டியா ரவர்களால் திருப்பணி செய்விக்கப்பட்டது.

26. Ins. 42 of 1907 இராசராசன் தன் எடை பொன் தானமும்; தேவியார் பொன்னால் செய்த பசுவின் வயிற்றி னுட் புகுந்து, அப் பசுவினைத் தானமும் செய்தனர்.

27. Ins. 50 of 1907.

இப் பழமையான சிற்பமொன்று முதலாம் இராசராச னது உண்மைத் தோற்றத்தைக் காட்டக் கூடியதென் பதைச் சரித்திர ஆசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியார வர்கள் கூறுவர்—Colas. I. p. 199 n.

பெயரால் பல கல்வெட்டுக்கள் வெளிவரக் காரண மாக இருந்தும், இவன் தந்தையின் காலத்திலேயே, அரசியல் அதிகாரிகள் சிலர் (கி.பி. 969-985) சூழ்ச் சியால் கொல்லப்பட்டானெனவும் தெரிகிறது. இவனே தில்லையில் தேவாரத் திருப்பதிகங்களை நம்பியாண்டார் நம்பியின் பேருதவியினால் அவற் றினை மீண்டும் சைவ உலகினுக்கு உதவினான் என் பது சிலர் கருத்து. இச்செய்தியினை முதல் இராசராசன் தேவாரம் கண்ட பகுதியில் விரிவாகக் காண்க.

ஆதித்த கரிகாலன் கொல்லப்படவே, குடிகள் அவன் தம்பியான அருண்மொழித் தேவனையே (பின்னர் முதல் இராசராசன்) பட்டம் ஏற்குமாறு தூண்டினர். அருண்மொழி அதற்கு இணங்க வில்லை. தன் சிற்றப்பனான மதுராந்தகனுக்கு நாடாள விருப்பம் இருந்ததை அறிந்து அவனையே அரசனாக்கினான். அருண்மொழி, அவனுக்குப்பின் அரசனாவான் என்ற ஒப்பந்தப்படி அவனுக்கு அடங்கிய இளவரசனாகத் தான் இருந்து நாட் டைக் கவனித்துவந்தான்.

## உத்தம சோழன் மதுராந்தகன்

கண்டராதித்தனான மதுராந்தகன் இவ்வித மாக இரண்டாம் பராந்தகனுக்குப் பின்பு பரகேசரி என்ற பட்டத்துடன் கி.பி. 969-இல் அரசு ஏற்றுப் பதினாறு ஆண்டுகள் கி.பி. 985 வரை அரசு செலுத் தினான். இவன் காலத்துக் கல்வெட்டுக்களும், செப் பேடுகளும் ஒரு தொகுதியன. இவனுக்கு மக்கள் எத்துணையர் எனத் தெரியவில்லை. ஆயினும்

மதுராந்தகன் கண்டராதித்தன் என்பவன் ஒருவன் பெயர் மட்டும் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. அவன், முதல் இராசராசன் ஆட்சியில் கோயில்களை மேற்பார்த்து வந்தானென்றும் தெரிகிறது.

இவன் காலத்து, இவன் தாய் செம்பியன் மாதேவியார் ஆடுதுறையில்[1] ஆபத்சகாயர் கோயிலையும், முற்கூறிய திருவாரூர்[2] அரனெறி திருக்கோயிலையும் எடுப்பித்தாரெனவும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

சோழர் நாணயங்களில், மதுராந்தகன் காலத்ததான பொற்காசு ஒன்றே மிகப் பழமையானதாகக் கருதப்படுகிறது. அதன் இருபுறங்களிலும் ஒருபடித்தாகவே நடுவில் ஒரு புலி உட்கார்ந்து கொண்டு வலப்புறமுள்ள மீனை நோக்குகிறது. நாணயத்தைச் சுற்றிலும் உத்தம சோழன் பெயர் கிரந்த எழுத்துக்களில் குறிக்கப்பட்டுள்ளதென்று நாணய ஆராய்ச்சியாளரான எலியட்[3] கூறுகிறார்.

இதுகாறும் கூறப்பட்ட மன்னர் அனைவரும் சுருங்கிய கால எல்லைக்குள் இருந்து மறைந்தனர். இவர்கள் காலத்தில் தொண்டைமண்டலம் மீட்கப்பட்டது. இவர்களுக்குப் பின்பு சோழர் பேரரசை விளக்கியும், விரிவாக்கியும் நிலைபெறச் செய்தவன் முதலாம் இராசராசனேயாவன.

---

1. Ins. 35 of 1907.

2. Epi. Rep. 1904-5 II. Para 21.

3. Coins of South India. Eliot. p. 132. No. 151. புலி சோழர்களது கொடி யெனவும், மீன் பாண்டியன தென்றும் அறிக.





# III

## முதலாம் இராசராசனும், தஞ்சை இராசராசேச்சரமும்

இராசராசன், கி.பி. 985 முதல் 1014 வரை இருபத்தொன்பது ஆண்டுகள் மிக்க கீர்த்தியுடன் சோழர் பேரரசைத் தாங்கினான். தன் பாட்டன் பராந்தகனைப் போலத் தில்லைச் சிற்றம்பலத்திற்கு நிபந்தங்கள் பல இயற்றி வழிபட்டமையின் தில்லை வாழந்தணர் இவனது ஆட்சியின் பத்தொன்பதாவது ஆண்டில் "**இராசராசன்,**" "**சிவபாத சேகரன்**" என்னும் பட்டங்களை இவனுக்குக் கொடுத்தார்களெனக் கல்வெட்டறிஞர் வெங்கய்யா கூறுகின்றார். **அருண்மொழி வர்மன்** என்பது இவனது இயற்பெயர். இராசராசன் என்பது சிவ நண்பனும், செல்வத்திற் சிறந்தோனுமாகிய குபேரனுக்குரிய பெயர்களுள் ஒன்று. இத்தகைய அருமையான பெயர்கள் கிடைத்த பின்னர்த் தனது வெற்றியும் புகழும் எங்கும் நிலவிட, நாடு முழுதும் அமைதியாக இருந்தமையின் தன் எண்ணத்தைக் கடவுள் திருப்பணியில் செலுத்தி, தனது புதுப்பெயரால் **இராசராசேச்சுரம்** எனக் கோயில் எடுக்கும் எண்ணம் இயற்கையாக உண்டாகியது. சோழ வேந்தர்கள் தமிழ் நாட்டில் எடுப்பித்த கோயில்களுள் தலைசிறந்து விளங்குவது முதலாம் இராசராச சோழன் தஞ்சையிலே அமைத்த **பெரிய கோயில்*** ஆகும்.

---

* "The Tamil races were perhaps the greatest teample builders in the world;......*the great pagoda at Tanjore......by far the grandest temple in India*"......" "Architecture"--*Encyclopaedia Brittanica* 9th edition II. p. 396.

# தஞ்சை இராசராசேச்சரம்

இராசராசனது பத்தொன்பதாவது ஆண்டாகிய கி.பி. 1003-இல், இக்கோயில் கட்ட ஆரம்பித்திருத்தல் வேண்டும். இவன் மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயனை வென்றதற்காகப் பொற்பூக்கள் பல இவ்வாலயத்துப் பரமசுவாமிக்குக் கொடுத்தான் என்பதை,

> *"ஸத்யாச்ரயனை எறிந்து எழுந்தருளி வந்த ஸ்ரீபாத புஷ்பமாக அட்டித் திருவடி தொழுதன திருப்பொற்பூ"*

என்ற சாசனப்பகுதி தெரிவிக்கிறது. அவ்வெற்றி, இவனது 22-ஆம் ஆண்டில் ஏற்பட்டதாகும். அவ்வாண்டினில் பொற்பூவால் இறைவனை அர்ச்சிப்பானுயின் அதற்கு முன்னரே இவ்விமான வேலை ஒருவாறு முடிந்திருத்தல் வேண்டும். இவன்யாண்டு 23 முதல் 27 வரையில் பொற் சின்னங்களும், பொன்னுபரணங்களும் கொடுத்ததாகச் சாசனம் கூறுகின்றது. இதனுல் இருபத்து மூன்ரும் ஆண்டில் இக் கோயில் திருப்பணி பெரும்பாலும் முடிந்தும்,

> *"யாண்டு இருபத்தைஞ்சாவது நாள் இருநூற்றெழுபத்தைஞ்சினுல் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ ராஜராஜீச்வரமுடையார் ஸ்ரீ விமானத்துச் செம்பின் ஸ்தூபித்தறியில் வைக்கக் கொடுத்த செப்புக்குடம் ஒன்று"*

என்னும் சாசனப் பகுதியால், ஸ்தூபிக்குச் செப்புக்குடம் கொடுத்துத் திருப்பணி முடிவுற்றுக் கும்பாபிஷேகம் நடந்தும் இருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.

*"யாண்டு இருபத்தாருவது நாள் இருபதினல் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ விமானக் கல்லில் வெட்டுக."*

எனச் சாசனம் வெட்டுதற்கு இவன் கட்டளை இட்டிருப்பதால் இவனது பத்தொன்பதாவது (கி. பி. 1003)யாண்டில் தொடங்கி, இருபத்தைந்தில் அதாவது கி.பி. 1009-இல் இத்திருப்பணி முடிவுற்றதென்னலாம்.

*"பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக் கற்றளி ஸ்ரீ ராஜராஜீச்வரம்."*

எனச் சாசனத்தில் காணப்படுதலின் இப்பெரிய கோயிலுக்குப் பெயர் **ராஜராஜீச்வரம்** என்பதும், இது ஒரு கற்கோயில் என்பதும் இக்கோயில் எடுத்துள்ள இடம் பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் என்பதும் விளங்கும். "பாண்டிய குலாசனி" என்பது இராசராசனின் விருதுப் பெயர்களில் ஒன்ருகும். இதற்கு 'பாண்டிய குலத்திற்கு இடியேற்றை ஒப்பவன்' என்பது பொருள்.

தஞ்சை, 'இராசராசேச்சரம்,' இப்போது சிவகங்கை சிறு கோட்டையின் தென்பாதியிலிருப்பதைக் காணலாம். அதனை அக்கோட்டையின் அகழைக்கடந்து, கோட்டைச் சுவரில் உள்ள வளைவுக்குள் நுழைந்து, சிறிது தூரத்தில் எதிர்ப்படும் அழகிய கோபுரத்தைக் கடந்து, மற்றும் சிறிது தூரத்திலுள்ள இராசராசன் கட்டிய மற்ருெரு அகன்ற கோபுரத்தைக் கடந்து அடையலாம். உள் நுழைந்ததும், கருங்கல், செங்கல்கள் பரப்பப் பெற்ற சுமார் 800 அடி நீளமும் 400 அடி அகலமு

முள்ள ஒரு பரந்த பேரவை போன்ற வெளிமுன் அமைந்த மேடையில், நந்தியெம் பெருமானும் அதனைப் பாதுகாக்கக் கட்டிய நாயக்கர் மண்டபமும் உள்ளன. எதிரில், இறைவன் கோயில் விமானமும், அடுத்து அம்மையாரின் திருக்கோயிலும் காணலாகும், உட்கோயிலானது இறைவன் சந்நிதியான கருப்பக்கிருகம். அதனைச் சுற்றியுள்ள பிரதக்கண மண்டபமுள்ள அர்த்த மண்டபம், இருபக்கமும் தூண்களும் வெளிவாசலுமுள்ள மகா மண்டபம், தியாகேசர் சந்நிதி உள்ள தாபன மண்டபம், கோயில் எடுபிடிகள் வைத்துள்ளதும் வேலைக்காரர்கள் இருக்கையுமான நர்த்தன மண்டபம், வாத்யமண்டபம் என்ற ஆறு பகுதிகளையுடையது. கோயிலிலுள்ள ஏழு வாயில்களிலும், 18 அடி உயரமும் 8 அடி அகலமுமுள்ள ஏழு இவ்விரண்டு துவாரபாலகர்கள் காப்புச்செய்யும் சிற்பங்களிருக்கின்றன. அவற்றுள், சுப்பிரமணிய சுவாமி கோயிலின் முன்னுள்ளவை மாசற்ற கருங்கல்லால் மிக்க வனப்புடன் அமைந்துள்ளன. இக்கோயில் பிற்காலத்தில் ஏற்பட்ட தொன்றாகும்.

இப் பேராலயத்திற்கு மூன்று திருவாயில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒன்று, முதற்கோபுர வாயிலாகிய, "கேரளாந்தகன்" (சேரர்களுக்கு யமன்) என்பது. மற்றது, இரண்டாவது கோபுரமுள்ள "இராசராசன் திருவாசல்" என்ற பெயருடையது. மூன்றாவது, கோயில் உள்வாயிலாகிய "திருவணுக்கன் திருவாசல்" ஆகும். இறைவன் சந்நிதியை அணுக இவ்விமானத்தின் தெற்கிலும் வடக்கிலும் வாயில்கள் உள்ளன. ஒவ்வொன்றும் படிகளை உடையது. கம்பீரமான தோற்றமுள்ள துவார

பாலகர் இவ் வாயில்களில் காவல் செய்கின்றனர். விமானத்தின் தெற்கு வாசலுக்கு "விக்கிரமன் திருவாசல்"[28] எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இவ் வாயிலின் கீழ்ப் பாகத்தில் மகா லட்சுமி வடிவமும் சரசுவதியின் வடிவமும் வனப் புறத் திகழ்கின்றன. திருவணுக்கன் திருவாயிலே இருபுறமும் அமைந்த படிகளாலேயே (**Transverse steps**) முன் நாளில் சந்நிதியை எய்துவதாக இருந் தது. இப்படிகளே கோயில் எடுப்பித்தபோது உடன் உண்டானவை. இக் காரணங்கொண்டும், நிலப் பரப்புக்கு மேல் உயர்ந்த மேடையில் நிறுவப் பெற்ற தன்மையினாலும் இக் கோயில் **மாடக் கோயில்** என்பதற்கேற்ற இலக்கணம் பெற்றது என்பர். அணுக்கன் திருவாயிலுக்கு எதிரே இப்போதுள்ள நேரான படிகள், பிற்காலத்தில் சரபோஜி மன்னனால் கட்டப்பட்டிருக்கலாம். கோயி லின் வெளிச்சுற்று நீட்டளவு 793 அடி; குறுக் களவு 393 அடி.

கோயிலின் கருப்பக்கிருகத்திற்கு மேலே உள்ள அழகிய விமானம் சதுர வடிவமானதும், பதின் மூன்று கோபுரமாடிகள் கொண்டதுமாகும். உச்சியில் சதுரவடிவமுள்ள பிரமரந்திரத் தளக் கல்லின்மேல் கலசமும், அதன்மேல் அழகிய ஸ்தூபி ஒன்றும் அமைக்கப்பெற்றுள்ளன. இச் சிறந்த விமானம், "தக்ஷிண மேரு" என்றும்

---

28 Ins. 414 of 1924. விக்கிரம சோழன் என்ற பெயர் உத்தமசோழனுக்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று என்பது அம்மன்னனது ஆட்சியில், குவளால முடையான் அம்பலவன் பழுவூர் நக்கனை விக்கிரம சோழமாராயன்' என ஓர் அரசிய லதிகாரியிருத்தலால் புலனும் என்பர் தி. வை. சதாசிவ பண் டாரத்தார்.

'உத்தம விமானம்' என்றும் சொல்லப்படுகிறது. இது 216 அடி உயரமுடையது. இதன் ஸ்தூபிக் குடம் செம்பினால் செய்யப்பட்டு, மேலே பொன் தகடு போர்த்ததாகும். செப்புக்குடம் 3083 பலம் நிறை உடையது. அதன்மேல் போர்த்துள்ள பொன்தகடு $2926\frac{1}{2}$ கழஞ்சு நிறை உள்ளது என்றும் கூறப்படுகிறது விமான உச்சியில் போடப்பட்ட பிரமரந்திர தளம் ஒரே கருங்கல்; அது $25\frac{1}{2}$ அடி சதுரம். நிறை 80 டன் என்பர் இதனைத் தஞ்சைக்கு நான்கு மைலுக்கு அப்பாலுள்ள **சாரப் பள்ளம்** என்ற கிராமத்திலிருந்து சாரம் போட்டு இச் சிகரத்தில் ஏற்றினார்களென்பது, அந்தக் கிராமத்துப் பெயரால் ஊகிக்கப்படுகிறது. சதுரக் கல்லின் நான்கு மூலைகளிலும் முறையே இரண்டு நந்திகள் உள்ளன. அவை தனித்தனி $6\frac{1}{2}$ அடி நீளமும் $5\frac{1}{2}$ அடி அகலமும் உள்ளன. அவற்றைச் சற்றே ஒத்த நந்தி ஒன்று, உமாபரமேசுவரியின் (பெரிய நாயகி) சந்நிதிக்கு எதிரே திருச்சுற்று மாளிகையில் இருப்பதைக் காணலாம்.

பிரமரந்திரத் தளக் கல்லைப்பற்றிப் பல கதைகளுண்டு. விமான வேலை நடத்தும்போது சிற்பிகளுக்கு உணவு, நீர் முதலியன கொடுத்து உதவிய ஒரு முதியாளிடம் தங்கள் நன்றியைக் காட்டுதற்கு அறிகுறியாக, அச் சிற்பிகள் அவள் விருப்பியபடி அவள் வீட்டிலிருந்த கல் ஒன்றை விமானத்தில் சிகரத்தின் நடுவில் அமைத்துக் கோயிலைக் கட்டி நிறைவேற்றினார்கள் என்றும், "யாம் கிழவி அளித்த நிழலில் உவந்திருக்கின்றோம்." எனத் திருவாய் மலர்ந்தருளச் சோழன் உண்மை யறியாது மயங்கிப் பின்னர் அறிந்தனன் என்றும் வழங்கும்

வரலாறு ஒன்று உண்டு. இது பிரகதீசுவர மகாத்மியத்தில் கண்டது. இதனை மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்,

*"அம்மையார் நிழலில்யா மமர்வோமென் றருள்செய்த,*
*செம்மையார் வீற்றிருக்குந் திருத்தஞ்சை"*
*—திருநாட்டுப் படலம் 54.*

என மாயூரத்தல புராணத்திலும், 'தஞ்சைப் பெருவுடையாருலா" ஆசிரியர், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர்,

*"நதியுடைக்கோன் முன்னோர் நரைமுதியா ணீழல்*
*வதிகின்றோ மென்ன வந்தான் வந்தான்"—*

என உலாவிலும் கூறியுள்ளார்கள். இதனை மீண்டும் ஆராயின், தஞ்சை நாட்டாண்மைக் கழகப் பனகால் கட்டடத்திற்கருகிலுள்ள அழகிக் குளம், அழகித் தோட்டம் என்ற இடங்கள், முதியாளாகிய அழகி என்பாளுக்குச் சோழ அரசனால் கொடுக்கப்பட்ட இடங்கள் என்றும், அவை சமீப காலம்வரை சர்க்கார் பைமாஷ் கணக்குகளிலும் அப் பெயர்களாலேயே வழங்கிவந்தன என்றும் தெரியவரும். வேறொன்று, ஓர் இடைச்சி இக் கோயில் விமானத்திற்கு உதவிய இக் கல்லின் நிமித்தமாக இராசராசன் அவள் பக்தியை வியந்து, அவள் ஊரில் ஒரு கோயிலைக் கட்டுவித்தான் எனவும், அவ்வூர் அப்போது "இராசராசேச்சரம்" என்று சொல்லப்பெற்று, பிற்காலத்தில் மருவி, **தாராசுரம்** என்று ஆயிற்று எனவும் கூறுவர். தாராசுரம் என்பது கும்பகோணத்துக் கருகில் ஒரு சிற்றூராக உள்ளது. இக் கோயில் வரலாறு பின்னர்க் குறிப்பிட்டிருப்பது காண்க.

## இராசராசனது சமயநோக்கம்

இராசராசனுடைய அளவு கடந்த சைவப் பற்றும், பரந்த சமயநோக்கமும் இப் பெரிய கோயில் விமானங்களிலும், மற்றும் பல பாகங்களி லும் மலிந்து கிடக்கும் சைவ வைணவ புராண சம்பந்தமான சிலைகள், சிற்பங்கள் ஆகியவற்ருல் அறிவுறுத்தப் பெறுகின்றன. திருக்கோயிலின் நாற்புறமும் உயர்ந்த மதில்களின் மேலிருந்து விழுந்து, பிறர் எடுத்துப் போனவைபோக, எஞ்சி நிற்கும் 343 நந்தி உருவங்களும் இதனையே வலி யுறுத்துவன. கோயில் விமானத்தின் தென்புற மதில் பக்கத்தில் சோழ வீரர்களுடைய உருவங் களும், பிள்ளையார், திருமால், பிச்சாடனர், சூல தேவர், தக்ஷிண மூர்த்தி, மார்க்கண்டேயர், நடரா சர் உருவத் திருமேனிகளும், மேல் பக்கத்தில் இலிங்கோற்பவரும், அர்த்தநாரீசுவரரும், வட பாகத்தில் கங்காதரர், கலியாணசுந்தரர் மகிஷா சூரமர்த்தனி என்பவர்களின் உருவங்களும் வனப் புடன் உள்ளன. மற்றும், திருச்சுற்று மாளிகை யின் தென்பாகம் தவிர மற்றப் பாகங்களிலும் இலிங்கங்கள், நாக கன்னிகையர், சமய குரவர் படி மங்கள் முதலியன பிரதிட்டித்தும், அஷ்டதிக்குப் பாலகர்களுக்குத் தனித்தனிச் சுற்ருலயங்கள் எடுப்பித்தும் இருப்பதும் காணலாகும்.

இராசராசன் சமயப்பற்றுடன் உணர்வு கலந்த கலா ரசிகன்; தில்லைத் தாண்டவ மூர்த்தியின் ஒப்பற்ற பக்தன்; இறைவனின் எழுவகை ஆடல் களில் ஈடுபட்டவன். ஆகவே இறைவனின் தாண



சிவனது நடனச் சிற்பங்கள் தஞ்சை இராசராசேச்சரம்

இந்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம்



சிவனது நடனச் சிற்பங்கள் தஞ்சை இராசராசேச்சரம்

இந்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம்

டவ 108 கரணங்களை இக் கோயில் மேல் தளத்தில் உட்பாகத்து அடி வரிசையில் அவைகளைச் சிற்ப மாகச் செய்ய ஏற்பாடு செய்தான். வேலையும் நடந்து வந்தது. ஆனால், எக்காரணம் பற்றியோ 81 சிற்பங்களைச் செய்து முடித்து 82-ஆவது ஆரம் பித்து முடிக்காமலே விட்டுவிடப்பட்டிருக்கிறது. இப்போது காணப்பெறும் 81-ஆவது இறைவனே சதுர் புஜங்களுடனும், மானுடவும், மழுவாடவும், யக்ஞோ பீதத்துடனும் ஆடும் தாண்டவம் கலா ரசிகரும், கண் பெற்ற பயனுடையோரும் பார்க்கத் தக்கவையாக உள்ளன.

மற்றும், கோயிலின் தெற்கு "விக்கிரமன் திரு வாயிலின்" கீழ்ப்பாகத்தில் பௌத்த உருவச் சிலை கள் சில காணப்படுகின்றன. இராசராசன் அனு மதியின் மேல் அவன் கடார தேசத்து[29] ஸ்ரீ விஜயத் தின் அரசனான மாறவிஜயோத்துங்க வர்மனால் (கி. பி. 1005) நாகையில் மூன்று மாடிகளுடன் எடுக்கப்பட்ட **சூடாமணி வர்ம விகாரம்** எனப்பட்ட

---

29 நாகப்பட்டினத்திலிருந்த இப்பெரும் பள்ளி புது வெளிக் கோபுரம் என்று வழங்கப்பட்டு, கி. பி. 1867 வரை தப்பியும், பிரெஞ்சு ஜெசூட் பாதிரிமார்களிடம் வந்து இடி பட்டதெனத் தெரிகின்றது. இப் பெரும் பள்ளிக்கு முதல் இராசராசன் விட்ட நிலதானங்கள் தவிர முதற் குலோத்துங்க னும் கடார அரசன் வேண்டுகோளுக்கிணங்கி இன்னும் சில கிராமங்கள் தானம் செய்தானென்று Leyden செப்பேடுகள் குறிக்கின்றன. இதைப் பற்றிய ஒரு பரம்பரைச் செய்தியும் உள்ளது. அது இப் பௌத்த விஹாரத்திலுள்ள புத்தர் சிலை யானது தங்கத்தால் செய்யப்பட்டதென்றும், அதனைத் திரு மங்கை ஆழ்வார் எடுத்துப்போய், ஸ்ரீரங்கம் கோயிலைப் புதுப் பித்தாரென்பது, பன்னிரண்டாம் நூற்றாண்டில் பௌத்த பள்ளிகள் இருந்த சிறப்பிற்கும், பொருளாதார நிலைக்கும் இவை ஒரு சான்றாகும்.

பௌத்த ராஜராஜப் பெரும் பள்ளிக்குப் பல நிலங்கள் தானம் செய்தமையும், சமணர்களுக்கும் பௌத்தர்களுக்கும் ஒரே விதமாகப் பல நிலங்களை இறையிலியாகத் தந்ததையும் இராசராசன் ஆட்சியில் வரையப் பெற்ற கல்வெட்டுக்களால் அறியப் படும் செய்திகளாகும். விமானத்தின் வடக்குப் பகுதியின் கீழ்ப்பாகத்தில், மற்றைய மூன்று உருவச் சிலைகளுடன், சிரசளவில் ஐரோப்பியனுடைய உருவமொன்றும் காணப்படுகின்றது. அதைக் குறித்துப் பல அபிப்பிராயங்கள் வழங்குகின்றன.

விமானத்தை அமைத்த சிற்பி, இச் சோழ தேசத்தை முன்னும் பின்னுமாக அரசாளும் வர்க்கத்தாரை மேற்காட்டிய உருவங்களால் குறிப்பிட்டிருக்கிறான் என்பர் சிலர். அன்றியும், 'பல கோயில்களை அமைத்த நாயக்கர் பரம்பரையில், பதினேழாவது நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த இரகுநாத நாயக்கர் அவையில் செல்வாக்கு மிக்குயர்ந்த டேனிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரின் தலைவனான ரோலண்ட் கிரேப் (Roeland Crape) என்பானது உருவம்' என்பர் வேறு சிலர். 'இச் சிலையானது பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவுக்கு வந்துபோன சிறப்புவாய்ந்த மார்க்கோபோலோ என்ற வெனீஸ் பிரயாணியின் உருவம்' என்பர் மற்றொரு சாரார். கோயில் கட்டிய காலத்தே மேனாட்டார், சோழ தேசத்தில் தோன்றி இருந்தனராக, அவர்களின் ஞாபகமாகக் குறிக்கப் பட்டிருப்பினும் இருக்கலாம். எப்படியாயினும் அதன் உண்மை சரியாகத் தெரிந்திலது.

# திருக்கோயில் பிரதிட்டை

இக் கோயில் பிரதிட்டையைப்பற்றி ஒரு வரலாறு உள்ளது. அது வருமாறு: கோயில் திருப்பணி முடிந்து, அருள் திருமேனியாகிய சிவலிங்கத்தினைக் கோயிலில் எழுந்தருளச் செய்து, ஆதிசைவரைக் கொண்டு மருந்துசாத்திப் பந்தனம் செய்வித்தபொழுது, ஆவுடையார் உருவம் பெரியதாக இருந்தமையின், மருந்து இளகிப் பந்தனமாகாமல் போயிற்று. அதுகண்டு இராசராசன் வருந்தி நிற்கையில், "கருவூர்த்தேவர் ஈண்டுவரின் நீ எண்ணிய எண்ணம் கைவரும்" என விண்ணிடை நின்றும் ஒரு நன்மொழி எழுந்தது. அதைக் கேட்ட அரசன் கவலை நீங்கி, "அப்பெரியார் யார்? அவரது வருகை எனக்கு எவ்வாறு கிடைக்கும்?" என அங்கிருந்தாரை உசாவியபோது, தம் உருமாறி அவ்விடத்தில் இருந்த போகநாதரென்னும் யோகியார், 'அரச! கவலற்க; கருவூர்த்தேவரை இங்கு வரவழைப்போம்' என்றுரைத்து ஓலை எழுதித் தம் தவ வன்மையால் அதனைக் காக்கையின் காலில் கட்டி விடுத்தனர். அவ்வோலையைக் கண்ணுற்ற கருவூர்த்தேவர், அக்கணமே பொதிகையினின்றும் புறப்பட்டுத் தஞ்சையை அடைந்து, போகநாதரது ஆணை பெற்றுக் கோயிலுள் புகுந்து, சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்துச் செவ்வனே நிறுத்தித் தம் வாயிற்றம்பலத்தை மருந்தாக உபயோகித்து இறுகப் பிடித்திட, பொன்னை உருக்கி வார்த்ததுபோலப் பந்தனமாயிற்று. அப்போது அரசனும் பிறரும 'அன்பர் தம் செயகையை யாரே அறிகுவர்!' என ஆச்சரியமெய்தி மகிழ்ந்தனர் என்பது.[24]

---

24 இவ் வரலாறு கருவூர்ப் புராணம், கருவூர்த் தேவர் கதிபெறு சருக்கத்துக் காணப்படுகிறது. இதன் உண்மை அறிதற்பாலது. ஆனல், இதற்குக் கல்வெட்டில் ஆதாரம் காணப்படவில்லை.

தஞ்சை இராசராசேச்சரத்தில் எழுந்தருளிய சுவாமியின் பெயர் '**இராஜராஜேச்சுவர முடையார்**' என அந்நாளில் இராசராசனுல் வழங்கப்பெற்றது. **கல்வெட்டுக்கள்** முழுதுமே அவ்வாறு கூறுகின்றன. இக் கோயில் விமானம் தட்சிணமேரு என முன்பு கூறப்பட்டது. இதில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனுக்குத் "தட்சிணமேருவிடங்கன்", "ஆடவல்லான்" எனவும் பெயர்கள் வழங்கின. அக்காலத்தில் சைவ சமய உணர்ச்சி, சிதம்பரம் கோயில்பற்றி எழுந்தமையாலும், தில்லை நடராசருக்கு ஆடவல்லான் என்பது ஒரு பெயராதலாலும், இப் பெருமானுக்கும் அப் பெயரிட்டனன் என்பர். சிவமூர்த்தங்கள் பல காணப்படினும் அம்மையின் பெயரெல்லாம் வெவ்வேருக இல்லாமல் **உமாபரமேசுவரி** என ஒன்ருகவே இருக்கின்றது. பிற்காலத்தில், இக் கோயில்கொண்ட இறைவனுக்குத் திருநாமம் **பெருவுடையார்** எனவும், இறைவிக்குப் **பெரியநாயகி** எனவும் வழங்கத் தொடங்கின. அவை, வடமொழியில் **பிரகதீச்சுவரர், பிருகந்நாயகி** எனவும் வழங்கும்.[31] பெருவுடையார் அருள் திருமேனியாகிய இலிங்கசொரூபமானது, நருமதை நதிதீரத்திலிருந்து இங்கு இராசராசனுல் கொணரப்பட்டது என்பர். அதற்கு அமைந்த மகாத்மிய ஆதாரமும், சைத்ர விழா

---

*31 சிற்றம்பலத்திற்குச் சிதம்பரம் என்றும் குடுமிநாதருக்குச் சிகாநாதர் என்றும், பெத்தாரண்ணன் என்னும் தெய்வப் பெயரை ஆபத் உத்தாரணன் என்றும், திருமறைக்காட்டை வேதாரணியம் என்றும், மயிலாடுதுறையை மயூரமென்றும், குரங்காடு துறையைக் கபிஸ்தலம் என்றும், தூய தென்மொழிப் பெயர்களெல்லாம் வடமொழிப் பெயராக மொழிபெயர்க்கப்பட்ட வழக்கு அறியற்பாலது.*

அஷ்டகொடியன்று, இராசராசன் தஞ்சை அறு பத்து நான்கு மனை வேளான் செட்டிமார்களை அழைப்பித்துச் சிறப்பிக்கும் சம்பிரதாயமும் குறிப்பிடற்பாலன.

இக் கோயிலில், பிற பல சிவமூர்த்தங்களே யல்லாமல், விஷ்ணு திருமேனியும், நம்பி ஆரூரர், நங்கை பரவையார், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்த அடிகள், சிறுத்தொண்டர், சண்டேசுவரர் முதலிய அடியார் திருமேனிகளும், இராசராசன், அவன் பட்டத்தரசி லோகமாதேவியார் படிமங்களும் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தன. அவற்றுள் சிலவே இப்பொழுது உள்ளன.

## கோயில் நிபந்தங்கள்

இராசராசன், இப் பெரிய கோயிலுக்கென்று ஏற்படுத்திய நிபந்தங்கள் (Endowments) மிகப் பலவாம். கோயிலுக்கு வேண்டிய அமைப்புக்களில் ஒன்றனையும் குறைவுபடாது செய்வதையே அவ் வேந்தன் தனது வாழ்வின் பயனாகக் கொண்டான்; தான் புரிந்த போர்களில் வென்று கொணர்ந்த பொருள்கள் யாவற்றையும் அக் கோயிலுக்கே அளித்தனன். பலவித அணிகலன்களும், பாத்திரங்களும், நெல் விளையும் கிராமங்களும், நாள் வழிபாட்டிற்கும் விழாக்களுக்கும் வேண்டிய அளவு பொன்னும் பொருளும், தந்து வந்ததோடு, தீபங்களுக்கு நாள்தோறும் விளக்கு ஒன்றினுக்கு உழக்கு விழுக்காடு நெய் அளப்பதற்கு, ஆடு, பசு எருமை என்ற மூவினமும் இடையர்கட்குக் கொடுத்து, என்றைக்கும், யாவும், தாராளமாகக் கிடைத்துவரும்படி அமைத்துத் திருப்பணியை நிலைபெறச் செய்தான்.

இக் கோயிலில் நாள்தோறும் சிறுகாலை, உச்சிப்போது, இரவு என்ற மூன்று காலத்துக்கும் பூசை நடைபெற்றது.

"ஸ்ரீ ராஜராஜீச்வரமுடையார் ஆடியருளும் திருமஞ்சன நீரிலும் தண்ணீர் மிதிலுமிட பெருஞ் சண்பக மொட்டுக்கும், ஏலவரிசிக்கும், இலாமச்சத்திற்கும்"

என்னும் சாசனப்பகுதியால், பெருஞ் சண்பக மொட்டு, ஏல அரிசி, இலாமச்சம் ஆகிய இவைகளை ஊறவைத்த நீரால் திருமஞ்சனம் ஆட்டினமை அறியலாம். பழைய அரிசியாற் சமைத்த போனகம், நெய்யமுது, தயிரமுது ஆகிய திருவமுதுகளும்; அடைக்காயமுதும், கறியமுதும், பருப்பமுதும் வெள்ளிலையமுதும், திருவிழாக் காலங்களில் பருப்பு, பழைய அரிசி, மிளகு, சீரகம், சர்க்கரை, கடுகு, நெய் என்ற இவற்றோடு செய்த அப்பக்காய்க்கறி யமுதும், பொரிக்கறி யமுதும், மிளகு, சீரகம், சர்க்கரை, கொள்ளு, வாழைப்பழம், புளி, தயிர், நெய், கடுகு இவை கொண்ட புளியங்கறி யமுதும் நிவேதிக்கப்பட்டன. அச்சமயத்தில் நாற்பத்தெண்மர் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய ஆரியமும் தமிழும் பாடுபவர் பாட, கனபாடிகள் சாமகானம் செய்திட, பக்க வாத்தியத்தோடு, வீணைகளுடன் காந்தர்விகள் இன்னிசை பாடி நடனம் செய்தனர். மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை முத்திரைச் சங்கம், உவச்சுப் பறை, சகடை முதலிய இயங்கள் முழங்கின. நெய் விளக்குகள் எண்ணிறந்தன எரிந்தன.

## சோழர் கால அணிகலன்கள்

இராசராசேச்சுவர முடையார்க்கு இராசராச சோழனால், வைரம், வைடூரியம், கோமேதகம்,

முத்து முதலிய நவரத்தினங்களாலாகிய ஆபரணங்களும்; பொன், வெள்ளியாலாகிய பாண்டங்களும் 'சிவபாத சேகரன்' என்றும், 'ராசராசன்' என்றும் செதுக்கிய காளங்களும், திருப்பள்ளித் தொங்கல், தவளச்சத்திரம், திருக்கொற்றக்குடை, ஈச்சோப்பிகை, வெண்சாமரக்கை, காளாஞ்சி முதலியவைகளும்; ஸ்ரீமுடி, வீரப்பட்டம், திருஉதரபந்தனம், திருவடிக்காறை, திருப்பட்டிகை, சப்தசரி, பஞ்சசரி, திருக்குதம்பை, தோடு, ராஜாவர்த்தம், திரள்மணிவடம், தாலிமணிவடம், ஸ்ரீ சந்தம் முதலிய பொன் ஆபரணங்களும்; வடுகவாளி, ஏகாவலி, முத்தின் சூடகம், திருக்கால்வடம் முதலிய முத்தாபரணங்களும், கண்டநாண், புல்லிகைக்கண்டநாண், பாசமாலை, மாணிக்கத்தின் தாலி, ஸ்ரீ பாகுவலயம், பதக்கம், ரத்ன வளையல், ரத்ன கடகம், ரத்ன மோதிரம், நவரத்ன மோதிரம், பிருஷ்டகண்டிகை முதலிய ரத்னபரணங்களும்; பொன்னாலும் வெள்ளியாலும் செய்த ஒட்டுவட்டில், கலசம், குடம், தட்டம், குறுமடல், கிடாரம் முதலிய பரிகலங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.[32]

---

*32* S.I.I. Vol II. ii. pp. *203-217;* also ins. *69* of *1888.* *சோழர்காலத்து அணிகலன்களின் அட்டவணையில் விரிவாகக் காணலாம். அணிகலன்களைக் கூறுமிடத்து அரக்கு, செப்பாணி, சரடுகளை நீக்கிப் பொன்னை நிறையெடுத்து, அவற்றில் நவமணிகள் பதிப்பிக்கப்பெற்றிருப்பின் அவை இவ்வளவு நிறையுடையன, இன்னின்ன தன்மையுடையன என்றுரைத்து, விலை இத்தனை காசு என்றும் கண்டிருப்பது வியக்கத் தக்கது. இரத்தினங்களைக் குறிக்குமிடத்து, பொறிவு, முறிவு, காகபிந்து, ரத்தபிந்து என்ற இவ்விதங்களிலெல்லாம் அவை குறைவுபட்டன என்றும் குறித்துள்ளமை காணலாம். ஒருவித அணிகலனுக்கு, "சோனகச்சிடுக்கின் கூடு" என்றிருத்தலால், சோனகன் என்ற பதம் அக்காலத்தில் கிரேக்கர்களையும் அரா*

## கோயில் ஊழிய அமைப்பு

கோயில் காரியம் பார்ப்பவரை **ஸ்ரீ காரியம் பார்ப்பவர்** எனவும், அவரைக் கண்காணிப்பவரை **ஸ்ரீ காரியக் கண்காணி நாயகம்** எனவும் அக்காலத்தில் அழைத்தனர். திருமுன்னர்த் தேவாரத் திருமுறைகளை விண்ணப்பஞ் செய்வதற்காக இசைத் தமிழில் வல்லார் நாற்பத்தெண்மர், உடுக்கை வாசிப்பான் ஒருவன், கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனுடன் ஐம்பதின்மர் இருந்தனர். இவர்களே அன்றி, கானபாடி ஆரியம் பாடுவாரும், தமிழிசை பாடுநரும் இருந்தனர். இராசராசன் பாடலிலும் ஆடலிலும் மிக்க ஆர்வமுடையவன். **இராச வித்தியாதரன்** என்ற பெயரும் அவனுக்குண்டு. இவ்வாலயத்துக்குரிய பணிகளைக் குறைவின்றிச் செய்யவும், நடனம் புரியவும், சோழநாட்டுப் பிறகோயில்களினின்றும் பதியிலார் நானூறு பேர்களைக் கொணர்ந்து இராசராசேச்சுவரத்தை அடுத்து வடபுறத்தினும் தென்புறத்தினும் இவர்கட்காகத் தனித்தனி மனைகள் கட்டிக் கொடுத்தும், ஒவ்வொருவருக்கும் நூறு கலம் நெல் விளையும் ஒவ்வொரு வேலி நிலமும் தந்தும், அவர்களைக் கோயிற் பணியிற் புகுத்தி ஆதரித்தான்.[33] அவர்களுள் ஆடல் பாடல்களில் தேர்ச்சியுள்ளார் பலர் இருந்தனர். அவர்களுக்குப் பாடங் கற்பித்தவர் **காந்தர்வர்** எனவும் அழைக்கப்பட்டனர். பின்னவர் எழுபத்

---

*பியர்களையுமே குறித்தலானும், 11-வது நூற்றாண்டிலேயே, யவனர், அராபியர் முதலிய அன்னியர் சோழ தேசத்திற்கு வந்தமையும் தெரிகின்றது.*

*33* S. I. I. II. pp. *259—309 இரசாராசனது 66-ஆவது சாசனம்.*

தைவராவர். மற்றும், கொட்டி மத்தளக்காரர், பக்க வாத்தியர், வீணை வாசிப்பவர், மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச் சங்கு முதலிய இசைக் கருவி முழக்குவோர் என்னும் வகையினர் பலர் இருந்தனர். உவச்சுப்பறை, சகடை, கரடிகை என்னும் பறை விசேடங்களுமிருந்தன. மற்றும், இக்கோயிலில் பண்டாரிகள் (பொக்கிஷதார்), கணக்கர், மெய்காப்பார், பரிசாரகம் செய்பவர், திருவிளக்கிடுவார், திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பவர் (மாலே கட்டுவோர்), வண்ணமிடுவார் (கோலமிடுவோர்), சோதிடர், தச்சர், தட்டார், கன்ஞர், குயவர், தய்யார் (தையற்காரர்), நாவிதர், வண்ஞர் முதலியோரும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களுக்குப் பரம்பரையாக வேலே கொடுக்கப்பட்டு வந்தது. இவர் யாவரும் சம்பளமாகப் பெற்றது நெல்லே.

சோழர் முன்னேஞகிய முசுகுந்தச் சக்கரவர்த்தி பிரதிட்டை செய்த,

> "ஆரூர்த்தியாகேசர் பதம் பணிந்து செங்கோலோச்சி
> யலகில் புகழ்பெறு ராசராச மன்னன்."

தஞ்சையில் கோயில் அமைப்பதற்கு முன்னர்த் திருவாரூர்த் தியாகேசரை நாள்தோறும் சென்று வழிபட்டு வந்ததனுல், தஞ்சைக் கோயிலே அமைத்த பொழுது திருவாரூர்க் கோயிலிலுள்ள ஏற்பாடுகளேயே கைக்கொண்டதாகத் தெரியவருகிறது [34]

34 இதன் உண்மை இப்போது காணப்படுவனவற்றுள், "திருவாரூர்க் கோயிலில் தியாகேசர் தாபிக்கப்பட்டிருப்பது போலத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் தியாகேசர்

இக் கோயில் வழிபாடு முறைகளைச் சைவ ஆகம பண்டிதர்களைக்கொண்டு நடத்தியதாகவும், அவர்கள் **சைவாசார்ய சர்வசிவ பண்டிதர்,**[35] ஈசான சிவ பண்டிதர் முதலானவர்களென்றும் தெரிகின்றன. இத்தலத்துக்குரிய ஆகமம் **மகுடாகமம்**[36] இத்தலத்திற்குரிய தீர்த்தம் சிவகங்கை. அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் கூறியுள்ள **தஞ்சைத் தளிக்**

---

தாபிக்கப்பட்டிருக்கிறார். திருவாரூர்த் தியாகராஜாவுக்கு விடங்கர் என்று பெயர் இருப்பதுபோலத் தஞ்சையிலும் விடங்கர் என்றே பெயர். திருவாரூரில் தியாகராஜாவுக்குரியது அஜபா' நடனம். தஞ்சையிலுமஃதே. திருவாரூர்க் கோயிலில் நடைபெறுவது போல் தஞ்சையிலும் வஸந்தோத்ஸவம் *18* நாள் நடைபெறுகின்றது. திருவாரூரில் தியாகராஜாவுக்குரிய சுத்த மத்தளம், எக்காளம் தஞ்சையிலும் உள. திருவாரூரில் தியாகராஜா எந்தெந்த தினங்களில் எவ்வாறு புறப்படுகின்றாரோ அவ்விதமே தஞ்சையிலும். திருவாரூரில் தியாகராஜாவுக்குப் பூஜை நடந்தபின் மூல லிங்கத்துக்குப் பூஜை. தஞ்சையிலும் அவ்விதம். திருவாரூரில் உற்சவத்தில் குறவஞ்சி நாடகம் நடைபெறும்; தஞ்சையிலும் குறவஞ்சி நாடகம் உற்சவகாலத்தில் நடைபெற்று வருகிறது. திருவாரூரில் சிலகாலமாகக் குறவஞ்சி நடைபெறுவது நழுவி இருப்பதாகத் தெரிகிறது. திருவாரூரில் சுவாமி புறப்படும்போது சுந்தரமூர்த்திகள் விக்கிரகத்தை முன்கொண்டுபோவது வழக்கம். ஆனால் இராசேந்திரன் காலத்தில் அந்தத் தானத்தில் தன் பிதாவாகிய இராசராசனது விக்கிரகத்தைக் கொண்டு போகும்படி ஏற்பாடு செய்தான். அஃது இன்னும் நடைபெறுகிறது.''—K. S. ஸ்ரீனிவாசப் பிள்ளையவர்கள், **தமிழ் வரலாறு** ii. *162*

*35* S. I. I. II. p. *109*. ஆரியதேசம், மத்ய தேசங்களிலிருந்து கொணரப்பட்ட சைவ ஆசார்யர் சர்வ சிவ பண்டிதருக்கும், அவர் சிஷ்யர், மாணாக்கர்களுக்குமாகக் "கோயிலில், ஆடவல்லானென்னும் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரங் கலநெல்லு ஆண்டாண்டுதோறும் பெறத் திருவாய் மொழிந்தருள" என்று இராசேந்திரன் நிபந்தம் ஏற்படுத்தியிருப்பது காண்க.

*36* Grantha M. S. No. 1526 of Tanjore, Saraswathi Mahal Library; Burnell's List No. 11428—an incomplete miscellany.

**குளம்*** இதுவே என்பர். இதன் நடுவே சிவலிங்கத் திருவுருவம் எழுந்தருளப் பெற்றுள்ளது. **தேரைத் தீர்த்தம்** எனப்பட்ட குளமொன்று இப்பொழுதுள்ள நடராசர் திருமண்டபத்திற் கடுத்து இருந்தது எனவும், அது இப்போது மூடப்பெற்று, ஒரு கிணற்றளவே அவ்விடத்தில் இருப்பதையும் சரபோஜி மன்னன் கல்வெட்டு[37] ஒன்று குறிக்கின்றது.

---

* ஸ்ரீலோகநாத ஈஸ்வரர் என்கிற சிவலிங்கசுவாமி சிவகங்கைக் கோட்டை, சிவகங்கைத் திருக்குளத்துக்குள் தென்புறத்துள்ள ஒரு மேடைமீதுள்ள சிவலிங்க சொரூபமாக அமைந்துள்ளது. இதுவே சமயாசாரியார் அப்பர் சுவாமிகள்* **"தஞ்சைத் தளிக்குளத்தார்"** என்று அழைத்த சிவபெருமானாக இருக்கலாம். அல்லது, அந்தக் காலத்திலிருந்தே இத்தலத்தில் ஒரு கற்கோயில் இருந்து, பின்பு அதனை இராசராசன் தன் பரந்த சைவப்பற்றிற்கு இலக்காக இப்போதிருக்கும் நிலையில் கட்டியிருக்கலாம். இன்னொரு விபரம், **விஸ்வ கர்ம பக்தோ பாக்கியானத்தில்** பொன் மணிபத்கர் சரித்திரத்தில் கூறியிருப்பது:—தஞ்சைப் பெரிய கோயிலை எடுப்பித்த இராசராச சோழனது கனவில் பெருவுடையார் "யாம் நீர் கட்டிய மறைவிலும், இடைச்சி நிழலிலும், பொன் மணித் தட்டார் இதயத்திலும் வசித்து வருகிறோம்" என்று சொல்லியருள; அரசன் அதன் பொருளை அறியாது தயங்கி, தஞ்சையில் வசித்த பொன் மணித்தட்டாரைக் கண்டு வினவ, அவர் அரசனைக் கோயிலின் வடபாரிசத்தில் ஸ்தூபிக்கு நேரே ஒரு குளம் வெட்டுவித்து அதற்கு மத்தியில் ஒரு சமாதி ஒன்றை நிருமிக்கச் செய்யவும், அதற்குள் அவர் அணுகி, தன் இருதய கமலத்தினின்று எழுந்தஜோதியின்மூலம் இறைவனைக் காட்டி, அதனுள் கலந்து மறைந்தார் என்றும், பின்னர் இராசராசன் இச் சமாதிப் பூஜை, நைவேத்தியம் அது முதல் நடத்த ஏற்பாடு செய்தானென்றும் கூறுகிறது.

*"அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்க ளூரார்"

—திருத்தாண்டகம், அப்பர்,

"குளமூன்றும் களமைந்தும் பாடி நான்கும்"—சம்பந்தர்.

37 Ins 419 of 1924.

இவ்வாலயத்துள்ள பெரிய நந்தி, ஒரே கல்லில் செதுக்கப்பெற்று, இறைவன் சந்நிதிக்கு எதிரே உயர்ந்ததோர் மண்டபத்திலுள்ளது. இந்தியாவிலுள்ள பெரிய நந்திகளுள் இஃது இரண்டாவதாகும்.[38] பன்னிரண்டடி உயரமும் பத்தொன்பதரை அடி நீளமும், எட்டேகால் அடி அகலமுமுடையது. இது கால அளவில் வளர்ந்துவர அதனைத் தடைப்படுத்த முதுகின் பின்புறத்தில் ஓர் ஆணி அறைந்ததாக ஒரு கதையும், அதன் வளர்ச்சிக்குக் காரணமாக அதன் உள்ளிருந்த தேரை ஒன்றை எடுப்பித்து அதனைத் தேரைத் தீர்த்தத்தில் சேர்ப்பித்ததாக ஒரு கதையும், இவற்றைப்போன்ற மற்ற வரலாறுகளுமுண்டு. இந் நந்தியானது திருச்சிராப்பள்ளி சில்லா பெரம்பலூருக்கு அணித்தான பச்சைமலையினின்றும் கொணரப்பட்டது என்பர். இந் நந்தி மண்டபத் தூண்களில், தஞ்சை நாயக்க அரசர்களின் சிற்ப உருவங்கள் செதுக்கப்பட்டிருப்பதால் இம்மண்டபம் அவர்களால் கட்டப்பட்டதாகும் எனக் கருதலாம்.

ஆலயத்திலுள்ள சிவ சொத்துக்களைக் கண்காணிக்கும் முக்கிய அதிகாரி சண்டேசுவரர் * அவர் பெயராலேயே கோயில்களின் வரவு செலவு கணக்குகள் எழுதுவதும், விலை கொள்வதும், விற்பதும் நடைபெற்று வந்தன. ஆதலால் முதல் பிராகாரத்தில் அவருக்கு மாத்திரமே இறைவன்

38 முதலாவது அநந்தபூர் சில்லா, இந்துப்பூர் தாலூகா லேபாக்ஷி, வீரபத்திர சுவாமி கோயிலிலுள்ளதாகும்.

* சண்டேசுவரர், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். அவரது பக்திக்கு மகிழ்ந்து சிவபெருமான் இச் சண்டீசப் பதத்தைக் கொடுத்தருளினரென்க. படம், வரலாறு காண்க.

சந்நிதியை அடுத்துக் கோயில் கட்டுவது முற்கால வழக்கம். அதற்கிணங்க இராசராசனும் பிராகாரத்தில் சண்டேசுவரருக்கு ஆலயம் கட்டுவித்து,



இராசராசேச்சரமும் சண்டேசுவரர் கோயிலும்

கோயிலைச் சார்ந்த யாவும் அவர் பெயரால் நடைபெற ஏற்பாடு செய்தான். இச் சந்நிதியையும், கோயிலின் கீழ்ப்பக்கமுள்ள இராசராசன் திருவாயில் கோபுரத்தையும், இராசராசன் தனது இருபத்தொன்பதாம் ஆட்சி ஆண்டில் முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரத்தையும் (The Maldives) வென்ற

தற்கு முன்பே கட்டியிருக்க வேண்டும். இராசராசேசுவரரது கோயிலை அடுத்து இச் சண்டேசுவரர் கோயில் மட்டுமே இம் முதற் பிராகாரத்தில் அந்த நாளில் கட்டப்பெற்றதாகும். மற்றைய சந்நிதிகள் அதற்கடுத்த பிராகாரங்களில் இருந்திருத்தல் கூடும். பிற்காலத்தில், பல காரணங்களால் கோயிற் பிராகாரங்கள் சிதைவுறவே அதனைக் கண்ணுற்ற தஞ்சை நாயக்க வமிச அரசனுன சேவப்ப நாயக்கன் திருக்கோயிலைச் சுற்றி அரண்களுடன் ஒரு சிறு கோட்டையையும், விசயராகவ நாயக்கன் நகரைச் சுற்றி மற்ெறுரு பெரிய கோட்டையும் கட்டித் தனது இராச்சிய தலைநகரைப் பண்படுத்தினுன். அச்சமயத்தில் சிதைவுற்ற பிராகாரங்களிலமைந் திருந்த பல திருச்சுற்ருலயங்களும், பிறவும், இம் முதற்பிராகாரத்துள் கொணர்ந்து கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

**உமாபரமேசுவரி** அம்மையாரின் கோயில், இவ் வாலயத்திற்கு வடபுறத்தில் உள்ள சிவகங்கைத் தோட்டத்தில் முன்னம் இருந்ததென்றும், பின்னர் ஒரு நாயக்கர் காலத்து இடிக்கப்பட்டு, மற்ெறுரு நாயக்கர் காலத்து இப்போதிருக்கும் தானத்தில் **உலகமுழுதுடையாள்** என்ற திருநாமத்துடன் அமைக்கப்பெற்றதென்றும்[39], இதன் "மூர்த்தியம்மன்" மகாமண்டபம் மல்லப்ப நாயக்கரால் கட்டப் பட்டதென்றும் தெரிகின்றன.

கோயிலின் வடமேற்குப் பிராகாரத்திலுள்ள **ஆறுமுகப்பெருமானின் கோயில்,** தென்னிந்தியசிற்ப

---

*39* Vide, S. I. I. I, Vol. II. pp. *247-8* also Ins. *62.*

வேலைகளுள் மிகச் சிறந்ததொன்றும். இக்கோயில் எழுப்பிய காலம் 12-13 ஆவது நூற்றாண்டெனவும், இதன் சிற்ப நுட்பங்களைக் கவனிக்குமிடத்து இவை ஏற்பட்டது நாயக்கர் காலத்து 17, 18-ஆவது நூற்றாண்டாகும் எனவும் கூறுவர்.[40] இக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் ஒன்றேனும் இதனைப்பற்றிக் கூறவில்லை. இக் கோயில் தஞ்சையில் ஆட்சிபுரிந்த நாயக்கர் காலத்ததாகவும் ஆகலாம். அக் காலத்தில் இக்கோயிலில் சிற்பங்களை அமைத்த சிற்பி ஒருவன், தான் தன் தொழிலில் ஆழ்ந்து வேலை செய்துகொண்டே தன் ஏவலாள் சிறுவனிடம் அடைக்காய்க்குக் கைநீட்ட, அவன் அங்கில்லாதிருக்கவும், அத் தருணத்தில் சிற்பியின் வேலையைக்காண வந்த அரசனது கையால் கொடுக்கப்பட்ட அடைக்காயைச் சுவைத்த அளவில் உண்மை தெரிந்து, தனது அறியாத பிழைக்குப் பரிகாரமாகத் தன் திறமை எல்லாம் விளங்க இக் கோயிலை நிருபணம் செய்தானென்ற ஒரு கதையும் உண்டு.[41] ஆறுமுகப் பெருமானின் அருள்திருமேனி மிக்க வனப்புடையது. மயிலும், ஆறுமுகக் கோலமும், திருவாசி உள்பட ஒரே சிலையில் அமைந்துள்ளன. அவரைப்பற்றி அருணகிரிநாதர், திருப்புகழில் மூன்று பாக்கள் பாடியுள்ளார். அவற்றைப் பின் இணைப்பில் காணலாம். இக்

---

40 18-வது நூற்றாண்டதென்பர் புதுச்சேரி ழூவோ டூப்ரை Vide Archaeologie d Sud L, Inde I. architecture. காண்க. இவ் வழகிய கோயிலின் நீளம், 125 அடி, அகலம் 35 அடி, சிகரத்தின் உயரம் 55 அடி.

41 இக் கர்ணபரம்பரை வரலாறு மதுரை நாயக்கர் வமிசத்துத் திருப்பணிகள் பெரும்பாலனவற்றிற்குச் சொல்வது வழக்கமாக உள்ளது.

கோயில், யானை, குதிரைகள் பூட்டப்பெற்ற இரதம் போன்று சிற்ப அமைப்பு பெற்றிருத்தலும் சிறப்பாகும்.

பரிவாராலயத்துப் பிள்ளையாராகிய சுற்றுக் கோயில் பிள்ளையார் மேலைச் சுற்ருலயத்து வீற்றிருப்பதால், இற்றை நாளில் காணப்படும் **கணபதி கோயில்**, தஞ்சை மகாராட்டிர மன்னனுகிய இரண்டாம் சரபோஜி கி.பி. 1803-ல் எடுத்தது என்பர். கோயில் தென்னண்டைச் சுற்ருலயத்தில் செதுக்கியுள்ள கல்வெட்டு[42] ஒன்ருல், சரபோஜி II, கணபதி கோயிலை எடுப்பித்தும், பழைய கணபதி திருவுருவத்தை எடுத்துப் புதியதொன்றைப் பிரதிட்டித்தும், தென்வெளித் திருமதிற் புரையிலுள்ள தக்ஷிணுமூர்த்தி சந்நிதிக்குப் படிகள் எடுப்பித்தும்; பெருவுடையாருக்கு வெள்ளியால் ரிஷபம், யானை, மான் முதலிய வாகனங்களும், பல ஆபரணங்களும் கொடுத்தும், கோயிலுக்குத் தளவரிசை போட்டும் பல திருப்பணிகள் செய்தனரென்று தெரிகிறது.

கோயிலின் உட்பிரகாரத்தில் வடகிழக்கில் காணப்படும் **நடராசப்பெருமானின்** சந்நிதியும் பிற்காலத்ததே. நாற்புறமும் திருமதில்களுக் கடுத்த திருச்சுற்று மாளிகைகள் இராசராசன் ஆணையின் படி கட்டப் பெற்றன. அவ் வரசர்பிரான், தன் சேனுதிபதியும், திருமந்திரவோலை நாயகனுமான கிருஷ்ணன் ராமனுன மும்முடிச்சோழ பிரம மாராயனைக் கொண்டு, மேற்புறத்தையும், தெற்கில் உள்ள பிரகாரத்தையும் கட்டினுனென்றும், மற்ற

42 Epi. Rep. *1925;* Ins. *420, 423* of *1924.* Ins. *30* of' *97.*

இரு புறங்களிலுமுள்ள திருச்சுற்றுலேகளேயும் அகன்ற உள் கோபுரத்தையும் அரசனே முற்று வித்தானென்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. மேற்கு, வடக்குத் திருச்சுற்றுலேகளிலுள்ள 228 இலிங்கங்களும் பிறவும் மகாராட்டிர மன்னர் காலத்துப் பிரதிட்டை செய்யப்பெற்றன என்பர். திக்குப் பாலகர் எண்மருக்கும் அவரவர்க்குரிய திசைகளில் சிறிய சந்நிதிகள் கட்டப்பட்டுள்ளன. இக்காலத்தில் அவற்றின்மீது கற் கலசங்களே காணப்படுகின்றன.. ஆனல் அவைகளுக்காகப் பொற்றகடு சுருக்கின செப்புக் குடங்கள் இராசராசனுடைய குருக்கள் ஈசான சிவபண்டிதரால் கொடுக்கப்பட்டன என்பது ஒரு சாசனத்தால் விளங்குகின்றது.

இக்கோயில் மேலேப் பிராகாரத்தில் வேம்பும், மந்தாரையும் நிற்கின்ற இடத்தில் கிழக்கு நோக்கிய **கருவூரார்** மேடை ஒன்று புராதனமாக இருந்து வந்தது. சற்றேறக்குறைய அறுபது ஆண்டுகட்கு முன்னர், 'கருவூரார் கோயில்' என அவ்விடத்தில் ஒரு சிறு கோயிலெடுத்து, அங்கே அவ்யோகியர் உருவச்சிலே அமைத்து, நாள்தோறும் பூசையும், வியாழன் தோறும் சிறப்புறும் பூசனேகளும் புரிந்து வழிபட்டு வருவதை யாவரும் காணலாம். இவரே இராசராசன் காலத்து இங்கே வந்து உதவிய சித்தர் பெருமாதைல் வேண்டும். இவரைப் பற்றிச் சித்தர் நூல்களில், இவர் பொற்கொல்லர் மரபினர் என்றும், போகருடன் பதினெண் சித்தர்களில் ஒருவரென்றும் இவர் பெருமையை விரிவாகக் காணலாம். ஆதலின், இக் கோயிலில் இப்



கருவூர்ச் சித்தரும் இராசராசனும்
[தஞ்சை சோழர் கால ஓவியம்]

பெரியார்க்குத் தனியிடம் உண்டாய தொடர்பு உணரற்பாலது. மற்றும், கருவூர்ப் புராணத்தில் கூறப்பெற்றவர் திருவிசைப்பாப் பதிகங்களின் ஆசிரியரான கருவூர்த் தேவரெனவும், அவர் "இராசராசேச்சரம்" "கங்கைகொண்ட சோழேச்சரம்" ஆகிய இவ்விரு பெரிய கோயில்களின் மீதும் திருவிசைப்பா இயற்றினமையின் இராசராசன் I, இராசேந்திரன் I காலத்து உடன் இருந்தவராகவோ, சற்று பிற்பட்டவராகவோ இருத்தல் வேண்டுமெனவும் கூறுவர். இவற்றின் உண்மை ஆராயற்பாலது. இவரது திருவுருவம் கருவூர் ஆனிலைத் திருக்கோயிலிலும் உள்ளது.

அக்காலத்தே, திருவிசைப்பா ஆசிரியர் இறைவன் கோயிலை 'இஞ்சிசூழ் தஞ்சை இராசராசேச்சரத்திவர்க்கே" எனக் குறித்திருப்பதால் இக்கோயில், நகரின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டுமென்றும் தோன்றுகிறது. கால இயல்பாலும், அரசியல் குழப்பத்தாலும், பிற்காலத்தில் நகரம் குன்றி இருகூருக்கப் பட்டதென்பதும் புலப்படும். இக் காலந்தொட்டே கோயிற் சிறப்புக்களில் மற்ற நகர வழக்கத்திற்கு மாருக, இறைவன் கோயிலைச் சுற்றிவராமல் நகரை வலம்வரும் ஏற்பாடு உண்டானதென்பதை அறியலாம்.

இத்தலத்திற்குப் **பிரகதீசுவர மகாத்மியம்,** ***சமீவன க்ஷேத்ர மகாத்மிய**மென்னும் வடமொழிப் புராணங்களும் மேற்கூறிய **திருவிசைப்பா** திருப்பதிகமும், **திருப்புகழில்** மூன்று பாக்களும், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய **'தஞ்சைப் பெருவுடையாருலா'** என்ற பிரபந்தமுமுள்ளன.

இராசராசன் இப்பெரிய கோயிலை எடுப்பித்த தன் பயனுகக் குடிகள் அரசன்பால் மிக்க அன்பு பாராட்டி, அச்சோழன் காலத்தில் வைகாசிப் பெரிய திருவிழாவில் **'இராசராசேச்சுவர நாடகம்'** என்னும் ஒரு நாடகத்தை இக்கோயிலில் நடத்தி வந்தனர். இவன் பேரன் இராசேந்திரன் II அரசாட்சியின் நான்காம் ஆண்டில், இந்நாடகம் ஆடுவோனுக்கு ஆண்டாண்டு தோறும் நூற்றிருபதின் கல நெல் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டதென

* ஆசிரியரின் தஞ்சைத் திருக்கோயில்கள் என்ற நூலிற் காண்க.

ஒரு கல்வெட்டு கூறுகின்றது. அக்காலத்தில் நடனங்களும் நாடகங்களும் அனேகமாய் ஆலயங்களிலுள்ள அரங்க மண்டபங்களிலேயே நடைபெற்றன. திருவிசைப்பா ஆசிரியர்,

*"மின்னெடும் புருவத் திளமயி லனையார் விலங்கல் செய்*
*நாடகசாலை, இன்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை"*

எனக் கூறுவதால், நகரில் பல ஆடரங்குகளும், நாடக சாலைகளும் இருந்தன என்னலாம். மற்றும் இசை நாடகங்களில் வல்ல நாடகமய்யன், சாக்கை, கனபாடி, காமரப் பேரரையன், வாத்தியமாராயன் முதலியோரும் இருந்தனரெனவும் தெரிகிறது. **இராசராசேச்சுவர நாடகம்** வெகுகாலமாக வழக்கிலில்லை. தஞ்சையில் பிற்காலத்து அரசாண்ட சரபோசி II மன்னர் கால முதல், அம்மன்னர் மீது கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய **'சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்'** என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு இக்கோயில் சைத்திர ஆண்டு விழாவில், அஷ்டகொடிச் சிறப்பன்று இக்குறவஞ்சி நாடகம் நடைபெற்று வந்தது.[43]

---

43 மகாராஜா சரபோஜி சரசுவதிமஹால் ஏட்டுப்பிரதி எண் வரிசை 599 : இந்நூல் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களது குறிப்புரையுடன் திருப்பனந்தாள் காசிமடம் ஆதீனத்தாரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இக் குறவஞ்சி, நாடகவகையுள் சேர்ந்தது. இஃது அஷ்டகொடி குறவஞ்சி என்றும், குறவஞ்சி நாட்டியம் என்றும் வழங்கும். குறத்தியின் இயல்பு, அவள் குறி கூறுதல், அவளைக் குறவன் தேடிவந்து காணுதல் முதலிய செய்திகள் இதன்கண் அமைந்திருத்தலின் **குறவஞ்சி** எனப் பெயர் பெற்றதுபோலும். இக் கூத்து எவ்விதம் நடத்தப்பட்டதென்பது இவண் கூறற்பாலது. குறவஞ்சிக் கூத்தில் வாயால் பாடுகிற

## இராசராசன் பிறந்த நாள் விழா

இராசராசனின் பிறப்பைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் அழகாகச் சிறப்பித்துள்ளன. சோழர் காலத்தில் மாதந்தோறும் உடையார் இராசராச

---

வர்களும், கருவியில் வாசிக்கிறவர்களும் கலந்துகொள்ளுகிறார்கள். நடன மாதர்கள் குறைந்தது நால்வர், குறவஞ்சிப் பாட்டுக்களைத் தக்க இராகங்களில் பாடுகிறவர்களது திறமைக்குத் தக்கபடி நடித்து மகிழ்விக்கின்றனர்.

> "பார்கொண்ட புகழினேங்கும் பதியெனும் தஞ்சைமேவும்
> தார்கொண்ட மார்ப னெங்கள் சரபோஜி மன்னன்மீது
> சீர்கொண்ட தமிழினுலே திகழ் குறவஞ்சி கூறப்
> பேர்கொண்ட பிரகதீசர் பெறுகணபதி காப்பாமே."

என்னும் கணபதிகாப்பும், மங்களமும் கூறியபின் கட்டியக்காரன்தோன்றி, சரபோஜி மன்னரின் வீரப்பிரதாபங்களைப்பற்றி உரத்தகுரலில் சொல்லி. அவ்வரசன் பவனி வருதலைக் கூறி, பின் நடைபெற இருக்கிற இக்கூத்து யாதொரு விக்கினமுமின்றி முடிவுறுமாறுகடவுளைப் பிரார்த்திக்கும்படி சபையோர்களைக் கேட்டுக்கொள்கிறான். பின்னர், தெருக்கூத்தில் நடைபெறுவதுபோல், ஒரு பெண், பிள்ளையார் வேடந்தரித்துக்கொண்டு சபைக்குவந்து முன்னும் பின்னுமாக அசைந்து சாதாரண ஒரு நர்த்தனம் புரிவாள். அப்போது கட்டியக்காரன் அந்தப் பிள்ளையாரை நோக்கி இக்கூத்து யாதொரு இடையூறுமின்றி நடைபெறும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்திப்பான். அதன் பிறகு இருவரும் மறைந்து விடுவர்.

பின்பு தலைவன் பவனி வருகையும்...தலைவி யொருத்தி (மோஹினி) அவனைக்கண்டு காமுறுதலும் நிகழும். பின்பு மோஹினியின் தோழிகள் (சகிகள்) திடீரெனச் சபைக்கெதிரில் தோன்றி நுட்பமும், திறமையும், அழகும், இனிமையும் பொருந்திய நடனம் புரிவார்கள். அதன்பின் மோஹினியும் சபைமுன் தோன்றி தான் சரபோஜி மன்னன்மீது கொண்டுள்ள விரக வேதனையால், மன்மதனையும், சந்திரன், தென்றல், குயில் முதலியவற்றையும் நிந்தித்துப் புலம்பித் தன் காதலைத் தனது தோழியருக்கு உணர்த்துவாள். தங்கள் தலைவி விரகதாபத்தால் படும் பாட்டைத் தோழிகள் பார்த்து,

தேவத் திருச்சதய விழா என இராசராசன் பிறந்த நாளாகிய சதயநாள் விழாப் பன்னிரண்டும், கார்த்திகைத் திங்கள், கார்த்திகை நாள் விழா ஒன்றும், ஆக பதின்மூன்றும் நிகழ்ந்தன. இன்னும் திருவையாற்று உலோக மாதேவீச்சரத்தில் உடையார் 'திங்கள் சதய விழா' எனவும், செங்கற்பட்டுத் திருவிடந்தை வராகப் பெருமாள் கோயிலில், யாண்டு தோறும் ஐப்பசி திங்கள் சதய நாள் தொட்டு, இராசராசன் திருவிழா என ஏழு நாளும் நடந்தது. சேரநாட்டில் திருநந்திக்கரை என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலுக்குத் தாம் பிறந்த நாளாகிய ஐப்பசி மாதச் சதய நாளில் திருவிழா

---

அவள் காதலனை அவளிடம் எவ்வாறு கொண்டு சேர்ப்பதென்று வகை தெரியாது திகைத்து நிற்பார்கள். அப்போது மோஹினி சோகமேலிட்டு மெய் சோர்ந்து கீழே விழப் போவாள். அத்தருணம் மலைகளில் சஞ்சாரஞ் செய்யும் குறத்தியின் கானத்தைக் கேட்டு உற்சாகங் கொள்ளுவாள். தலைவி அக் குறத்தியை அழைப்பிக்க, அவள் வந்து வாசல் வளம் கூறுவாள். பிறகு தலைவி குறத்தியை யாரென வினவ, குறத்தி தன்தேசம், மலைவளம், சாதிவளம், நதிவளம் முதலியவற்றைக் கூறுவாள். பிறகு தலைவி தன் கையைப் பார்த்துக் குறிசொல்ல வேண்டுமென்று கேட்டதும், குறத்தி தெய்வங்களை வேண்டிப் பின்பு குறி சொல்லத் தொடங்கித் தலைவியின் உள்ளக் கருத்தை யறிந்து (மோஹினியின்) காதலைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் சொல்லி, தலைவன் உன்னை விரைவில் மணந்தருள்வான் என்றும் கூறுவாள். இத்துடன் குறவஞ்சி நாடகம் முடிவுபெறும். 'இக் கோயிலில் நடிக்கப்படும் குறவஞ்சிக் கூத்தில் மோஹினியின் காதல் இவ்வாறு முடிவடைய, இந்நாடகப் பகுதியில் குறத்தி குறவன், அவன் கையாள் சிங்கன், இவர்களுடைய செய்கைகளும் காதல் நிகழ்ச்சிகளும் கூறப்படும்.

நடத்துவதற்காக "முட்டம்" என்னும் ஊரை தானம் அளித்தனன் என்பதை அங்குள்ள கல் வெட்டும் அறிவித்ததால், இராசராசன் ஐப்பசித திங்கள் சதய நாளிற் பிறந்தவன் என்பது அறிவ தாகின்றது. நிம்யாத விழாக்களன்றி, ஆண்டு விழாவாக வைகாசிப் பெரிய விழாவும் நடை பெற்றது. பெரிய திருவிழாவுக்குக் கொடியேற்று நாளையும், ஆடவல்லான் எழுந்தருளும் நாளையும் பறையறைந்து தெரிவிப்பர். அஃது, ஒன்பது நாள் நடைபெற்றது. பின்பு திருவாரூர்க் கோயிலில் நடைபெறுவது போல இவ்வாட்டை விழா பதி னெட்டு நாளாகச் சித்திரையில் நடைபெற்று வரு கிறது. மற்றும் வசந்த விழா, திருவாதிரை முதலிய சகல சைவ விழாக்களும் நடைபெறுகின்றன. 1934-ஆம் ஆண்டு முதல், இராசராச சோழனின் பிறந்த தினமான திருச்சதய விழாவும், இப்பெரிய கோயிலில் மறுபடியும் தேவத்தானத்தாரால் தொடங்கப்பெற்று, ஐப்பசி சதயந்தோறும் சிறப் பாக நடந்து வருகிறது.

## திருக்கோயில் கல்வெட்டுக்கள்

இராசராசேச்சரத்திலுள்ள கல்வெட்டுக்கள் பல வாகும். அவை யாவும் கோயில் வெளிப்புறச் சுவர் களெங்கும் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் மெழுகிற் கீறிய பான்மைபோல் மாசற்ற கருங் கற்களிலும் பார்ப்போர் மனம் பரவசப்படும் விதமாய்ப் பொறித் துள்ளமை நோக்கற்பாலது. முதலாவது இராச ராசன் காலத்தவை,



[அன்பளிப்பு : பேராசிரியர் J. R. ஹிக்ஸ், ஆக்ஸ்போர்ட்]

**கல்வெட்டு கீழ்க் கண்டவாறு அமையும் :**

"ந்தனக்கே உரிமை பூண்டமை மனக்
குக் கருப்பூர்த் தேவதானமுஞ் சாலா போகமு
பத்தொன்பதேகாலே முக்காணி முந்திரின
கரையும் இவ்வூரை யூடறுத்துப் போய்
தேவர் ஸ்ரீ கோயிலுந் திரு முற்றமும்
க்காணி முந்திரிகைக்கீழ் நான்குமா நீக்கி
ன்கே முக்காலே இரண்டு மாமுக்கா
ாணி முந்திரிகைக்கீழ் ஆறு மரக்கா
கஸரியோ டொக்கும் ஆடவல்ல"

[தஞ்சைக் கோயில் இராசராசனது கல்வெட்டின்
ஒரு பகுதி. கி. பி. 1010]

"நாம் குடுத்தனவும், நம் அக்கன் குடுத்தனவும்.
நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றும் குடுத்தார்
குடுத்தனவும் வெட்டுக"

என அவன் மொழிந்த முறைப்படி வெட்டப்பட்டுள்ளன. அவைகளுள், இராசராசனும், அவன் தமக்கை குந்தவ்வையாரும் கொடுத்தன மட்டும் நடு விமானத்திலும், பெண்டிரும் பிறரும் தந்தவை யாவும் மற்ற இடங்களிலும் காணப்படுகின்றன. விமானத்தின் வடபுறத்தில், திருமஞ்சன நீர் வந்து விழும் இடத்திற் கருகில்,

"ஏதத் விச்வச்ரேணி மௌளி"

எனத் தொடங்கும் கல்வெட்டே முதன் முதலில் வெட்டியதாகும். இவைகளேயும், பிற்போந்தார் காலத்து வெட்டிய கல்வெட்டுக்களையும் அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சி இலாக்காவினர் அரிய குறிப்புக்களுடன் ஐந்து புத்தகங்களாக வெளியிட்டிருக்கின்றனர்.[44] இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் இராசராசன் I காலத்தவை 64-ம், முதல் இராசேந்திரனது 29-ம், முதல் குலோத்துங்கனது 1-ம், விக்கிரம சோழனது 1-ம் கோனேரின்மை கொண்டானது 3-ம், மற்றும் நாயக்க அரசர்கள் சரபோசி II மன்னன் முதலியவர்களுடைய கல்வெட்டுக்களுமுண்டு. குறிப்பாக, முதலாவது இராசராசன் கல்வெட்டுக்களால் அக்காலத்தில் பலராலும் பிரதிட்டை செய்விக்கப்பட்டுள்ள திருமேனிகள், அவைகளுக்கு அவர்கள் கொடுத்த விளைநிலங்கள், திருப்பரிகலங்கள், திருச்சின்னங்கள்,

---

44 South Indian Inscriptions Vol II. Pts. 1-5.

திருவாபரணங்கள் முதலியவற்றிற்கு விபரமும், எவரும் எவ்விதக் குறையும் கூறுவதற்கு இட மின்றி உப்பு முதல் கருப்பூரம் வரைக்கும் வேண்டிய எல்லாப் பண்டங்கட்கும் செய்யப்பட்டுள்ள ஏற் பாடும் பிறவும் நன்கு உணரலாம்.

## இராசராசன் தேவாரப் பதிகங்கள் கண்டமை

சைவ சமயாசாரியர் திருநாவுக்கரசரான அப்பரும், ஆளுடைய பிள்ளையான திருஞான சம்பந்தரும் 7-ம் நூற்றாண்டினர். தம்பிரான் தோழ ரான நம்பி யாரூரர் சுந்தரர் 8-ம்ஆம் நூற்றாண் டினர். இராசராசன் காலத்தில், இவர்களது அருட் பாடல்கள், இரண்டு நூற்றாண்டுகளுக்கிடையே அருகியன. ஒரு சிலவே திருவாரூர் போன்ற பெருந்தலங்களில் திரு முன்னர் பூசாகாலங்களில் ஓதப்பெற்றன. தஞ்சைக் கோயில் எடுப்பிக்கு முன் னர் முதலாம் இராசராசன் திருவாரூர்த் தியாகேசர் சந்நிதியில் தினமும் பாடும் சில பாக்களின் அருட் சுவையையும் பொருட்சுவையையும் உணர்ந்தான். மறைந்துள்ள மற்றவைகளையுந் தேடிக் காணப் பெரிதும் கவலை எய்தினான். முயற்சி திருவினை ஆக்கியது. திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளை யாரது பூசகரான நம்பியாண்டார் நம்பிகள், தேவார ஏடுகளனைத்தும் தில்லைக்கோயில் அறை யொன்றில் இருப்பதாகத் தெரிவித்தார். இராச ராசன் கவலை யொழிந்து மகிழ்ந்தான். தில்லைக்குச் சென்று தில்லைவாழந்தணருக்குத் தமது எண்ணத் தைத் தெரிவித்தான். அவ்வந்தணர்கள், "அம் மூவர் வந்தாலொழிய அவ்வறையைத் திறக்க

வொண்ணுது" எனப் பகர்ந்தனர். அரசனின் கவலை மேம்பட்டது. அக்கணமே ஒரு திருக்குறிப்பும் தோன்றியது. அரசன் அந்தணர்களது சூழ்ச்சிக்கு இணங்கினுன். அறை திறப்பதற்கு நன்னுள் குறிக்கப்பட்டது. அன்று சமயசாரியர்களது மூவர் படிமங்களும் அலங்காரஞ் செய்யப்பெற்று, திருமறைகள் பொதிந்துள்ள அறைமுன் கொணர்ந்து நிறுத்தப்பெற்றன! அந்தணர், அரசனின் பேரறிவினை வியந்தனர். அறை திறக்கப்பட்டது. அங்கு அவர்கள் கண்டது சிதலால் அரிக்கப்பட்ட ஒரு ஏட்டுக் குவியல். ஏடுகள் யாவும், பெரும்பாலும் சிதலையால் அரிக்கப்பட்டிருந்தன. அரசன் துன்புற்ருன். அதனைச் சகியாத் தில்லைத்தாண்டவனது அசரீரி எழுந்தது! "அரசனே, கவலற்க. இக்காலத்து நுமக்கு வேண்டுவன தந்தோம். தெரிந்துகொள்க" என்பதாகும். பின்னர், ஏடுகளைக் கவலையுடன் ஆராய்ந்து நெய் தடவி எடுப்பித்து, படிசெய்து கொண்டவைகளே இராசராசன் நமக்கு மறுமுறையும் தந்த தேவாரப் பதிகங்களாகும். இவைகளைத் தான் எடுப்பித்த தஞ்சை இராசராசேச்சரத்தில் இசைத் தமிழில் வல்லார் நாற்பத்தெண்மரைக் கொண்டு திருமுன்னர் விண்ணப்பஞ் செய்வித்தான். இவனது பேரறிவினையும், தெய்வ பத்தியினையும் சைவ உலகமும், அறிஞர் உள்ளமும் எக்காலத்தும் போற்றுவதாகும்.

## சோழர் காலத்துச் சுவர் ஓவியங்கள்

பெருவுடையார் விமானத்தின் கீழ், மூலத்தானத்தைச் சுற்றிச் சிறிய உள் மாளிகை ஒன்றுள்

ளது. அதன் சுவர்கள் மீதும், மண்டப மேற் கட்டி யிலும் சுமார் 936 ஆண்டுகள் மறைபட்டிருந்த பொக்கிஷமாகிய ஒன்றின் மேலொன்றதான இரு வகை அரிய வர்ண ஓவியங்கள் 1931-ஆம் ஆண் டில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்து வரலாற் ருசிரியர், ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ., அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை களுள், மேலுள்ளவை 17 ஆவது நூற்ருண்டின தான தஞ்சை நாயக்கர் காலத்தவை என்றும், மறைபட்டிருப்பவை சோழர் காலத்தவை என்றும், இந்திய ஓவியக்கலை ஞானத்தில் சோழர் காலத் தவை மிக உயரியதோர் வரிசையில் வைத்தற்குரி யவை என்றும் அறிஞர் எண்ணுகின்றனர் இவை களுள், சிற்சில ஓவியங்களே இப்போது காணக் கிடக்கின்றன. மற்றவை நாயக்கர் காலத்தில், முந்திய ஓவியங்களின் மேற்பூசிய ஒரு மெல்லிய சுண்ணச் சாந்தின் மேல் தீட்டிய நாயக்கர் கால ஓவியங்களின் கீழ் மறைபட்டிருக்கின்றன. இவை காண்போரைப் பரவசப் படுத்தக் கூடிய வகையில் தீட்டப் பெற்றும், அக்காலத்து ஓவியக் கலை வளர்ச்சியையும், சிறந்த சைவ சமய உணர்ச்சியை யும் விளக்குகின்றன.[45]

சோழர் ஓவியங்கள் தீட்டப்பெற்ற காலம் 10, 11 ஆவது நூற்ருண்டாகும்; சைவ சமயத்தின்

---

45 இவை, இப்போது இந்திய அரசாங்கத்தாரால், விஞ் ஞான முறையில் பாதுகாக்கப்பட்டும், புகைப்படங்கள் எடுக் கப்பட்டும் வருகின்றன. அவைகளின் சொந்த நிறங்களில் நகல் எடுக்கப்பெற்று, நூல் உருவத்தில் விரைவில் வெளி யிடப் பெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. Vide: Journal of the Annamalai University II i. *1933;* J. I, S. O. A. i. *1933;* Technical Studies), Harvard; V iv. *1937.*

உன்னதகாலம். அதற்கு முற்பட்ட 8-ஆவது நூற்ருண்டிலேதான் ஆரூரில் சுந்தரமூர்த்தி நாயனுர் தமது வாழ்க்கை நலங்களையும், சைவ சமயத்தையும் தமது தேவாரப்பதிகங்களால் மெய்ப்பித்ததாகும்.

## சில ஓவியங்களைப்பற்றிய விவரங்களாவன:

i இவ்வோவியங்களின் ஒரு பகுதி சுந்தரரது வாழ்க்கைச் சரித்தத்தைக் குறிக்கின்றது. சுந்தரரது திருமணப் பந்தல். மணத்தைக் கண்டு களிக்க பலர் கூடியிருக்கின்றனர். சிவபெருமான், கிழ வேதியர் உருவங்கொண்டு, ஒரு கையில் குடையும் மற்ருெரு கையில் ஒரு ஓலையுந் தாங்கி, சுந்தரருக்கு முன் நிற்கின்ருர். ஓலை, சுந்தரரது அடிமைச் சீட்டாகும். கிழவேதியர் இவ்வடிமை ஓலையைக் காட்டி, திருமணத்தைத் தடை செய்து ஆட்கொள்ள வந்துள்ளார். சுந்தரர் வியப்புடன் அவரை நோக்குகின்ருர். திருமணச் சுற்றம் திகைக்கின்றது. அவர்களுக்கு எதிரே திருவெண்ணெய் நல்லூர் கோயில் தீட்டப்பெற்றுள்ளது. ஒரு திரள் கூட்டம் அதனுள் செல்லுகின்றது

ii அதற்கடுத்தது ஒரு குடியானவர் வீட்டுத் தோற்றம். பெண்கள் மண் பானையில் உலை வைத்து சோறு பாகம் செய்கின்றனர் வேலையாள் ஒருவன் ஒரு பெண்ணிடமிருந்து உணவு பெறுகின்ருன்.

iii இவைகளுக்கு மேல் சிவ கயிலாயமலை. சிவனுர் புலித்தோலின் மீது உட்கார்ந்திருக்கின்றனர். அவருக்கு முன்னர் நந்தி படுத்திருக்கின்றது.

சிவகணங்களும் முனிவர்களும் சூழ்ந்திருக்கின்றனர். இவர்களுக்கு இடையே சில அப்சரசர் நடனமாடுகின்றனர்.

**iv.** இதற்குச் சற்றுக் கீழ்ப்பாகத்தில் சுந்தரரும் சேரமானும் தோன்றுகின்றனர். சுந்தரர் வெள்ளை யானை மீது கந்தர்வர்கள் புடை சூழவும், தேவகானம் முழங்கவும் கயிலாயம் செல்கின்றார். யானையின் வேகம் உயிர் பெற்று விளங்குகிறது. அவர் நண்பர் சேரமான் தான் பாயும் வெள்ளைக் குதிரைமீது ஆவேசத்துடன் யானைக்கு முன்பாக விரைகின்றார். அவர்கள் ஒரு ஆற்றைக் கடப்பது போன்ற தோற்றம். நீரில் மீன்களும், நீர் வாழ்வனவும் அங்குமிங்கும் நீந்துகின்றன. மேகத்தினின்றும் ஒரு பாதித்தோற்றம் காண்கிறது. கந்தர்வர், இவ்விருவர் மீது பூமாரி சொரிகின்றனர். பல முனிவர்களும் இவர்களுடன் தோற்றமளிக்கின்றனர்.

**v.** நடராசனும் இராசசேவையும் மேலைச் சுவரில் விரிவாகச் சித்தரிக்கப் பெற்றுள்ளன. பொன்னம்பலம் தோன்றுகிறது. கையில் கனலேந்திய ஆடவல்லானின் ஒரு புறத்தோற்றமாத்திரம்: இதற்கு எதிரே அஞ்சலி செய்த வண்ணம் ஒரு வீரத் தோற்றமுடைய அரசன்* நிற்கின்றான். அவருக்கு அடுத்து மூன்று பெருமாட்டிகள் பக்தி வசப்பட்டு நிற்கின்றனர். இவர்களுக்கு சற்றே விலகி இரண்டு சேவகர்கள் வெள்ளித் தடிகள் தாங்கி நிற்கின்றனர். இவர்களுக்குக் கீழே பல

---

* *இத் தோற்றம் முதலாம் இராசராசனதாக இருக்கலாமென்பர் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார்*—Colas i, pp. *199, 225.*

பிரமுகர்கள். இவர்களுக்குங் கீழ் பலதிறப்பட்ட சேவை செய்துகொண்டு நிற்கும் சாதாரண ஆடவரும் மகளிரும். இவை அக்கால ஜன சமூகமாகும். அவர்களின் உடல் தோற்றமும், அணிகலன்களும், உடையும் தலையில் கொண்டை செருகியிருப்பதும், மற்றும் பல அமைப்புக்களும் கண்டு மகிழ்தற்குரியவை.

vi. அதற்கு அடுத்த வடபுறச் சுவர்ப் பத்தியில், ஒரு அருமையான புராணக் காட்சி காணப் பல கண்கள் வேண்டும். விரிசடைக் கடவுள் திரிபுர மெரிக்கின்ற தோற்றம். தேவ கணங்கள் சூழ, விநாயகர், முருகன் அருகிருப்ப, சிவனார் எட்டுக் கரங்களுடன் தமது இரதத்தின் மீது வீற்றிருந்து, தமது நெற்றிக் கண்ணைத் திறந்து நோக்குகின்றார். அசுரர் உயிரற்று வீழ்கின்றனர். இன்னும் பலர் தங்கள் பெண்களுடன் அங்குமிங்கும் ஓடுகின்றனர். இன்னும் சில பெண்கள் தம் வீரக் கணவர் கழுத்தைச் சுற்றிக் கொண்டு தொங்குகின்றனர். இவ் வோவியம் ஒரு அருமருந் தன்னது. வீராவேசமும், சிவ பெருமானின் மறக் கருணையும் தோற்றுவிக்கும் அருட்காட்சியாகும். ஒவ்வொரு சிறுபகுதியும், பல பல முறைகள் கண்டு களிக்கக் கூடியவை.

இன்னும் வடக்குச் சுவருக்கு எதிரே ஒருபகுங்கில், சிவனின் ஐங்நிறத் தோற்றம். ஐந்து மெல்லிய தூய வர்ணங்கள் : தோய்ந்த "நிறங்களோரைந்துடையாய்"* என்பதை விளக்குவனவாகும். இவை

* திருவாசகம், சிவபுராணம் வரி 49. ஐம்பூதங்களில் இறைவன் கலந்திருத்தலின் அவற்றுக்குரிய ஐந்து நிறங்களும் இறைவர்க்கும் உரியவாயின என்ற கருத்துப்பற்றி".

பல ஆபரணங்கள் அணிந்து ஐந்து கிரீடா மகுடஞ் சூடிய திரு முகங்கள் இரண்டு வெண்மை, ஒன்று சிறு சிகப்பு, மற்ருென்று சிறு மஞ்சள் நிறத்திலும் காண வேண்டுவதாகும்.

இவைகளுக்கு மேல் தீட்டப் பெற்றதும் இன்னும் அவைகளின் மேல் ஒட்டிக்கொண்டு இருப்பதுமானவை தஞ்சை நாயக்கர் ஓவியங்களாகும். பொதுவாக புராண சம்பந்தமானவையே யாகும். திருப்பாற்கடல் கடைதல், விஷ்ணுவின் மூர்த்தங்கள் போன்றவை பல. அவைகளில் அக்கால உடை, அணிகலன் காண்பதாகின்றன. சிறப்பாக அவைகளில் பல, நாட்டியக் கலையைப் பலதிறப்பட்ட தாண்டவங்களைக் கொண்டு சித்தரித்துக் காட்டுவன.

ஆகவே, இப்பெரிய கோயிலானது முற்காலத்தில் கலையிலும், கைத்தொழிலிலும் மேம்பட்டிருந்தாருடைய தொழில் நலத்தைப் பிற்காலத்தார்க்கு நினைப்பூட்டும் ஞாபகச் சின்னமாகவும், இராசராசன் தன் தலைநகரமாகிய தஞ்சையில் ஜயசீலனாக வீற்றிருந்ததற்கு அடையாளமாக எடுப்பித்த வெற்றி நிலையமாகவும், அவனுக்கு இறைவன் பாலுள்ள அளவில்லாத அன்பைக் காட்டுதற்குரிய ஆபரணமாகவும் விளங்குகிறது. இதன் பரந்த இடமும், சிறந்த சிற்பங்களும், அணிவகுத்த சந்நிதிகளும், பார்ப்போர் மனத்தைப் பரவசப்படுத்தி நின்று நிலவுகின்றன.

தஞ்சை இராசராசேச்சரத்தோடு வேறு சில கோயில்களையும் முதலாம் இராசராசசோழன் எடுப்பித்தான். மேல்பாடிக் கல்வெட்டால் சயங்

கொண்ட சோழ மண்டலத்தில் தேவதான இறையிலியாக நிலம் பெற்ற **திரு அரிஞ்சயேச்சுரமும்,** ஈழத்தில்மாதோட்டமான இராசராசபுரத்தில்உள்ள இராசராசேச்சரமும், பழையாற்றில் அருண்மொழித் தேவேச்சரமும், திருவலஞ்சுழி ஆலயத்துள் க்ஷேத்திர பாலர்க்கு[46] ஓர் ஆலயமும் எடுத்தவன் இவனே.

இனி, இராசராசனின் பட்டத்தரசி நம்பிராட்டி தந்தி சத்திவிடங்கியரான உலகமாதேவியார், "வடகரை...........திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி **ஒலோக மாதேவியீச்சரம்"** என்னும் கல்வெட்டுப் பகுதியால் திருவையாற்று ஐயாறப்பன் கோயிலின் வடபால் **'வட கைலாசம்'** என வழங்கும் கோயிலைக் கட்டுவித்தமை தெரிகின்றது. இராசராசனின் அக்கை குந்தவ்வையாரும் தற்போது தாதாபுரம் என்றழைக்கப்படும் ராஜராஜபுரத்தில் மூன்று கோயில்கள்: ஒன்று சிவனுக்கும், ஒன்று திருமாலுக்கும், மற்றொன்று சமணப் பள்ளியுமாக எடுப்பித்து அவைகளுக்குப் போதுமான நிலதானங்கள் செய்ததாகவும் கல்வெட்டுக்(46.I)கூறுகின்றது.

## முதலாம் இராசேந்திரன்

இராசராசனுக்குப் பிறகு அவன் மைந்தன் **முதலாம் இராசேந்திரன்** கி. பி. 1014 முதல் 1044 வரையில் அரசுபுரிந்தான். அவன், தன் தலைநக

---

46 S. I. I. III. i. p, 23; Ins, 633 of 1902.

Ins. Polonoruva—Jananathapuram ஜனநாத மங்கை. வானவன் மாதேவி ஈசுவரம்.

(46-I) Ins. 8 of 1919.

ரைத் தஞ்சையிலிருந்து மாற்றினான். இப்பொழுது திருச்சிராப்பள்ளி சில்லா, உடையார்பாளையம் தாலுக்காவிலுள்ள **கங்கை கொண்ட சோழபுரம்** என்ற பெயருடைய நகரை உண்டாக்கி அதையே தலைநகராகக் கொண்டான். அவன் காலத்தும் அவனுக்குப் பின்னர், சோழர்களது ஆட்சியின் இறுதிவரையிலும் இந்நகரமே சோழ மண்டலத்தின் தலைநகராக இருந்ததென்னலாம். இந்நகர், கங்காபுரி என்று கலிங்கத்துப் பரணியிலும், விக்கிரம சோழ னுலாவிலும, கங்கைமாநகர் என்று வீரராசேந்திரன் மெய்க் கீர்த்தியிலும், கங்காபுரம் என்று தண்டியலங்காரம் மேற்கோள் பாடலிலும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. இந்நகரம் அக்காலத்து நான்கு மைல் சதுர அமைப்புடையதாக இருந்ததென்னலாம். நகரின் நான்கு திக்குகளிலும் நான்கு காளிகளை எல்லைத் தெய்வங்களாக நிறுத்தியதற்குச் சான்று இன்றும் உள்ளது. மேற்கு வாசல் காளிகோயில் மூன்று கல் தொலைவில் இருக்கிறது. வடக்கு வாசல் காளிகோயில் இரண்டுகல் தொலைவில் சலுப்பை என்ற சிற்றூரில் செங்கம்மேடு என்ற கிராமத்தில் இருக்கிறது. கிழக்கு வாசல் காளிகோயில் இரண்டு கல் தொலைவிலும், தெற்கு வாசல் காளிகோயில் இரண்டு கல் தொலைவில் வீராரெட்டி தெரு என்னும் கிராமத்து அண்மையிலும் இருக்கின்றது. அங்குப் பிரகதீசர் தீர்த்தக் குளமும் இன்றும் உள்ளது.

இன்னும், கோயிலைச் சுற்றியும் இரண்டு கல் தொலைவு வரைச் சிற்றூர்கள் பல உள. அவை சுண்ணும்புக் குழி (கோயில் திருப்பணிக்குச் சுண்ணும்பு தயாரித்த இடமாகும்). கணக்கு விநாயகர்

கோயில், பொன்னேரி சோழகங்க ஏரியைச் சார்ந்த சிற்றூர், பள்ளி ஓடை, பாகல் மேடு, சலுப்பை, செங்கம்மேடு, முத்துசில்பா மடம், சம்போடை முதலியனவாம். முக்கால் மைல் தொலைவில் உள்ள மண் மலை என்ற ஊரில் தேர் மேடு ஒன்றுள் ளது. இங்குதான் கோயில் தேர் இருந்ததாகத் தெரிகிறது. இன்னும் பல: மெய்க்காவல்புத்தூர், வீரசோழபுரம், வாணதரையன் குப்பம் - (வான டுப்பு), குயவன் பேட்டை, தொட்டிகுளம், கழனி குளம், உட்கோட்டை என்பன. **பரணமேடு** என் னும் கோயிலுக்கு ஏழு மைல் தொலைவிலுள்ள சிற் றூரிலிருந்து, பருத்தி மூட்டைகளை அடுக்கிப் பரணை கட்டி விமானக் கல் கொண்டு செல்லப் பட்டதெனவும் கூறுவர். இப் பெரியகோயிலில் இடிந்துகிடக்கும் முற்கோபுரம் ஏறத்தாழ 80 அடி உயரமெனக் கூறுவர். அது முழுதும் கருங்கல் வேலைப்பாடு கொண்டது. அக்கோபுரம், காவிரிப் பேரணைக்கட்டிற்குக் கல் வேண்டி, சுமார் 90 ஆண்டிற்கு முன் வெடி வைத்தபோது இடிந்து விழுந்துவிட்டதாம். அச்சிதைவுகள் இன்று வரை யிலும் அப்புறப்படுத்தப்பட்டில. இராசேந்திரன் இங்குத் தஞ்சைக் கோயிலை முழுதும் பின்பற்றியே **கங்கைகொண்ட சோழேச்சரம்**[47] என்ற கோயிலை எடுப்பித்தான். சுவாமி பெயர் **பிரகதீச்சுரர்**, அம் பிகை **பிரகந்நாயகி**.

சோழர் காலத்துக் கோயில்களின் முதிர்ச்சி தஞ்சைக்கோயில் அமைப்பில் தலைசிறந்ததென் றும், அதற்கு அடுத்தபடியாக முதலாவது இரா

47 கருவூர்த்தேவர் திருவிசைப்பாப் பதிகம் பெற்றது.

சேந்திரன் எடுப்பித்த **கங்கைகொண்ட சோழேச் சரத்தில்**[48] அமைந்ததெனவும் கூறலாம். மதப்பற் றிலும், சிற்ப நுட்பங்களிலும் விளங்கிய கோயில் களின் தொகுதி மிக்குடைய கும்பகோணத்திற் கும் சிதம்பரத்திற்கும் இடையில் ஏற்பட்ட இக் கோயில், பல நூற்ருண்டுகளுக்கிடையே இராசரீ கம் சீர்குலைந்த நிலைமையில், சில்லாப் பெருவழி களுக்குப் புறம்பாக அமைந்திருப்பதினுல் தற் போது புறக்கணிக்கப்பட்டுப் போயிற்று. இச்சிறு கிராமத்தின் மத்தியில் இக்கோயில் விமான மொன்றே ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் இராசேந்திரனது வெற்றித் தூணென நிலவு கின்றது.

இக்கோயில், இராசேந்திரனது வடநாட்டு வெற்றிகள் முடிந்ததும், கி. பி. 1025-ல் தொடங் கப்பெற்றதாகும். 'கங்கைகொண்ட சோழேச்சரம்', திருமதில்களின் மேற்கிலும், தென்மேற்கு மூலையி லும், அரண்கள் (Bastions) பொருந்தியனவாய்த் தற்காப்புக்கென எழுப்பிய கோட்டைச் சுவர் போன்ற சுவர்களின் நடுவே மிகப் பரந்த இடத் தில் அமைந்துள்ளது.

தஞ்சைக் கோயிலைப் போலவே[49] இறைவன் விமானத்திற்கு முன்னுள்ள மண்டபங்களும்,

---

48 Ind : Ant : ix p. *119*; Sewell's Antiquities I, P. *264*.

49 "The other temple at Gangaikondacholapuram, produced a little later, has not those virile qualities, the masculine vigour of its predecessor, but it posseses a rich voluptuous beauty that suggests its feminine counter part.' —Percy Brown. —J. I. S. O. A. II. i. 4.

குறிப்பு : "சோழ மன்னர்களில் முதலாம் இராசராசன் கங்கைகொண்ட சோழன், மூன்ருங் குலோத்துங்கன் என்

அடுத்த சண்டேச்சுவரர், அம்மையார் கோயில் களும், மற்ற அமைப்புகளும் சேய்மையிலிருந்து பார்க்கும் போது கம்பீரமான அழகிய பெருமிதத் தோற்றத்தோடு விளங்குவதைக் காணலாம்.

திருக்கோயிலின் திருமதில் நீளம் ஏறத்தாழ 600 அடி; அகலம் 450 அடி; கனம் 4 அடி. முழுவதும் கற்களாலானதே. இத்திருமதிலை அடுத்த இரண்டு அடுக்குத் திருச்சுற்று மாளிகையின் ஒரு பகுதி மாத்திரமே இப்போது காண்பதாகின்றது. மற்றும் பெரும் பகுதியை சென்னை அரசாங்க பராமத்து இலாகாவினரால் காவேரி பேரணை **(Grand Anicut)** கட்டுதற்குக் கற்கள் வேண்டி இடித்துப் போயினர் எனத் தெரிகின்றது.

---

*போர் விமானத்தையே பெரிதாகவும், உயரமாகவும் கட்ட வேண்டுமென்று விருப்புடையவர்களாயிருந்தார்களென்று அவர்களால் எழுப்பிக்கப்பெற்ற கோயில்களின் விமானங்கள் உணர்த்துகின்றன.''*

*''சோழர்களால் கட்டப்பெற்ற கோயில்களிலுள்ள காவலாளர்களுக்கு (துவாரபாலகர்களுக்கு) நான்கு கைகள் இருக்கும். பல்லவர்களால் கட்டப்பெற்ற கோயில்களிலுள்ள வாயில் காவலாளர்களுக்கு இரண்டே கைகள்தான் இருக்கும். முதலாம் இராசராச சோழமன்னன் காலத்தில் இம்முறை மாறி வந்துள்ளது.''*

*''சோழர்களால் கட்டப்பெற்ற கோயில்களில் விமானத்தின் மேற்குப் பக்கத்தின் நடுவில் வெளிப்பக்கத்தில் இலிங்கோற்பவ மூர்த்தியின் படிமம் அமைக்கப்பெற்றிருக்கும். இம்முறை முதலாம் இராசராசன் காலமுதல் மாறியும் வந்துளது. பல்லவர்களால் கட்டப்பெற்ற கோயில்களில் விமானத்தின் மேற்குப் பக்கத்தின் நடுவில் வெளிப்பக்கத்தில் அர்த்தநாரீச்சுர மூர்த்தியின் படிமம் அமைக்கப்பெற்றிருக்கும். சில இடங்களில் மேற்குறித்த அப்பாகத்தில் விட்டுணுவினுடைய படிமமும் அமைக்கப்பெற்றிருக்கும்.''—''செந்தமிழ்'' 36, ப. 384.*

என்னே அவர்களது காரியப் பண்பும் சமய உணர்ச்சியும்! இக்கோயிலின் நீளம் 340 அடி; அகலம் 110 அடி. இதனுள் மகாமண்டபம் 175 அடி நீளமும் 95 அடி அகலமுமுடையது. கருப்பகிருகத்திற்கும் அந்தராள மண்டபத்திற்கும் இடையே அர்த்த மண்டபத்தின் தெற்கு வடக்கு இருபக்கங்களிலும் அழகிய திருவாயில்கள் படிகளுடன் உள்ளன. கோயிலை அணுகும் திருவாயில் கிழக்கேயுள்ளது. இதனுட் சென்ருல், மகா மண்டபத்தின் கம்பீரத் தோற்றம் நமக்குப் புலனுகும். இவைகளுக்கு ஏறத்தாழ பன்னிரண்டு அடி உயரங்கொண்ட பன்னிரண்டு வாயிற் காவற் சிலைகள் காவல் புரிகின்றன. மகா மண்டபம் அகலத்தில் எட்டுப் பந்திகளாய் 150 கற்றூண்கள் வரிசை வரிசையாக இருக்கக் காணலாம். இதன் நடுப்பந்தி 18 அடி உயரமுடையதாய், இரு பக்கங்களும் 16 அடி உயரமுள்ளனவாய் அமைந்து மேலே கல்லால் மூடிய மண்டபமாகும். இப்பரந்த பெருமித மண்டபமே, பிற்காலத்தில் பெரிய கோயில்களில் ஏற்பட்டுள்ள ஆயிரக்கால் மண்டபம் போன்ற பெருமண்டபங்களுக்கு அடிப்படையாகியதெனலாம். கருப்ப கிருகத்திற்கு எதிரே உள்ள முன் மண்டபம், இரு வரிசைகளாலான பெரும் சதுரக் கற்றூண்களாலாயது.

மகா மண்டபத்திலுள்ள சம்பந்தப் பெருமான் சிலையும், துர்க்கையம்மன் சிலையும் மிக்க வேலைப்பாடுடையன. மண்டப மேற்கட்டியில் பொறித்துள்ள நவக்கிரகக் கோள்களின் அமைப்பு வேறெங்கும் காணப்படாத புதுமை வாய்ந்தது.

சூரியனது தேர், அட்டதிக்குப் பாலகர், அவர்க்கு மேல் நவக்கிரக அமைப்பு, நடுவண் பதுமபீடம், இவையனைத்தும் ஒரே வட்டக் கல்லில் அமைந்துள்ளமை, கண்டு வியத்தற்குரியதாகும்.

அர்த்த மண்டபத்துத் தூண்களுக்கு மேல் பல வகை நடனச் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. இலிங்கத்தை நோக்கிய எதிர்ச் சுவர்மீது ஆறு வரிசை உப்புசச் சிற்பங்கள் உள்ளன. அவை சண்டேச்சுவரர் வரலாறு, தடாதகைப் பிராட்டியார் திருமணம், பார்த்தனும் பரமனும் போரிடல், மார்க்கண்டேயா வரலாறு முதலியன இவை உயிர் ஓவியமென உயிர்பெற்று விளங்கக் காணலாம்.

இறைவன் சந்நிதியின்மேல் விளங்கும் விமானமானது 186 அடி உயரமாகும். சுவாமியின் இலிங்கத் திருமேனியும் மிகப் பெரியதாகும். இலிங்கம் 13 முழச் சுற்றளவுடையது; இலிங்கத்தின் உயரம்

---

**சண்டேசப்பதம்:** "விசார சருமர் என்ற பிராமணச் சிறுவர் ஒருவர் மாடுகளை மேய்த்து வந்தார். அவர் மணலைச் சிவலிங்கமாகச் செய்து மன ஒருமைப்பாடுடன் வழிபாடு செய்தும் வந்தார். அப்போது பசுக்கள் அந்த சிவலிங்கத்தின் மீது பாலைச் சொறிந்தன. ஒரு நாள் அவர் தந்தையார் இக்காட்சியைக் கண்டு வெகுண்டு மணல் இலிங்கத்தைத் தம் காலால் உதைத்தார். உடனே விசார சருமருக்கு அளவு கடந்த கோபம் உண்டாயிற்று. அவர் இலிங்கத்தை உதைத்த தம் தந்தையார் காலை வெட்டினார். அவரது பத்திச் சிறப்பினைப் பாராட்டி சிவபெருமான் உமையம்மையோடு காட்சியளித்து அமர்ந்து, அவர் தமது மடித்தூன்றிய வலக்கால் அடியில், விசார சருமரை அமரச்செய்து, தாம் சூடியிருந்த கொன்றை மாலையை எடுத்து அவர் முடிமீது சூட்டினார். அவரைத் தமது கோயில்கள் அனைத்திற்கும் அதிகாரியுமாக்கினார்." அந்தப் பதவியே "சண்டேசப்பதம்" என்பது. விசார சருமரும், சண்டேச்சுரர் என்ற பெயர் பெற்றார்.

13 அடி, பீடம் 30 முழச் சுற்றளவுடையது. மூலக் கருவறையைச் சுற்றியுள்ள திருச்சுற்றின் அகலம் பத்து அடியாகும். மூலத்தானக் கோயில் தரை மட்டத்திற்கு மேல் இருபதடி உயரத்தில் அமைந் துள்ளது. கோயிலின் அடிப்பாகம் 100 அடி சதுர மானது. இதன் உயரம் 35 அடிக்கு மேல் இரண்டு மேல் மாடிகளை யுடையது. இதற்கு மேல் உள்ள பகுதி எட்டு மாடிகள் உள்ளதாய் விளங்கும். இவ்வரிய விமானமும், இதன் கண் கலசம் ஸ்தூபி வரையிலுள்ள சிற்பங்களும், கோயிலின் வெளிப் பாகத்துள்ள சிற்பந்திகள் உருவங்களும் மிக்க வனப்புற்றவை. தென்னிந்தியாவிலுள்ள சிற்பங் களிலும், அவற்றைப் பின்பற்றிய ஜாவாத் தீவிலு முள்ள உயர்ந்த சிற்பங்களிலும் இவை மேம் பட்டவை என்பர். தென்மேற்கில் சபாபதியும், மேற்கில் இலிங்கோற்பவ அருணசல ஈசுவரரும், தெற்கில் விநாயகரும், வடக்கில் திருவாயிலுக்கு அணித்தாய், சண்டேச்சுரருக்கு இறைவன் அனுக் கிரகம் செய்கின்ற அருட்கோலமாய்ச் சண்டேச்சுர அனுக்கிரக மூர்த்தியும் அருமையான வேலைப்பா டுடையன. இதற்கு வலப்புறம் கணநாதர் ஆடிப் பாடிக் களித்தலும், இடப்புறம் பசுக்கள் (வேதங் கள்) நிற்றலும் காணத்தக்கனவாம். மற்றும் கணங்களும், அப்ஸர மாதர்களும், இராக்கத கூட் டங்களுமாக எவ்விடத்திலும் உருவங்கள் அமைந் துள்ளதை நோக்குங்கால் இக் கோயிலின் கம்பீர மான தோற்றத்திற்கு அவை வனப்பைத் தருவன எனலாம். இவற்றுள், பெரும்பாலானவைகளுக்கு நரசிம்மவர்மனது மாமல்லபுரத்துச் சிற்பங்களே அடிப்படையானவை எனக் கூறினும், அவற்றிற்

குச் சுமார் மூன்று நூற்றுண்டுகளுக்குப் பின்னர் எழுந்த இவ்வுருவங்கள் அவற்றைக் காட்டிலும் எத்தனையோ அரிய குணங்கள் வாய்ந்து, அழகிற்கும், உருவகத்திற்கும், ஒரு முதிர்ந்த தேர்ச்சியைக் காட்டுவன எனத் துணியலாம். மற்றும், இக் கோயில் சோழர் காலத்துக் கோயில்களினும் அழகிலும், சிற்பத் திறனிலும், ஒரு தனி நிலையை எய்தியுள்ளதாகவும் கூறலாம்.

## இராசேந்திரனது மற்ற கோயிற் பணிகள்

முதலாம் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தில் எடுத்த இப்பெரிய கோயிலேயன்றி, **திருவொற்றியூர்** இறைவன் உட்கோயிலையும், தான் வென்ற இடங்களிலெல்லாம் வேறு கோயில்களையும் அமைப்பித்தான். அக்கோயில்களுக்கு நில தானங்களையும் விட்டு, ஊர்ப் பொதுச்சபையாரால் எப்போதும் குறைவின்றி நடத்திக் கொள்ளக் கூடிய ஏற்பாடுகளையும் செய்வித்தான். இச் செய்தி, மைசூர் நாட்டில் கோலார் எனப்படும் குவளாலபுரத்திலுள்ள துர்க்காலய மொன்றில் வெட்டிய இவன் சாசனமொன்றால் புலனுகும். இக் கோயிலில் பூசை செய்வதற்காகச் சைவப் பிராமணனொருவனும், பூசைக்கேற்ற மற்ற பணிகளைச் செய்வதற்கு நான்கு பிரமசாரிகளும், அபிஷேகத்திற்கு நீரும் புட்பமும் மாலைகளும் மற்றப் பண்டங்கள் முதலியனவும் சித்தம் செய்துவைக்க வேலையாட்களும், ஆலயத்தைச் சேர்ந்த நந்தவனத்தைச் செப்பனிட்டு நீர்பாய்ச்சிச் சரிவர வைத்துக் கொள்

வதற்காக இரண்டு குடும்பங்களும், கோயிற் காப்புக்காக மூன்று காவற்காரர்களும், மூன்று பைரவர்களும், நான்கு யோகீசுவரர்களும், தேவாரப் பாக்களைப் பண்ணுடன் பாடப் பத்துப் பெயர்களும், கணக்கன் ஒருவனும், இருபத்து நான்கு தேவர் அடியார்களான நடன மாதர்களும், ஒரு குயவனும், ஒரு வண்ணானும, ஒரு சோதிடனும், மேற்பார்வையிட அரசியல் பணியாளன் ஒருவனும், ஒரு தச்சனும், ஒரு கருமானும், வியாகரணம முதலிய கலைகளைப் போதிக்க வல்ல ஆசான் ஒருவனும் கோயிலின் திருப்பணி செய்வதற்காகவும் அதன் கருமங்களை நடத்துவதற்காகவும் அமைக்கப்பட்டிருந்தனர். ஊர்ப் பொதுமன்ற ஏற்பாடுகளின்படி நெய், எண்ணெய், அரிசி, காய்கறி வகை, பழம், சந்தனக் குழம்பு, சாம்பிராணி, கருப்பூரம், பனிநீர், வெட்டிவேர், ஏலக்காய் முதலிய பொருள்களையெல்லாம் தம் தம் கடமைப்படி பலர், தாமாகவே கொணர்ந்து ஆலயத்துக்குக் கொடுப்பது வழக்கமா யிருந்தது. கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுக்கப்பட்டுள்ள நிலங்களைப் பயிரிட்டோர், நிலத்தில் விளைந்த நெல் முதலிய தானிய வகைகளைத் தாமே கோயிலதிகாரிகளிடம் கொண்டு வந்து சேர்ப்பித்து வந்தனர். இன்னும் இவனது 24-ஆம் ஆட்சி ஆண்டில், சேர அரசனான இராசசிம்மன், திருநெல்வேலி கோட்டத்தில் மன்னூர் கோயிலில் கட்டிய இராசேந்திர சோழ விண்ணகருக்கு நிலதானம் செய்துள்ள செய்தியும் ஒரு கல்வெட்டு குறிக்கின்றது.

* Ins. *112* of *1905*.

இவ்வாருக, இராசராசன் சோழரது பேரரசை நிலைநிறுத்தியதோடு, **பண்டித சோழன்** எனப் பெயர் பெற்றவனுவான். இதனுல் இவன் தமிழில் சிறந்த புலமை எய்தியவனுதல் வேண்டும். இவனது மெய்க்கீர்த்தி, பல கல்வெட்டுக்களில் சிறந்த புலமை உணர்ச்சியுடன் வரையப்பட்டுள்ளது. சிறந்த சிவனடியாரான கருவூர்த் தேவரும்* இக் காலத்தில் இருந்தவராதல் வேண்டும். இவ்வாருக, முதலாம் இராசேந்திரன் ஒப்புயர்வற்ற நிலையில் அரசாண்டு கி. பி. 1044-ல் விண்ணகர் வாழ்வை யடைந்தான்.

## ஈழத்தின் வெற்றியும் திருக்கோயில்களும்

முதல் இராசராசனும் அவன் மகன் இராசேந்திரனும் இலங்கையிலடைந்த வெற்றிகளையும், அங்கு அவனது கோயிற் பணிகளையும் கூறுவன

---

**கங்கைகொண்ட சோழேச்சரம் ***

திருச்சிற்றம்பலம்

*அன்னமாய் விசும்பு பறந்தயன்தேட*
*வங்ஙனே பெரிய நீ சிறிய*
*என்னையான் விரும்பியென்மனம் புகுந்த*
*வெளிமையை யென்று நான் மறக்கேன்*
*முன்னமாலறியா வொருவனு மிருவா*
*முக்கணுநாற் பெருந் தடந்தோட்*
*கன்னலே தேனேயமுதமே கங்கை*
*கொண்ட சோழேச் சரத்தானே.*

திருச்சிற்றம்பலம்

—கருவூர்த்தேவர் திருவிசைப்பா

1. Colas-I. p. 206; Ins. 26. 1 of 1910, also S.I.I. iii, p. 4, 18.

பல கல்வெட்டுக்களாகும். ஈழத்தில் பல கிராமங்களைத் தஞ்சைக் கோயிலுக்கென நிலதானமாக்கினான். இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தனைத் தோற்கடித்து, ஈழத்தின் தென்கீழ்ப் பாகமாகிய ரோகணை வட இலங்கைக்கு மும்முடிச் சோழ மண்டலமெனப் பெயரிட்டான். அங்கு ஆயிரம் ஆண்டுத் தலைநகரமாகிய அநுராதபுரத்தை அழித்தும், சோழருடைய தலைநகரைப் பழைய நகராகிய பொலநறுவையில் தாபித்தும், அங்குச் சிவ தேவாலயத்தை எடுப்பித்தான். இக்கோயில் இன்னும் சிதைந்த வடிவில் காணப்படுகின்றது. இராசராசனுக்குப் பின்னர் முதல் இராசேந்திரனது சிவன் கோயில்களும் மகா தோட்டம் - மாங் தோட்டம் என்ற இடங்களில் காணப்படுகின்றன. இதற்கு இராஜராஜேஸ்வரம் என்றும் பெயரிட்டான். இதன் வரலாற்றை **Ins.** *616* **of** *1912*; **S. I. I. IV-14 ff.** மற்றும் குறிப்புக்களும் விளக்குவதாகும்.

## பொலநறுவைத் திருமேனிகள்*

இன்னும், பொலநறுவையில் காணப்பட்ட இராசேந்திரன், அதிராசேந்திரன் காலக் கல்வெட்டுகள் இவ்வாலயத்துக்குக் கொடுக்கப்பட்ட நன்கொடைகளைக் கூறுகின்றன. இவ்வாலயம் **வானவன் மாதேவீஸ்வரம்** என்று வழங்கப்பட்டது. இக்கல்வெட்டில் காணப்படும் பெயர்கள் தென்னிந்தியாவிலுள்ள திருப்புவனம், திருவையாறு, சிதம்

* Studies and Translations-Sir. P. ARUNACHALAM *1937*, pp. *73-109*.

2. S. I. I. II. Paras *12-15*; A. S. C. *1906*. p. *17* ff.

பரம் முதலிய பெயர்களோடு தொடர்புடையன வாய்க் காணப்படுகின்றன. இவ் வரலாற்றால் **பொலநறுவை** சைவப் பெருமக்கள் கொண்ட **குடியேற்றமாய்** விளங்கியதென்பது வெளிப்படை யாகிறது. பொலநறுவையில் சோழர்கள் சிவால யங்களைக் கட்டியெழுப்பியதுமன்றிப் பெருமை வாய்ந்த சைவ சமய சம்பந்தமான வெண்கல விக்கிரகங்களையும் கல்லுருவங்களையுந் தாபித்த னர். இவை கொழும்பு (Colombo Museum) கண் காட்சி பொருட்சாலையில், உலகப் புகழ்பெற்று விளங்குவன.

# IV

# முதல் இராசேந்திரனுக்குப் பிற்பட்டவர்களின் கோயிற் பணிகள்

## இராசேந்திரன் மக்கள்

இராசேந்திரனுக்குப் பின், அவன் மக்கள் மூவரும், அடுத்தடுத்து இருபத்தாறு ஆண்டுகளாக கி. பி. 1044-1070 வரை அரசிருந்தனர். அவர்களும், சைவப்பற்று மிக்காராய் எடுப்பித்த கோயில்களும், அவைகளுக்கு விடப்பட்ட நிலதானங்களும் பலவாகும். அவை ஒவ்வொன்றினையும் தனித்துக் கூறுமிடத்துப் பெருகும். ஆயினும் அவற்றுள் விசயராசேந்திரனை **முதல் இராசாதிராசன்** (கி. பி. 1044-54) எடுப்பித்தவை ஜயங்கொண்ட சோழேச்சரம், மன்னூர் குடியிலுள்ள இராசாதிராசேச்சரம் ஆகிய இரு கோயில்களாகும்.[50] இன்னும் புதுப்பித்தது குடந்தைக் காரோணம் கோயிலுமாகும்.

முதல் இராசாதிராசன் சாளுக்கியருடன் பொருத, கொப்பத்துப் போரில் கி. பி. 1054-ல் வீர சுவர்க்கம் எய்தினன். அவன் தம்பி இரண்டாம் **இராசேந்திர சோழ தேவன்** கி. பி. 1052-1064 வரை சோழ அரசை ஏற்றான். இவனது வெற்றியைக் கலிங்கத்துப் பரணியும் விக்கிரம சோழன் உலாவும் பாராட்டி உள்ளன. அவன் பின், அவன் தம்பி **வீரராசேந்திரன்** கி. பி. 1063 முதல் 1070 வரை அரசு தாங்கினன். இவனது மற்றொரு பெயர் கரிகாலன்

---

50 Epi. Rep: *1897* para *211*.

என்பது. வீரராசேந்திரன் சிறந்த சிவபத்தன். தில்லையில் நடராசப் பெருமானது திருமுடியிற் பதித்தற்குரிய, "திரை லோக்கியசாரம்" என்ற வைரம் ஒன்றை அவன் தந்ததாகக் கன்னியாகுமரி கல்வெட்டு கூறுகின்றது. இவன் மகன் **அதிரா** சேந்திரன் அரசு தாங்கிய (கி. பி. 1069-1070) சில திங்கள்களில் உயிர் துறக்கவே, விசயாலயன் தோற்றுவித்த பிற்காலச் சோழர் பரம்பரை சந்ததி யின்றி முடிவடைந்தது. அதற்குப் பின்னர், முதல் இராசேந்திரனது மகள் வயிற்றுப் பேரனும், கீழைச் சாளுக்கிய மன்னன் இராசராசனது மகன் **குலோத்துங்கன்** எனப் பெயர் தாங்கிச் சோழர் அரியணை ஏறினான்.

## முதலாம் குலோத்துங்கன்

**சுங்கந் தவிர்த்த சோழன்** எனப் பெயரிய **முதலாம் குலோத்துங்கன்** சோழர் பேரரசை 50 ஆண்டுகள், கி. பி. 1070-1120 மிக்க சிறப்புடன் அரசாண்டான். தனது நாட்டை முழுதும் அளந்து (Survey) கட்டினான். அனுவசியமாகக் கருதிய பல சுங்கங்களை நீக்கினான். இவனே தமிழ் நாட்டில் முதன் முதலாக ஞாயிறு வழிபாட்டிற்கெனத் தனிக் கோயிலைக் கட்டியவனாவான். சூரியனார் கோயிலென வழங்கும் கோயில் இவன் கட்டு வித்ததே. வேம்பற்றூர்த் திருவியலூருக்கடுத்துக் கர்க்கடேசுரர் எனப் பெயரிய அருமருந்து நாயக ருக்குக்[51] கோயிலும், முன் மண்டபமும் எடுத்தவன் இவனே. குலோத்துங்க சோழேச்சரம் என்ற

51 Epi. Rep: 1900 p. 91.

கீழைப்பழுவூர்க் கோயிலும், திருவைகாவூரிலு முள்ளகோயிலும் கற்றளியாக இம்முதற் குலோத் துங்கன் ஆட்சியிலே கட்டப்பெற்றன.* மற்றும், கோட்டாற்றிலுள்ள இராசேந்திர சோழேச்சரமும் இவன் எடுப்பித்ததே. திருவானைக்கா கோயிலுக்கு நிலங்கள் தானம் செய்தமையும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. குலோத்துங்கன் சிறந்த சிவ பத்தனுக மட்டுமே அல்லாது, பிற சமயங்களையும் போற்றிய பெருமகனுவான். இவனது கல்வெட்டுக் கள் எல்லாச் சமயத்தார் கோயில்களிலும் உள்ளன. இவன் தன் தலைநகரைக் கங்கைகொண்ட சோழ புரத்திலிருந்தும், முதன் முதலாகக் காஞ்சியிலிருந் தும் அரசாளத் தொடங்கினுன்.

இவன் காலத்துச் சிற்றரசர் பலர் பல வைண வக் கோயில்களை எடுப்பித்துள்ளனர். இவனது ஸ்ரீரங்கம் கல்வெட்டுக்கள் இரண்டால் குலசேகராழ் வார் "தேட்டருந்திறல்" என்ற பாசுரங்களைத் திருவரங்கத்தாழ்வார் சந்நிதியில் மூன்று நாட்கள் பாடுவதற்காக ஒரு நிபந்தமும், திருவரங்கன் சந்நிதியில் மார்கழித் திங்களில் திருப்பள்ளி யெழுச்சிச் சமயத்தில் திருவாய்மொழி பாடுதற் காக ஒரு தொகை நிபந்தமுமாகக் கொடுக்கப் பெற்றதென்றும் தெரிகின்றது. இவை** திருவரங் கம் மேற்கு வெளிச் சுவரில் பொறித்துள்ளன. இன்னும் குலோத்துங்கன், கி. பி. 1090-ல் நாகப் பட்டினத்திலிருந்த இராசராசப் பெரும்பள்ளி என்ற பௌத்த விகாரத்திற்கு நிலதானம் செய்துள்ளான்.

---

* Ins. *390, 394* of *1924*.

** Ins. *61, 62* of *1892;* S. I. I. III. p. *148*.

அதனை லீடன் (Leyden) செப்பேடுகள் குறிப்பிடு கின்றன.

இவனும் இவன் சிற்றரசர்களும் மற்ற சமயங் களை ஆதரித்துப் பௌத்த, சமணப்பள்ளிகட்கு நிபந்தங்களை விட்டபோதிலும், தான் சிறந்த சிவபத்தனாக விளங்கி, **திருநீற்றுச் சோழன்** என்ற சிறப்புப் பெயரையும் எய்தினான். மன்னார்குடியி லுள்ள குலோத்துங்க சோழ விண்ணகரம் என்ற இராசகோபாலன் கோயிலும் இச்சோழன் கட்டிய தேயாகும். இதற்குப் பிற்போந்த தஞ்சை நாயக்கர் மன்னன் விசயராகவன் இதனைப் பெரிதும் திருப் பணி செய்து, 780 ஏக்கர் நிலமும், 6000 ரூபாயும் கொடுத்து ஹரித்ரா நதி திருக்குளம் வெட்டிச் சீர்திருத்தியதாகத் தெரிகிறது.

முதற் குலோத்துங்கன் காலமுதல் சிதம்பரம் சோழர்களது சைவப்பற்றுக்கு நிலைக்களனாக ஆகியது. இதன் காரணம் முதல் இராசேந்திரன் தனக்கென அமைத்துக் கொண்ட கங்கைகொண்ட சோழபுரம் சோழர்களின் தலைநகராகியும், தில்லை யின் அணித்தாக இருந்ததுமாகும். இதனால் விசயாலயன் முதல் இராசராசன் வரைச் சோழர் கள் தமது குலதெய்வமாகத் திருவாரூர்த் தியாகேச ரையே கொண்டனரென்பதும், இனித் தில்லை நடராசனே அவர்களது குலதெய்வமாக விளங்கினா னென்பதும் காண்பதாகின்றது. இவன் காலத்தே தான் தில்லைச் சிற்றம்பலம் "நமச்சிவாய" என்னும் பஞ்சாட்சரம் பொறிக்கப்பட்ட பொன்னோடுகளி னால் வேயப்பெற்றதெனத் தெரிய வருகிறது. (தமிழ்ப் பொழில் xii, xiii.)

## விக்கிரம சோழன்**

முதற் குலோத்துங்கனது திருமைந்தன் **விக்கிரம சோழனும்** கி. பி. 1118 முதல் 1136 வரை அரசு தாங்கி ஒப்பற்ற சிவபத்தனாக விளங்கினான். **தில்லையில்** தன் குலநாயகன் தாண்டவம் பயிலும் செம்பொனம் பலஞ் சூழ் திருமாளிகையும், கோபுர வாசல் கூட சாலைகளும், பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும் விசும்பொளி தழைப்ப விளங்கு பொன் வேய்ந்து, அங்குத் தன் பெயரால் திருவீதியும் மாளிகையும் கட்டுவித்தான். அவை, திருக்கோயிலின் முதல் சுற்றுமதிலும், பொன்னம்பலத்தைச் சுற்றிய விக்கிரம சோழன் திருவீதியுமாகும்.

---

** விக்கிரமசோழன் தன் முன்னோனான, முதற் பராந்தகன் ஆரம்பித்த தில்லைத் திருப்பணிகளை, தனது சிற்றரசர் கொணர்ந்த திறைப்பொருளின் பெரும்பகுதியை அக்கோயிலைப் புதுப்பிக்கவும், பெரிதாக்கவும் செலவிட்டானென்று திருமழபாடி கல்வெட்டு* கூறுகின்றது. * Ins. 390-393 of 1924.

"பத்தாம் ஆட்சி ஆண்டில் சிற்றரசர் தந்த தூய பொற்குவியல் பேரரசன் முன் வைக்கப்பட்டது. அப்பொழுது மணிகள் பதித்த பொற்றட்டில் கீழ் வருவன வரையப்பட்டன: "மன்னன் நீண்ட நாள் வாழ்ந்து உலகைக் காப்பானாக! செம்பொன் அம்பலம் சூழ் திருமாளிகையும், கோபுர வாசல்களும், கூடசாலைகளும், கோவிலைச் சூழவுள்ள கட்டடங்களும் பொன் ஆக்கப்பட்டன, பலி பீடமும் பொன்னாற் செய்யப்பட்டது; முத்து மாலைகளால் அணிசெய்யப்பட்ட தேர்க்கோயில் பொன்னால் இயன்றது. இத்தேரில் கூத்தப்பிரான் பூரட்டாதியிலும் உத்திரட்டாதியிலும் உலாப் போவானாக. அப்பொழுது நடைபெறும் விழா 'பெரும் பெயர் விழா' எனப்படும். நிரைமணி மாளிகை நெடுந்தெரு ஒன்றும் அமைக்கப்பட்டது. இத்தெரு, அரசன் பெயர் பெற்றதாகும். பைம்பொன் குழித்த பரிகலம் முதலாகச் செம்பொற் கற்பகத்தோடு பரிச்சின்னமும் அரசனால் கோயிற்குத் தரப்பட்டன. இத்திருப்பணி அரசனது 20-ஆம் ஆண்டில் சித்திரைத் திங்களில் அத்த நக்ஷத்திரம் கூடிய ஞாயிறன்று செய்யப்பட்டது."

இன்னும் அச்சந்நிதியில் மணிவாசகர் திருச்சாழல் திருப்பதிகம் பாடுவதற்கும் திருவானைக்கா கோயி லுக்குமாக நிலங்கள் தானம் செய்யப்பட்டன. மற் றும், தஞ்சாவூர் சில்லா, மாயூரந் தாலுகாவில் திரு மங்கலம் என்னும் ஊரிலுள்ள சிவாலயம் அவ ஞல் எடுப்பித்ததாகும். அதற்கண்மையான குற் ருலத்திலுள்ள விக்கிரம சோழேச்சரத்திற்கு அவ் வூரை நிபந்தமாகவிட்ட செய்தியும் தெரிகிறது. இவனது மெய்க்கீர்த்தி ஒன்று புள்ளிருக்கு வேளூர் என்ற வைத்தீசுவரன் கோயில் 3 சுவரில் காணப்படுகிறது. இன்னும் திருவரங்கம் பெரிய கோயிலில் திருப்பணி செய்தும், ஐந்தாம் திருச் சுற்ருகிய அகளங்கன் திருவீதி என்ற இரு பிராகாரங்களை ஏற்படுத்தியதுடன், இராமன் கோயில் முதலியன இவனுல் அமைக்கப்பட்ட தென்று **கோவிலொழுகு** தெரிவிக்கின்றது. ஜமீன் புங்கனூருக்கு அணித்தாய்க் கோயாற்றூர் என்ற உத்தம சோழபுரத்தில் இருங்கோளீசர்க்கு எடுத்த கோயிலும் அவனதே. இவைகளால் இவனது உயரிய சைவப் பற்றும் சமரசப்பற்றும் விளங்கு கின்றன.

---

முதற் குலோத்துங்கன் காலத்தும், (கி. பி. 1070-1136) அவன் மகன் விக்கிரம சோழன் காலத்தும் (1118-1136) அமைச்சர் தலைவனுகவும், படைத் தலைவனுகவும் விளங்கிய வன் அரும்பாக்கிழான் மணவிற்கூத்தன் **காலிங்கராயன்** என்ப வனுவான். அறிவிலும், வீரத்திலும், சிவபக்தியிலும் சிறந்த பெரியோனுகிய இத் தலைவன், விக்கிரம சோழன் ஆட்சிக் காலத்தில் இவ் வேந்தன் விரும்பிய வண்ணம் **தில்லையில் நூற் றுக்கால் மண்டபம்** ஒன்றைக்கட்டி **'விக்கிரம சோழன் திருமண்ட பம்'** என வழங்கச் செய்தான். இச்செய்தி இம் மண்டபத் தூண்களில் விக்கிரம சோழன் திருமண்டபம் எனப் பொறிக் கப் பெற்றிருத்தலால் விளங்கும்.

# இரண்டாம் குலோத்துங்கன்

விக்கிரமசோழன் கி. பி. 1133-ல் விண்ணுடுற்ற பின், இவன் மகன் **இரண்டாம் குலோத்துங்கன்** அரியணை யேறினான். கி. பி. 1133 முதல் 1150 வரை அரசு வீற்றிருந்தான். இவன் ஒப்புயர்வற்ற சிவபத்தன். இவனே சோழன் **அநபாயன்** என்ற பெயருடன் விளங்கியவன். இவன் **தில்லையம்பதியில்** செய்துள்ள திருப்பணிகள் அளவற்றனவாகும். அவற்றுள், சிற்றம்பலம் பொன் வேய்ந்தமையும், பேரம்பலம், **எழு நிலைக் கோபுரம்**, திருமாளிகை இவற்றைக் கட்டுவித்தமையும், **சிவகாமக்கோட்டத் திருப்பணியும், சிவகங்கைத் திருப்பணியும்** ஆற்றியமையும்[53] குறிப்பிடத் தக்கவையாகும். மற்றும், பல கல்வெட்டுக்களின் குறிப்புக்களால் இவ்வேந்தன்,

---

*இன்னும், இவன் சித்தலிங்க மடத்தில் சிவனுக்கு கற்றளி எடுத்தான். திரிபுவனை, திருப்புகலூர் கோயில் திருமண்டபங்களை அமைத்தான். இவன் தில்லையிற் செய்துள்ள திருப்பணிகள் மிகப் பல. அவற்றுள் சிறப்பாக (1) தில்லைக்கும் கடலுக்கும் நடுவில் அகன்ற சாலையை அமைத்தமை. (2) கடற்கரையில் மாசி மகத்தின்போது இறைவன் தங்க மண்டபம் அமைத்தமை. (3) மூவர் தேவாரம் திருப்பதிகம் முழுவதையும் செப்பேட்டில் வரையச்செய்து தில்லைத் திருக்கோயிலில் வைத்தமையும், மற்றும் பலவுமாம்.*

**வைத்தீசுவரன் கோயில், தஞ்சை சில்லா, சீர்காழிக்குத் தென்மேற்கு $3\frac{1}{2}$ மைலில், காவிரியின் வடபாலுள்ளது. தென்னிந்திய இருப்புப் பாதைகளிலுள்ள புகழ்பெற்ற திருத்தலம். இறைவன் வைத்தியநாதர், அம்மையார் தையல்நாயகி, முருகப்பெருமான் செல்வமுத்துக்குமாரர் தருமை ஆதீனத்து ஆளுகைக் கோயில்களில் முருகன் திருத்தலமாக மிக்கு விளங்குவதாகும். சம்பந்தர், அப்பர், தேவாரப்பதிகம் பெற்றது.*

*53 குலோத்துங்கச் சோழனுலா II. 75—116.*

செங்கற்பட்டு சில்லா, செய்யாறு தாலுகா, பிரம தேசம் உருத்திர கோடீச்சரரது ஆலயத்துக்குத் தன் பெயரால் 'அநபாய சோழ நல்லூர்' என்ற ஓர் ஊரை இவன் நிபந்தமாக விட்டனன்[54] என்றும், திருக் கண்ணபுரத்திற்கு அண்மையிலுள்ள இராம நதீச்சுரமுடைய மகாதேவர்க்கு நித்திய பூசையின் மையின், அதனை நடத்துவதற்கு நிபந்தம் விட்டு அவ்வூர்க்குச் 'சிவபாத சேகரமங்கலம்' என்ற பெயரும் வழங்கினான்[55] என்பதும் தெரிகிறது

"குலோத்துங்கன் தன் அரசமாதேவியுடன் தில்லை சென்று கூத்தப்பெருமான் திருக்கூத்தைத் தரிசித்தான். தில்லைத் திருப்பணிக்கு இடையூறாக மண்டபத்தில் இருந்தக் கோவிந்தராசரை அப்புறப் படுத்தினான்; பல திருத்தங்களைச் செய்தான்; எழு நிலைக் கோபுரங்களை அமைத்தான்; தான் பிறந்த கயிலையை நினையாதிருக்க, அதனினும் மேம்பட்ட முறையில் அம்மனுக்குத் திருமாளிகை அமைத் தான்; கோயிலின் பல பகுதிகளும், நகரத்தில் குறிப் பிடத்தக்க சில இடங்களும் பொன் வேய்ந்தான்" எனச் சுருக்கமாக இராசராசசோழன் உலாவிலும் (வரிகள் 58-66) தக்கயாகப்பரணி (வரிகள் 777, 809-810)-யிலும் குறிக்கப்பட்டுள்ளன.* இன்னும் இவன் திருவாரூரில் உள்ள அப்பர், சுந்தரர், சம்பந் தர் திருவுருவங்கட்குப் பூசை முதலியன நடக்கத் தானம் செய்துள்ளான் என ஒரு கல்வெட்டுக் கூறு வதால்** இச் சோழனது சிவபத்தியும், சமயசாரி யர் மீது இவன் கொண்டிருந்த பெருமதிப்பும் உணரலாம்.

54 Ins. 271 of 1913; 55 Ins. 533 of 1922.

ஒட்டக்கூத்தர், இரண்டாம் குலோத்துங்கன் அவையில் பெரும் புலவராக வீற்றிருந்தார். அவர் விக்கிரம சோழன் காலத்திலும், இவன் காலத்திலும் இவன் மகன் இரண்டாம் இராசராசன் காலத்திலும் இருந்தவராவர். இம்மூவர்மீதும் உலாப் பாடியுள்ளார்.

குலோத்துங்கன், "ஒட்டக்கூத்தன் பதாம் புயத்தைச் சூடுங் குலோத்துங்க சோழனென்றே யெனைச் சொல்லுவரே" எனப் பாடியவன். கூத்தரால் உலாவும், பிள்ளைத் தமிழ் மாலையும் பெற்றவன். குருபரம்பரை 'கிருமிகண்ட சோழ'னென்று கூறுவது இவனையே என்பர். இதற்குக் காரணம் இவன் தில்லைத் திருச்சித்திரக்கூடத் திருமாலைக் கடலில் போட்டதோடு வைணவ ஆசாரியரில் தலை சிறந்தவரான இராமானுசரைத் துன்புறுத்தியதே யென்று 'குருபரம்பரை' நூலால் தெரிகிறது.

---

* *"சிற்றம் பலமுந் திருப்பெரும் பேரம்பலமும்*
*மற்றும் பலபல மண்டபமும்—சுற்றிய*
*மாளிகையும் பீடிகையும் மாடமுங் கோபுரமும்*
*சூளிகையுமத் தெருவுந் தோரணமும் ஆளுடையான்*
*கோயிற் றிருக்காமக் கோட்டமுமக் கோயில்*
*வாயிற் றிருச்சுற்று மாளிகையும்—தூயசெம்*
*பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பறுத்து*
*முன்னிற் கடல்கடலுண் மூழ்குவித்த—சென்னி"*

—இராஜராஜ தேவருலா.

*"முன்றிற் கிடந்த கருங்கடல் போய் முன்னைக்*
*கடல்புகப் பின்னைத்தில்லை*
*மன்றுக் கிடங்கண்ட கொண்டல் பெற்ற*
*மரகத மேருவை வாழ்த்தினவே"*

—தக்கயாகப்பரணி.

** S. I. I. IV. 397

இவன் சைவம் தழைக்கச்செய்து, சிவாலயங்களுக்கு வேண்டியன உதவிவந்தான் என்று தெரிகிறது.

## திருத்தொண்டர் புராணம் கண்டமை

இரண்டாவது குலோத்துங்கனது முதல் அமைச்சராகத் திகழ்ந்தவர் குன்றத்தூர்ச் சேக்கிழாராவர். அரசியல் அறிவு, நிறைந்த புலமை, சிறந்த ஒழுக்கம், அழுத்தமான சைவப்பற்று முதலியன உடையவர். அநபாயன் சிறந்த புலவன். தனது ஓய்வு நேரத்தில் இலக்கிய நூல்களைக் கேட்டு இன்புற்று வந்தவன். சேக்கிழாரும் சைவ நாயன்மார்களது வரலாற்று நூல் ஒன்றைத் தாம் குறித்துள்ளதனைக் கூறினார். அரசன் புலவனாதலின் சேக்கிழாரது உழைப்பை அறிந்து நாயன்மார்களது வரலாற்றைப் பெரியதோர் காவியமாகப் பாடியருளுக என வேண்டினான். சேக்கிழார் அதற்கிசைந்தார். தில்லைச் சந்நிதியில், கூத்தப்பெருமான் அந்நூலின் முதல் அடி 'உலகெலாம்' என எடுத்துக்கொடுக்கப் பரவசமடைந்து, ஓராண்டளவில் புராணத்தையும் பாடி முடித்தார். அநபாயனும் தில்லை வந்து சேர்ந்தான். நாட்டில் உள்ள புலவர் யாவரும் வரவழைக்கப்பட்டனர். கூத்தப்பெருமான் திருக்கோயிலில் திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றப் பெற்றது. அரசன் இன்பக்கடலில் ஆழ்ந்தான். சேக்கிழாரது பெருமையையும், அவர் பாடிய நூற் பெருமையையும், உலகறிய அவரையும், அவரது நூலையும் யானை மீதேற்றித் தான் அருகிருந்து கவரிவீச நகர்வலம் செய்வித்தான்;

அவருக்குத் "தொண்டர் சீர் பரவுவார்" என்ற பட்டமும் அளித்தான். திருத்தொண்டர் புராணம் சைவருக்குரிய பெரிய புராணமாகவும் திருமறையு மாகியது.

## இரண்டாம் இராசராசன்

இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பின் சிங்காதனமேறியவன் அவன் மகன் **இரண்டாம் இராசராச சோழன்** ஆவன். இவன் கி. பி. 1146 முதல் 1162 வரை சோழர் பேரரசைத் தாங்கினன். ஆனால் தன் தகப்பனை குலோத்துங்கனைப் போல ஒரு சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவனுகவும் மற்றென்றில் வெறுப்புடையவனுகவும் இல்லை. இவன் தகப்பன் வேரறக்களைந்த வைணவத்தையும் இவன் விருத்தி செய்தானெனத் திருநாகேசுவரத்து ஒரு கல்வெட்டு விளக்குகின்றது. இவன் தன் முன்னோர்களைப் போலவே சிவபத்தி யுடையவன். பல சிவாலயங்களுக்குத் திருப்பணி செய்திருத்தலோடு நிபந்தங்களையும் விட்டிருக்கிருன். மற்றும், இரண்டாம் இராசராசன் திருப்பணி செய்தவை திருப்பனந்தாள் கோயிலும்,** தாராசுரம் "இராசராசேச்சரமும்" ஆகும்.

---

**திருப்பனந்தாள் கும்பகோணத்துக்கு வடகிழக்கு 15 மைலிலும், ஆடுதுறை இருப்புப்பாதை நிலையத்துக்கு வடக்கே 6½ மைலிலும் உள்ளது. இறைவன் பெயர் சடையப்பர், அம்பிகை பெரிய நாயகி. கோயில் தருமபுர ஆதீனத்து ஆளுகைக்குட்பட்டது; சம்பந்தரது தேவாரப் பதிகம் பெற்றது. ஆலயத்துக்குத் தாடகேச்சுரம் என்பதும் பெயர். தாடகை என்னும் ஒரு மாதின் அன்புக்காகச் சாய்ந்திருந்த சிவலிங்கப் பெருமான் யானை, சேனை முதலியவைகள் கயிற்றைக் கட்டிக் கொண்டு இழுத்து நிமிராமற், குங்குலியக்கலய நாய

**தாராசுரம்*** என்னும், இராசராசேச்சரம் கும்ப கோணத்திற்கு அடுத்துத் தென்மேற்கில், தாரா சுரம் இருப்புப் பாதைத் தலத்திலுள்ளது. **கோயில் எடுப்பித்த காலத்தில் பல பிராகாரங்களுடைய** தாய், சுவாமிக்கும், **தேவியாருக்கும் தனிப்பட்ட கோயில்களை** உடையதாயிருந்தது. **கால அளவில்** பிராகாரங்கள் அழிந்தும், சுவாமி **கோயிலுக்கு** எதிரேயுள்ள கோபுரம் ஒன்று மாத்திரம் நிற்கவும், அதன் அடுத்தபிராகாரத்தில் சுமார் **230** அடி அகல முள்ள திருக்குளமும், தேர்வீதியும், தேர்த்தள

---

ஞர் அக்கயிற்றைத் தம்முடைய கழுத்திற் கட்டி இழுத்தவுடனே அவருடைய அன்புக்காக நிமிர்ந்தருளிய தலமாகும்.

கோயிற் சிற்பங்கள் பல்லவர் கால வேலைப்பாடு உடை யன. கோயில் வரலாற்றினையும் குங்குலியக்கலையர் சரித்திர மும் ஒட்டிய, சிற்ப உருவங்கள் காணத் தகுந்தவையாகும். Vide. Epi. Rep. *1908, 1914, 1932.*

* **தாராசுரம்** என்னும் ஊர்ப் பெயர் இரண்டாம் இராச ராசனது இயற் பெயரால் இராசராசபுரம் என்றிருந்து, நாளடைவில் இராசராசுரம், ராராசுரம், தராசுரம் என மரு விற்றென்பர். பாண்டியன் திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீவல்லப தேவனின் (Ins. *23* of *1908*) கல்வெட்டில் "இராராசுரம் உடைய நாயனுருக்குக் கோயிலில் பழுது பார்ப்பதற்காகவும், விழாக்களுக்காகவும், பொருள்தானம்" என்றிருப்பதிலும் இதன் திரிபை நோக்கலாம். இந்த இராசராசபுரம் தக்கயாகப் பரணியின் கடைத்திறப்பு என்ற பகுதியிலும் ஒட்டக்கூத்த ரால் குறிக்கப்பெற்றுளது. சுவாமி பெயர் கல்வெட்டுக்களில் **இராசராசேசுவரமுடையார்** என்றிருப்ப, புராண வரலாற்றின்படி சுவாமியை **ஐராவதேசுவரர்** எனவும், அம்பிகையைத் **தெய்வ நாயகி** எனவும் வழங்குகின்றனர். அதன்படி, முனிவர் சாபம் பெற்ற யமதேவன் வெம்மை நோய் தணியாது, பலதலங்கள் திரிந்து சிவபெருமானின் திரிசூலம் ஊன்றிய இடத்தில் தோன்றிய இத் திருக்குளத்தில் மூழ்கி அருள் பெற்றான் எனவும், துர்வாச முனிவர் சாபம் பெற்ற இந்திரனது யானை தனது வெண்மை நிறம் மாற, அந்நிறத்தை மறுபடியும் இக்

மண்டபமும் உள்ளன. சுவாமி கோயில் திருவாயிற் கோபுரம் நுழைந்தவுடன் எதிர்ப்படுவது அழகிய "இராசகம்பீரன் மண்டபம்" ஆகும். இம் முன் மண்டபத்திலுள்ள கற்றூணில் "ராசகெம்பீரன் மண்டபம்" என்று வெட்டப்பட்டிருக்கிறது. இவ் விரண்டாம் இராசராசனுக்கு "ராசகம்பீரன்" என்ற சிறப்புப் பெயர் இருப்பதால் இவன் இம் மண்டபத் தைக் கட்டியிருக்கலா மென்றும் கருதுகின்றனர்.* இக்கோயில் மிகவும் அழகிய சிற்ப நுட்பங்களமைந்தது. திருக்கோயிலானது குதிரைகள் பூட்டிய தேர்ச்சக்கரமுள்ள இரதம் போலச் சித்தரிக்கப் பெற்றிருக்கிறது. சற்றுச் சமீபத்தில் தனியாக வுள்ள அம்பிகையின் கோயில் முன் மண்டபமும், நீரில் மிதக்கக்கூடிய தெப்பம் போல நிருமாணித் திருப்பதும் புலனாகும். இவ்விரு கோயில்களும், சுவாமி கோயிலின் பலபாகங்களிலொன்றாகிய நடராசர் மண்டபமும் அரியதோர் சிற்ப நிருமாண மாகும். அதன் தூண்கள் ஒவ்வொன்றும், மேற் கட்டியும் மிக்க அழகிய சிற்பத்திறனும் வாய்ந்த வையாகும். அதற்கடுத்த திருச்சுற்று மாளிகையி லுள்ள பிக்ஷாடனருடன் விரகவேதனையிலகப் பட்ட தாருகாவன முனிவர் பத்தினிகளும், இதன் அடுத்த பத்தியில், மற்றும் 108 சிவாசாரியர்களு டைய சிறு உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கின்

---

குளத்தில் குளித்து அது பூசித்துப் பெற்றமையால் சுவாமிக்கு **ஐராவதேசுவரர்** என்றும், திருக்குளத்திற்கு **யமதீர்த்தம்** என்றும் பெயர்கள் வழங்கலாயின எனவும் தெரிகின்றன—. Epi. Rep: *1926-27.*

* Vide, Ins. *255* of *1927;* Ins. *16* of *1908;* Epi. Rep; *1908; 1920;* also J. I. S. O. A. II. i. p. *30*. also Epi. Rep.; *1915.*




தாராசுரம் திருச்சுற்றாலயச் சிவாசாரியர்களது சிற்ப உருவங்கள்

உரிமை :

றன. அவற்றுள் சில பெயர்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளன.* இவர்கள் யாவரெனவும், எதற்காக இவர்களது உருவங்கள் இக்கோயிலில் செதுக்கப்பட்டுள்ளன என்பதும் ஆராய்தற்குரியவனவாம்.

சோழ மன்னர்கள் அழுத்தமான சிவபத்தர்கள். சாத்திர முறையாகத் தீட்சை பெற்ற சைவ சீலர்களாகவும் இருக்கலாம். அங்ஙனமாயின் அவர்களுக்கு இராஜ குருக்களும் இருந்திருத்தல் வேண்டும். சிவபாதசேகரனை முதல் இராசராசனுக்கு **ஈசான சிவபண்டிதர்** இராச குருக்களாக

---

*24. நாங்கூருடையான் மாதேவரான தத்புருஷ சிவர்.
25. நாங்......செய்ய பாதத்நாரான அகோர சிவர்.
26. நல்லாவூர் பொன்னம்பலத்தாரான ஈசான சிவர்.
33. ஆயம்பூருடையாரான சதாசிவர்.
34. காவர மங்கலமுடையரான சந்திரசேகரரான ஆநந்த சிவர்.
35. ஐயூருடையார் திருமறைக்காடுடையரான ஈசான சிவர்.
39. வேற்குடையார்......தத்புருஷ சிவர்.
40. கொற்றங்குடையரான சிவகருணலயரான ஈசான சிவர்.
54. மண்ணக்குடையார் மால்தேவரான வைராக்கிய சிவர்.
55. வடுகக்குடையார் ஆநந்தக் கூத்தரான ஈசான சிவர்.
70. ....................சதாசிவர்.
100. ...........பொன்னம்பலக் கூத்தரான தர்ம சிவர்.
107. பெரு வேளூர்க் கிழவர்...........தர்ம சிவர்.
108. மழவச்ச உடையார் திருச்செம்பொன்பள்ளி உடையார்.

பெயரெல்லாம் கிரந்தஎழுத்தில் வெட்டப்பட்டிருப்பினும், யாவரும் தெரிந்து கொள்ளுமாறு தமிழெழுத்தால் இங்கு காட்டப்பட்டுள்ளன.—திருவாரூர்ச் சோமசுந்தர தேசிகர்.—செந்தமிழ் xxvi. பக்கம் 468.

இருந்தார் என்பது (S. I. I. II-90) மேலே கண்டோம். அவன் மகனான முதல் இராசேந்திரனுக்கு **சர்வசிவ பண்டிதர்** இராச குருவாக இருந்தார் (S. I. I. II-20). முதல் இராசாதிராசனால் "குரு தேவர்" என்று மதிக்கப்பெற்ற ஒருவர் அவர் கல்வெட்டுக்களில் (413 of 1902) காணப்படுகிறார். முதற் குலோத்துங்கன் தன் குருதேவர் சொன்னபடி 108 சதுர் வேதிகட்கு ஒரு கிராமத்தைப் பிரமதேயமாக விட்டான் (201 of 1907)-விக்கிரம சோழன் காலத்தில் இருந்த சுவாமி தேவர் ஸ்ரீகண்ட சிவன் அவனது குருவாக இருக்கலாம். ஸ்ரீகண்ட சம்புவின் மகனாரான சோமேசுவரர் என்ற ஈசுவர சிவன் என்பவர் மூன்றாம் குலோத்துங்கனது இராச குருவாவர். இவர் சிவ தரிசனத்தில் தேர்ச்சி பெற்றவர்; 18 வித்தைகளில் வல்லவர்; உபநிடதங்களில் உள்ள சிவநெறியை விளக்கியவர். **சித்தாந்த ரத்நாகரம்** என்ற நூலின் ஆசிரியர் (A.R.E 1908 P. 68. Ins. 190 of 1907). இவரே சுவாமி தேவர் எனப்பட்டவர். அரசன் திருக்கடவூர் கோயிலுக்கு இருவரை அர்ச்சகராக நியமித்த கட்டளையை இச் சாமி தேவர் மாற்றி வேறு இருவரை நியமித்தார். அதனை அரசன் ஆமோதித்தான் (Ins. 40 of 1906) என்பதிலிருந்து, இந்த இராச குருக்கள் சோழ மன்னர்களுடன் பெற்றிருந்த செல்வாக்கை அறியலாம்.

முதலாம் இராசராசனது குருவான ஈசான சிவன் **சித்தாந்த** சாரம் என்ற நூலை எழுதியவர். திரிலோசன சிவாசாரியர் என்பவர் **சித்தாந்த சாராவளி** எழுதியவர் (40 of 1906). முதல் இராசேந்

திரன் கங்கைக் கரையிலிருந்து சைவாசாரியர்களைத் தமிழகத்திற் குடியேற்றினான் என்று **சித்தாந்த சாராவளி**யின் முகப்பில் கூறப்பட்டுள்ளது.

சோழப் பேரரசர்கள் கட்டிய கோயில்களில் இச் சிவாசாரியர் உருவங்கள் சிற்பங்களாக இருத்தலால் இவ்வுருவங்கள் சோழர் காலத்தில் சிறப்புப் பெற்ற சிவாசாரியர்களுடையனவாக இருந்திருத்தல் வேண்டும் என்று கொள்ளலாம். இவற்றில் சில முன்சொன்ன இராச குருக்கள் சிலைகளாகவும் இருக்கலாம்.

இப்பெருமக்கள் தமது வாழ்க்கையாலும் அவர்களில் சிலர் இராச குருக்களாக இருந்து வந்தமையாலும், சைவ சமயம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் எந்த உன்னத நிலையை அடைந்திருந்ததென்பது தெரிந்துகொள்ளுவ தொன்றாகும்.*

மற்றும் சுற்றாலயத்துச் சந்நிதிகளும், சுவாமி கோயில் கருப்பக்கிருகத்துக் கிழக்கு மேற்குச் சுற்று அடிப்பாகத்துப் பட்டியற் பகுதிகளில் சைவ நாயன்மார்களுடைய வாழ்க்கையில் முக்கியமான ஒவ்வொரு நிகழ்ச்சியைக் குறித்த தொண்ணூறு சிற்ப உருவங்களும், அவற்றின் கீழ் நாயன்மார் பெயர் குறித்த எழுத்துக்களும் காணத் தக்கவையாகும்.* இக்கோயில் சிற்பக்

---

* Ann : Rep : *1920* pp. *102* ff; இத்தகைய நாயன்மார்களது வாழ்க்கைச் சிற்பங்கள், மேலைக்கடம்பூர் கோயிலிலும், பழையாறை வடதளியிலும், காஞ்சி ஏகாம்பரர் கோயிலிலும் காணப்படுதாகும்.

* சைவ சமய வளர்ச்சி — டாக்டர் இராசமாணிக்கனார்— பக்கம் *225-227* காண்க.

கலைக்கு ஒரு நிலைக்களமெனக் கூறலாம். இங்குக் காணுறும் இன்னும் மற்ற சுவர்ப் புரைகளி லுள்ள தெய்வத் திருவுருவங்களும், நாயன்மார் களது வாழ்க்கையை உணர்த்தும் சிற்பங்களும் மிகச் சிறப்புடையன. அக் காலத்தில் சைவ சமய உணர்ச்சி உன்னத நிலையிலிருந்தமைக்கு இச்சிற் பங்களே சான்ருகும்.

அரசாங்க இலாகாவினரால் பரிசோதிக்கப் பெற்ற 52 கல்வெட்டுக்கள் இக்கோயில் மதில் களில் பொறிக்கப்பட்டுள்ளன. அவைகளுள் பெரும்பாலன, இராசராசன் II,[56] (கி பி. 1146-1163), இராசாதிராசன் II,[57] (கி பி. 1162-78), குலோத்துங்கன் III, (கி. பி. 1178-1218), வீர பாண்டியன் முதலியோர்களுடையன ஆகும். கவனிக்குமிடத்து இக்கோயிலானது இரண்டா வது இராசராசனுல் கட்டப்பெற்றும், மூன்ருவது குலோத்துங்கனுல் பின்னர் முழுதும் செப்பனிடப் பட்டும் இருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. கோயிலின் கிழக்குத் திருச்சுற்று மாளிகையின் வடபாகத்தில் இக்கோயிலை எழுப்பிய சோழராச னதும் அவனது தேவியாருடையதுமான உருவச் சிலைகள் இருப்பதைக் காணலாம்.

இவன் அவைக்களத்தேயும் ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும் இருந்தாரெனத் தெரிகிறது. பலபடி யாக அவனை ஒட்டக்கூத்தர் தனது உலாவிலும், ஈட்டி எழுபதிலும், தக்கயாகப்பரணியிலும் சிறப் பித்துள்ளார்.

---

56 * Ins. *17, 18* of *1908* also A. R. E. pp. *80-82.*
57 Ins. *18, 19* of *1908.*

இரண்டாம் இராசராசனுக்கு, புவனமுழுதுடையாள், தரணிமுழுதுடையாள், உலகுடைமுக்கோக்கிழான் அடிகள், அவனிமுழுதுடையாள், தென்னவன் கிழானடிகள் எனத் தேவியர் ஐவர் இருந்தனர். இவர்களிடம் இவனுக்கு இருமக்கள் பிறந்தனராயினும் அவர்கள் ஒன்றிரண்டு வயதுள்ள மக்கள் என்றே ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. கி. பி. 1162-இல் இவன் நோய்வாய்ப்பட்டு இறந்தானெனவும், இவனது ஆணைப்படி நான்காண்டுகள் இவன் பெயராலேயே இராச்சியம் நடந்துவந்ததும் கி. பி. 1166-இல் சோழ அரசர் வழிவந்த இராசாதிராசதேவரை திருமுடி சூட்டும்படி செய்தானெனவும் தெரிகிறது. இவனது மெய்க்கீர்த்திகளில் ஒன்றை இரண்டாம் இணைப்பில் காண்க.

## இரண்டாவது இராசாதிராசன்

ஆகவே, இராசராசனுக்குப் பிறகு விக்கிரமச் சோழன் மகள் வயிற்றுப் பெயரனாகிய **இரண்டாவது இராசாதிராசன்** கி. பி. 1162 முதல் 1178 வரை அரசு வீற்றிருந்தான். இவனது இயற்பெயர் எதிரிலிப் பெருமாள் என்பது. இவனுடைய சிற்றரசர்கள் பலர் கோயிற்றிருப்பணிகளில் ஈடுபட்டு, திருவாலங்காடு, திருப்புலிவனம் சிவன் கோயில் திருப்பணி, திருவக்கரைக் கோயில் கோபுரம், கீழூர், அத்தி (கேரளாந்தக நல்லூர்) நிபந்தங்கள், திருப்பாசூர் பலதானங்கள், திட்டகுடி நிலதானங்கள் முதலிய கோயில்களுக்கு நிபந்தங்களும், திருப்பணிகளும், செய்துள்ளமை பல கல்வெட்டுக்களால்[58] காண்பன. மேலும் இவன் காலத்தில்,

58 Ins. 433 of 1924.

மாயூரத்திற்கு அண்மையிலுள்ள பல்லவராயன் பேட்டையில் பல்லவராயனுை திருச்சிற்றம்பலம் முடையான் பெருமான் நம்பியால் எடுக்கப்பெற்றது இராசராசேச்சரம் என்ற சிவாலயமுமாகும்.[59]

## மூன்ரும் குலோத்துங்கன்

மூன்ரும் குலோத்துங்கன், இராசாதிராசனுக்குப் பிறகு (1178-1218) தனது 18-ஆம் பிராயத்தில் கி. பி. 1178-இல் பட்டத்தை ஏற்ருனெனத் தெரிகின்றது. இவனது நாற்பது ஆண்டுகள் நிரம்பிய [கி. பி. 1218] இராச்சியபாரத்தில் சோழர் பேரரசை நிலைநிறுத்திப் பல துறையிலும் வளம்பெறச் செய்தான். குலோத்துங்கன் தில்லைச் சிற்றம்பல வாணருடைய ஏகபத்தன் என திரிபுவனக் கல்வெட்டு கூறுகின்றது. சிறந்த சிவபத்தன். இவனது ஞான குரு சோமேசுவரர் என்ற ஈசுவர சிவன் என்பவர் வடநாட்டில் லாட தேசத்தவர்; ஸ்ரீகண்டசம்பு என்பவர் மகனர்; மிக்க சைவப் பெரியார். இவரே குலோத்துங்கனுல் கட்டி முடிக்கப்பெற்ற திருபுவனம் கம்பகரேசுவரர்* கோயிலைச் சோழனது ஆணையால் பிரதிட்டை செய்தவர்.

திருபுவனம் கோயிலைப் பற்றிய கதையொன்று திருவிடைமருதூரில் சிறப்பிக்கப் பட்டுள்ளது. அதாவது, சோழன், பிராமணனொரு

---

59 Ins. 195 of 1904; 202 of 1902; 150 of 1930.

* Vide, Epi. Rep. 1907, para 65; Ins. 159, 160 of 1911. திருபுவனம் கோயில் தருமபுர ஆதீன கர்த்தர்களின் ஆளுகைக்

வனுக்குக் கொலைத் தண்டனை விதித்ததாகவும், அதன் பயனாக அவனது ஆவி அரசனைப் பகலும் இரவும் தொடர்ந்ததென்றும், அப் பிரமஹத்தி தோஷத்தை நிவர்த்திக்க எல்லாச் சிவதலங்களையும் தரிசித்தும் பயன்படாது திருவிடைமருதூரில் அத்தோஷம் நீங்கிற்றென்றும், தோஷம் அரசன் கோயிலுக்குச் சென்று வெளிவரும்வரை வெளியே காத்துக்கொண்டிருக்கும் வழக்கம் இங்கும் இருக்க, அரசன் அதனை இறைவன் முன் விண்ணப்பிக்க, அதனைத் தொடராது தப்பிக்கும் வழியை இறைவனே கோயில் கருப்பக் கிருகத்திலிருந்தே ஒரு துவார வழியைக் காட்டிப் பின்பக்கம் தப்புவித்து, மேற்குக் கோபுரவாசல் வழியைச் செய்ததாகவும், அவ்வாறு தப்பித்து ஒரு மைலிலுள்ள கிராமம் வரை குதிரைமேல் ஓடோடியும், அதற்கப்பால் திரும்பிப் பார்க்கப் பிரமஹத்தி பின்தொடராதிருக்கக் கண்டு மகிழ்ச்சியெய்தி அவ்விடமாகிய திருபுவனத்திலேயே, திருபுவன ஈசுவரருக்குத் தன் நடுக்கத்தினின்றும் நீக்கியதன் அறிகுறியாகக் கம்பகரேசுரர் (தமிழில், 'நடுக்கந் தீர்த்த நாயகர்' என்பது) எனப் பெயரிட்டுக் கோயில் எடுப்பித்

---

குட்பட்ட 27 கோயில்களிலொன்றாகும். கோயில் மிக அழகான வேலைப்பாடமைந்தது. கல்வெட்டுக்களில் இறைவன் திருபுவன முடையார், திருபுவன ஈசுரமுடைய மகாதேவர் எனக் குறிக்கப்படுகிறார். அம்மை அறம் வளர்த்த நாயகி. இறைவனது கருப்பக்கிருக விமானம் முதலியவை கங்கை கொண்ட சோழேச்சுரத்தையும் தஞ்சை இராசராசேச்சரத்தையும் ஒத்தனவாகும். இக் கோயிலுக்கு இரண்டு பிராகாரங்கள் இருக்கின்றன. முதற் பிராகாரத்தில் வடபகுதியில் அம்பிகையின் ஆலயமும், அதன் கீழ்பால் சரபேசராலயமும் உள்ளன.

தானென்பது வரலாறு.* இன்னும் திருவிடைமருதூர்க் கோயிலின் கிழக்கு வாயிற்பக்கத்து வாசலில் பிரமஹத்தி இருப்பதையும், அரசன் தப்புவித்த கருப்பக்கிருகத்துச் சுவர் பக்கலிலுள்ள ஒரு துவாரத்தையும் கொண்டு இவ்வரலாற்று உண்மை அறியப்படும். இன்னும் இக்கோயிலில் பொறித்துள்ள கல்வெட்டுக்கள் இவ் வரலாற்றை வலியுறுத்துவன.

குலோத்துங்கன் காலத்து எல்லாச் சமய நிலையங்களும் சிறப்புப்பெற்றன. கோயில்கள் செம்மையான மேற்பார்வையிலிருந்தன. விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. குலோத்துங்கனது பிற்பகுதியான பதினறு ஆண்டுகளில் அமைதி நிலவியது. அரசனும், தனது முழு மனத்தை இந் நிலையங்களின் வளர்ச்சியில் செலுத்துவதானுன்.

இவனது 26-ஆம் ஆட்சி ஆண்டில் உத்தர மேரூர்ப் பிடாரியார்க்கும், சப்த கன்னியர்க்கும் பத்து வேலி நிலம் தேவதானமாக விடுத்தான்.(a) திருவொற்றியூர்ச் சிவபெருமானுக்குத் திரு அணிகலன்களும், மதுரை ஆலவாய்ப் பெருமானுக்குத் தன் பெயரால் திருவீதியும், திருநாளும் அமைத்தான். தென்னுட்டாரிடம் திறை கொண்ட பொன்னுல் அக் கோயில் வேய்ந்தான். இறையிலி நிலங்கள் பல அளித்தான். தில்லை நடராசப் பெருமானது சந்நிதி முக மண்டபத்தையும் அம்மன்

---

* Epi. Rep. 1907-8. para. 65. இங்கு காணும் சரபேசர் ஆலயம் 17-ஆம் நூற்றுண்டில் விஜயநகர அரசர்களால் ஆனதாகும்.

(a) S. I. I. IV. Ins. 849. * இங்கு சிறுத்தொண்ட நாயனர் சரிதம் ஆறு பாகங்களாக சிற்ப அமைப்புப் பெற்றுள்ளது.

கோபுரத்தையும், கோயில் திருச்சுற்றையும் கட்டு வித்தான். "முடித் தலைகொண்ட பெருமாள் திரு வீதி" என்று மேற்குத் தெரு ஒன்றையும் எடுப் பித்தான். இவைகளின் காரணமாகத் தில்லை சபா பதியின் ஏக பத்தனெனவும் கூறப்பட்டான். இன் னும் திருவாரூரில் உள்ள சபா மண்டபமும், பெரிய கோபுரமும் இவன் முயற்சியால் ஆகியவை. இவன் கச்சி ஏகம்பர் கோயிலையும்* புதுப்பித்தா னென இரு புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள் இயம்புகின்றன. இன்னும் மத்தியார்ஜுனம் என்ற திருவிடைமருதூர்க் கோயிலும்,** தாரா சுரம் ஐராவதேசுவரர் கோயிலும் இவன் காலத்தே மிக்க சீர்பாடுற்றனவாகும். இன்னும் மற்றொன்று, சீர்காழிக்கு மேற்கே நான்கு மைலிலுள்ள தனி நாயக சதுர்வேதி மங்கலத்திலுள்ள தலைஞாயிறு கொகுடிக் கோயிலும் குறிக்கத்தக்கதாகும்.

---

** திருவிடைமருதூர் கோயில் காவிரியின் தென்கரையில் அமைந்ததும், கும்பகோணத்திற்கடுத்து, 5 கல்லில், தென் னிந்திய இருப்புப்பாதை நிலையமுள்ளதுமாகும். திருவாவடு துறை ஆதீன கர்த்தர்களது ஆளுகைக்குட்பட்டது. சுவாமி பெயர் மகாலிங்கேசுவரர், அம்பிகை: பெருநலமாமுலை நாயகி. கோயில் சமயாசாரியர் மூவராலும் பாடல் பெற்றது.

"கனியினுங் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவைநல் லாரினும்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே"—அப்பர்.

இன்னும் இத்தல சம்பந்தமாக, பட்டினத்துப்பிள்ளையார் அருளிய திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, ஞானக்கூத் தர், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய புரா ணங்கள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய உலா, திரிபந்தாதி, மருதவாணர் தோத்திரப்பதிகம், அனந்த பாரதியாரது தொண்டி நாடகம், கருவூர்த் தேவரது திரு விசைப்பாவும் உள்ளன.

கோயிலுக்குப் போதிய பொருளைக் கிராமத்தார் தமது வாணிகப் பொருள்களின்மீது இடப்பட்ட வரியை, இறையிலியாகக் கோயிலுக்கே கொடுக்கும்படி கட்டளை இடப்பட்டனர். மூன்றும் குலோத்துங்கன் தனது 28-ஆவது ஆண்டுச் சாசனத்தில் குளிக்கரை கிராமத்தார் அவ்வித வரியை ஊர்ச்சபையாரே வசூலிக்கும்படியாகக் கல்வெட்டு* தெரிவிக்கின்றது. அவன் காலத்தே, திருச்செங்காட்டங்குடியினின்று திருமருகல் வரை சீராளப் பிள்ளையார் ஊர்வலம் செல்வதற்கான பாதை ஏற்படுத்த நிலம் வாங்கப்பெற்று, அதனை அரசன் இறையிலியாக்கித் தந்தனன்.

மூன்றுவது குலோத்துங்கனது 40-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, இப்போதைய புதுக்கோட்டைச் சீர்மை, திருவரங்குளம் கிராமத்தில் தேவதானமாக இடப்பட்ட நிலங்களுக்கு இறையிலியாக்கியும், அந் நிலத்திலுள்ள குடிமக்களை ஊரார் காப்புச் செய்யவும், பசுவோ, மற்றும் யாது பொருளோ களவாடப்பட்டால் ஊரார் அதற்கு அபராதமாகத் தங்களது நிலத்தினின்று சுமார் ஒரு ஏக்கர் அளவுள்ள நஞ்சை நிலத்தைக் கோயிலுக்கு உத்திரவு செய்வதாகவும் ஒப்புக்கொள்ளச் செய்யப்பெற்றனர் என்று கூறுகிறது. இன்னும் கோயில் நிலங்களை அனுபவிக்கும் செட்டி, கைக்கோளர், தேவரடியார்கள், கொல்லர், தச்சர், இடையர்கள் ஆகிய இவர்கள் சாசுவதக் குத்தகையையும் குடிமக்களிடமிருந்து யாதொரு இடைஞ்சலுமில்லாமல் கோயி

---

* Ins 82 of 1911.

லுக்குள்ள பகுதியையுங் கொடுக்கச் சம்மதித்து வாழ்ந்தனரெனவும் தெரிகிறது.

சோழப் பேரரசர்க்கு அடங்கிய சிற்றரசர் பலர். அவர்களும் அவர்கள் தேவியரும் சோழப் பேரரசைப் பின்பற்றியே தமிழகத்தில் பல கோயிற் பணிகள் செய்துள்ளனர். அவருள் மூன்றும் குலோத்துங்கன் காலத்திருந்த **சொக்கச்சீயன்** என்ற **முதற் கோப்பெருஞ்சிங்கனும்** (கி. பி. 1232-1243) ஒரு சிறந்த பெருமகனுவான். இவன் பல்லவ மரபில் வந்தவன். அவன் நடுநாட்டில் உள்ள சேந்தமங்கலத்தை ஆண்டு வந்தான். சிறிது சிறிதாகத் தன் படை வலிமையைப் பெருக்கி, மூன்றும் இராசராசனையே சிறைப்படுத்தியவன். இவன் ஒரு சிறந்த சிவ பத்தன். இவன் சிதம்பரம் பெருங் கோயில் தெற்குக் கோபுரத்தை கி. பி. 1237ல் தொடங்கிக் கி. பி. 1240-ல் எழுநிலைக் கோபுரமாகக் கட்டி முடித்தான். (S. I. I. XII Ins. 1 of 1936-37) இதில் காணும் இரு கயல் உருவங்களைப் பார்த்தோர், இது சுந்தர பாண்டியன் கட்டியதெனக் கூறுவர். இது பொருந்தாது. கோப்பெருஞ்சிங்கன் இதனைக் கட்டியபோது பாண்டியருக்கு அடங்கிய குறுநில மன்னனுகை ஆயினன் என்பதனையே இது உணர்த்தும். இவனது உருவச் சிற்பம், இத்திருக்கோயில் கிழக்குக் கோபுரப் புரைகளில், வலபுறம், ஒரு பெருமிதத் தோற்றத்துடன் நிற்பதைக் காணலாகும்.

இன்னும் இவன் செய்த சிவப்பணிகள் பல. காவிரித் தென்கரையிலுள்ள ஆக்கூர் கோயிலை புதுப்பித்தான் (Ins. 229 of 1921). விருத்தாசலம்

கோயிலுக்கு நந்தவனம் வைக்கவும், பூசைகளுக்குப் பொருள் உதவினான் (Ins. 73 & 83 of 1918). திருவெண்ணெய்நல்லூர் கோயில் விமானத்தைப் புதுக்கினான் (486 of 1921). திருக்கழுக்குன்றம், பிரம்மதேசம், திருவண்ணாமலை இவற்றில் உள்ள கோயில்களுக்குத் தானங்கள் நல்கினான். இன்னும், இவன் மகனான மகாராஜசிம்மன், சிதம்பரம் கிழக்குக் கோபுரத்தைப் புதுப்பித்தான். திரிபுராந்தகம், திராக்ஷாராமம், காளத்தி, காஞ்சி, திருவதிகை, மதுரையிலுள்ள திருக்கோயில்களுக்கும் பல நிபந்தங்களை விடுத்தனன் (A. R. E. 1906. pp. 64).

**திருமடங்கள் :** குலோத்துங்கன் திருக்கோயில்களை மாத்திரமன்றித் திருமடங்களையும் ஆதரித்தான். அவன் கல்வெட்டுக்கள் பல. அவை பல மடங்களையும், சிறப்பாகச் சுவாமி தேவர் என்ற ஒரு சைவ சமய மடத்துத் தலைவர் பிரதிட்டித்த அச்சுதமங்கலம் சிவன் கோயிலுக்குக் குலோத்துங்கன் இறையிலி அளித்ததையும் விளக்குகின்றன. இன்னும் இவர் திருக்கடவூரில்† இச் சோழர் விதித்திருந்த சில பூசை முறைகளை மாற்றி அமைத்ததை அரசனும் ஏற்றான் என்பதிலிருந்து அரசன் இவர்

† திருக்கடவூர்—தஞ்சை, மாயூரம் தாலுக்காவில்—மாயூரமிருந்து தரங்கம்பாடி செல்லும் இரயில் பாதையிலுள்ளது. தருமபுரம் ஆதீனத்தாரது ஆளுகைக்குட்பட்ட தலங்களிலொன்றாகும். சுவாமி அமுதகடேசுவரர். அம்பிகை அபிராமி அம்மையார். இறைவன் காலனை உதைத்து மார்க்கண்டேயர் என்றும் பதினாறு ஆண்டாக இருக்கும் வரம் பெற்றதும், குங்கிலியக் கலயர், காரி நாயனார், அபிராமி பட்டர் அருள் பெற்றதுமான திருத்தலம். இராசராசன் I லிருந்து இராசராசன் III வரையில் உள்ள சோழ மன்னர்களது வள்ளண்மை பெற்ற தலமுமாகும்.

மாட்டுக் கொண்டிருந்த அளப்பரிய மதிப்பு தெற்றெனத் தெரிகின்றது‡. இன்னும் திருவானைக்காவில், காளாமுகரது கோமடம் இருந்தது. 'சதுரானன பண்டித மடம்' என்பது திருவொற்றியூரிலும், 'வாரணாசி பிக்ஷாமடம்' என்பது பந்தணைநல்லூரிலும், **வாரணாசி லக்ஷாத்யாய இராவளரது கொல்லா மடம்** என்பது திருப்பாசூரிலும் இருந்தன. இவை அனைத்தையும் சைவ ஆசாரிய பீடங்களாகக் குலோத்துங்கன் ஆதரித்தான்.§

இவனது பரந்த சமய நோக்கம் பெரிதும் போற்றற்குரியதாகும். இவன் வேலூரில் உள்ள திருமால் கோயிலுக்கு மூன்று சிற்றூர்களை ஒன்றாக்கி, 'குலோத்துங்க சோழ நல்லூர்' எனத் தன் பெயரிட்டுத் தேவதானமாக அளித்தான். அக்கோயிலுக்குக் 'குலோத்துங்க சோழ விண்ணகரம்' எனப் பெயரிட்டான். இவன் ஆதரவுபெற்றுத் திருக்கோவலூர் மலையமான்களும், பல பெருமாள் திருப்பணிகளைச் செய்தனர்.

வைணவப் பற்றுடைய இவன், சமணர்களின் பள்ளிகளையும் போற்றினான். இவனது உயர் அலுவலாளன் மண்டியங்கிழான் குலோத்துங்க சோழ காடுவெட்டி சமணப் பற்றுடையவன். அரசன் இவன் வேண்டுகோளின்படி சமணப்பள்ளி ஒன்றுக்கு இருபது வேலி நிலம் பள்ளிச் சந்தமாக விட்டான்; சமண குருவான சந்திரகிரி தேவர் என்பார்க்குக் கொட்டையூர் ஆசிரியப் பட்டம் கொடுத்தருளி, அப்பையிலே இருபது வேலி நிலம் தான

‡ 40 of 1906.
§ Ins. 357 of 1911, 72 of 1931. III. of 1930.

மாக அளித்தான்; திருநறுங்கொண்டைச் சமணப் பெரும்பள்ளிக்கு வேண்டிய நிபந்தங்களும், அமணப் பிடாரர்க்கும் பத்து வேலி நில வருவாயையும் இறையிலிசெய்து, இந்நிலத்துக்கு அமணப்பிடாரர் சொன்னவாறு செய்வது எனவும், இவர் வசமே இருக்க* எனவும் ஆணையும் பிறப்பித்தான். அப்பெரும் பள்ளியிற் கோயில் கொண்டிருந்த அப்பாண்டார் வைகாசித் திருநாளுடனே, குலோத்துங்கன் தன் பெயரால் ஒரு திருநாள் நடத்தவும் ஏற்பாடு செய்து, அவ்விழாவிற்காகத் தனியே நிலதானம் அளித்துள்ளானெனவுங் கல்வெட்டுக்கள்[59] கூறுகின்றன.

## கலை வளர்ச்சி

மூன்றும் குலோத்துங்கன், கல்வி கேள்விகளிற் சிறந்த புலமை மிக்கவன். இவன் மதுரை சென்று வெற்றி கொண்டபோது, "அருமறை முழுதுணர்ந்த அந்தணரை ஆதரித்தான்" என்றதாலும் "திருவொற்றியூர் வியாகரணசாலைக்கு இறையிலி அளித்தனன்" என்பதாலும், வடமொழிமீது இவன் கொண்டிருந்த பற்றும், நன்மதிப்பும் விளங்குகின்றன. இவனது பேரவையில், புலவர் பலர் ஆதரவு பெற்றனர். கல்வெட்டுக்களில், குலோத்துங்கன் கோவை ஆசிரியர், வீராந்திரப் பல்லவராயர், சங்கரசோழன் உலா ஆசிரியர், குணவீர பண்டிதர், அரும்பாக்கத்து அறநிலை விசாகன், திருவரங்கத்து அமுதனார், பவணந்தி முனிவர், கம்பர் முத

* S. I. I. IV No. 366.

59 S. I. I. VII. Nos. 1011 to 1014.

லிய பெரும் புலவர்களின் பெயர்கள் விரவிவருகின்றன. இவன் காலத்து இலக்கியங்களில், குலோத்துங்கனே, 'தமிழ்வாணர் தெய்வக் கவியாபரணன்' எனவும், 'பாவலர் காவியம் சூடும் குலோத்துங்க சோழன்' எனவும், 'கொழித்துத் தமிழ் கொள்ளும் கிள்ளி' என்றும் பாராட்டப்பெற்றமை தெரிகிறது. கம்பர், இவனது அவைக்களத்தில் இராமாயணத்தைப் பாடிப் புகழும் பெற்றனர் என்பர்.

## மூன்றும் இராசராசன்

மூன்றும் குலோத்துங்கனுக்குப் பின்னர் மூன்றும் இராசராசன் கி.பி. 1216-இல் அரியணை ஏறி, 1246 வரை அரசு வீற்றிருந்தான். இவன், குலோத்துங்கனுக்கு மகனுதல் வேண்டும். இவன் தன்னை இராசராசன், என ஒரு நடைமுறை வழக்கப்படி தனது கல்வெட்டுக்களில் குறிக்கிறுன். இவன், சோழர் பேரரசை முப்பது ஆண்டுகள் தாங்கிறுன்.

குலோத்துங்கன், மூன்றும் இராசராசனுக்குச் சோழ இராச்சியத்தின் மத்திய பாகத்தைப் பின்னமின்றி ஒப்புவித்தபோதிலும், சிற்றரசர்களின் உட்பகைகளும், ஒற்றுமையின்மையும், தனியரசு வேட்கையும் புகைந்துகொண்டிருந்தன. முதற் குலோத்துங்கனுக்குப் பிறகே, சோழர்களின் வலிமை குன்றத் தொடங்கியதென்னலாம். அவன் பிற்போந்தவர்களின் வலிமை குறையவே, அவர்களுடைய தண்ட நாயகர்கள் சிற்றரசர் போன்று மேம்பட ஆரம்பித்தனர். இன்னும் சோழ அரசின் வலிவின்மையால் ஒய்சளர், தெலுங்குச் சோடர்கள், பல்லவன் அவனியாளப் பிறந்தான் போன்றவர்கள்,

வலிமை எய்திச் சோணாட்டைச் சின்னபின்னமாக்கினர். தெற்கே சடையவர்மன் சுந்தரபாண்டியன் I, மேற்கே போசளன் என்பார் பெருவலிமை படைத்து விளங்கினர். காடவர் கோனான பல்லவன் கோப்பெருஞ் சிங்கன்* மூன்றாம் இராசராசனைச் சிறைப்படுத்தவும் ஆயினன். இவன் கி.பி. 1243-இல் சோழநாட்டுப் பகுதியைக் கைப்பற்றி சுமார் 30 ஆண்டுகள் ஆண்டானெனவும் கல்வெட்டுகள் கூறுகின்றன. சோழன் தனது நாட்டை விட்டு ஏகவும், கோநகரமாகிய கங்கைகொண்ட சோழபுரம் கொள்ளையடிக்கப்பட்டுத் தகர்க்கப்பட்டது. சோழன் தாழ்வுற்று, தனது நண்பன் போசள நரசிம்மனது உதவியால் சோழ அரசைத் திரும்பப் பெற்றான். பெற்றுமென்? சோழர் பெருமிதம் குறையவே, சிற்றரசர், தைரியமும் இறுமாப்பும் கொண்டனர்.

இச்சீர்கேடுகளின் இடையிலும் இராசராசன் தன் சமயப்பணிகளை ஆராய்ந்து நோக்கினான். பல சைவ மடங்களுக்கு நிலதானங்கள் இறையிலியாக்கினான். இவனது 18-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு** ஒன்றால் திருவாஞ்சியம் அம்மன்

---

* கோப்பெருஞ்சிங்கனது 15 கல்வெட்டுக்கள் சிதம்பரம் கோவிலில் காணப்படுகின்றன. இவனது கர்நூல் சில்லா, திரிபுராந்தகம் கல்வெட்டொன்று, மகாராஜசிம்ஹன் என்ற இவனால் சிதம்பரம்கோயில் கிழக்குக் கோபுரம் கட்டப்பட்டதென்றும், இவன் போரில் கொணர்ந்த பொருளால் இக் கோபுரத்தின் நாற்புறமும் அழகுபெறத்திகழச் செய்தான் எனவும் கூறுகிறது. இதனை கிழக்கு மேற்கு கோபுரவாயில் நிலைகளிலுள்ள 108 பரத நாட்டிய நிலைச் சிற்பங்களாகவும் காண்க. Epi. Rep. 1914. p. 82.

** 70 of 1911.

கோயிலை இவன் எடுப்பித்தானெனக் காண்கிறோம். கணக்கற்ற இவன் கல்வெட்டுக்களைத் திருக்கச்சூர்[1] கச்சாபகேசுவரர், துறையூர்[2] சோமேசுவரர், கோனேரி ராசபுரம்[3] உமாமகேசுவரர், சமயபுரம் முக்தீசுவரர்[4], திருப்பத்தூர் ஐயனூர்[5], கோவிலூர் மந்திரபுரீசுவரர்[6], திருவீழிமிழலை வீழியழகேசுரர்[7], திருக்காறுவாசல்[8], திருக்கடவூருடையார் கால காலதேவர்[9], கோயில்களில் காணலாகும். அவை இக்கோயில்களுக்கு விடப்பட்ட நிலதானங்களையும் விளக்குத் தானங்களையும் மற்றும் விவரங்களையும் விளக்குவன.

## மூன்றும் இராசேந்திரன்

இந்நிலையில் மூன்றும் இராசேந்திரன் கி.பி. 1246-இல் இளவரசுப் பட்டம் தரித்து, 1279 வரை அரசு செலுத்தினான். இவனே சோழர் பேரரசின் இறுதி மன்னன் இவன் மூன்றும் இராசராசனது மைந்தனென உறுதிகூற முடியாதுள்ளது. கல்வெட்டு ஆராய்ச்சி, இன்னும் இதனை விளக்கவே வேண்டும். அதற்கு முந்திய பத்து ஆண்டுகளாக தன்னுடன்கூட மூன்றும் இராசராசனும், செங்கோல் செலுத்தியதாகவும், கடைசி மூன்று ஆண்டுகளில் இராசேந்திரன் வீறுபெற்று எழுந்து, இழந்து போன நற்கீர்த்தியையும், செல்வாக்கையும், பாண்டியனை முறியடித்தும், ஒருவனைக் கொன்றும் வெற்றி பெற்றானென்றும் திரிபுராந்தகக் கல்

1 270 of 1909. 2 701 of 1909. 3 661 of 1909. 4 746 of 1909. 5 595-6 of 1908. 6 195, 198, 215 of 1908. 7 400, 407, 409, 410 of 1908. 8 454 of 1908. 9 31 of 1906.

வெட்டு ஒன்றில் காணும், "இருவர் பாண்டியர் முடித்தலை கொண்டருளின" என்ற மொழிகளால் அறிகிறோம்.

ஆகவே, இக்கடைசி இராசேந்திரன், மூன்றும் இராசராசனைவிடப் பராக்கிரமனென்றே சொல்ல வேண்டும். இவனது ஆட்சியில் பொறித்துள்ள கல்வெட்டுக்கள் பல கோவிலூர்[1] மத்தியபுரீசுவரர் திருவீழிமிழலை வீழியழகேசுரர்[2], ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி[3] கோயில்களிலும், பிற கோயில்களிலுங் காணப்படுகின்றன. அவனது 7-ஆம் ஆட்சி ஆண்டின் ஸ்ரீரங்கம் சாசனமொன்றில், தான் வட இலங்கையை யழித்த இராமனென்றும், மனுவமிச சேகரனென்றும், மணிமுடிதரித்த பாண்டியனின் தலையைக் கொய்தவனென்றும், அவனது முடிதரித்த தலையை உதைத்தவனென்றும், கர்நாடக அரசின் யமனென்றும், போசள, வீரசோமேசுவரனை வென்றவனென்றும் கூறிக்கொள்ளுகிறான். ஆகவே, இவன் உண்மையில் வீரனென்பது இன்னும் பல சான்றுகளாலும் தெரியவருகின்றன. தான் மாவிலங்கையில் வீர ராக்ஷசர்களை வென்றதும், வடக்கேகாகதியர்கள், சம்புவராயர்கள்,

---

Ins. *(1) 208, 213, 216, 223-1908. (2)* Ins. *412-1908;* திருவீழிமிழலை *காவிரித் தென்கரையிலுள்ள சமயாசாரியர் நால்வர் மாணிக்கவாசகர் உள்பட பாடிய திருத்தலம். மாயூரம்—குற்றாலம் ரெயில் நிலையத்திற்குத் தெற்கே 6 மைல்; கோயில் பெரியதும், வெளவால் நத்தி மண்டபச் சிற்பத்திறன் வாய்ந்ததுமாகும். திருமால் சக்கிரம் வேண்டி அருச்சித்து, தன் கண்ணேயே பூவாகச் சாத்திய தலம். வீழிச் செடிகள் நிறைந்துள்ளமையால் ஊர்ப்பெயர் காரணமாயிற்று. அப்பரும், சம்பந்தரும் படிக்காசு பெற்றதலம். திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்களின் பரிபாலிப்பிலுள்ளதுமாகும். (3)* Ins. *64, 65* of *1892.*

நெல்லூர் நாட்டுத்தெலுங்குச்சோழர்களுடன்போர் செய்ததும், பின்னர் உறவு கொண்டு ஒய்சள வீர சோமேசுவரனுடன் நட்புக்கொண்டதும், அரசியல் நிருவாகத்தில் பல்லாற்ருனும் மேம்பட்டிருந்தா னென்பதும் காணக்கிடக்கின்றன. சோழ அரசு பொதுவாகச் சீர்குலைந்திருந்தும், காடவர்கோன், கலிங்கர், வைதும்பர், நுளம்பர், கங்கர்களும், பிறரும் அவன் கீழிருந்தனர்.

ஆனுலுமென்ன? இராசேந்திரன் கீழ் உள்ள சிற்றரசர்கள் எழ ஆரம்பித்தனர். ஒய்சள வீர சோமேசுவரன் சமயம் பார்த்துச் சோழனுவது பாண்டியனுவது, தலையெடுக்கவொட்டாது ஒவ் வொருவர் மீளும்போது மற்றவருடன் நட்புப்பேணி ஒருமுறை சோழனுக்கும் மறுமுறை பாண்டிய னுக்கும் உதவி புரிந்து தன் ஆதிக்கத்தை எப் போதும்போல நிலையாக வைத்திருந்தான். ஆனுல் மற்ருெரு பெருவெள்ளம் காத்திருந்தது. அதுதான் பாண்டியர்களின் நற்காலம். சடையவர்மன் சுந்தர பாண்டியன் I, கி. பி. 1251-இல் பாண்டிய அரசு கட்டிலேறினுன். அவன் பெரு வீரன். அவனுடன் மூன்ருண்டுகள் இராசேந்திரன் பொருது மயங் கினுன். நெல்லூர் நாட்டில் ஆண்ட சோடதிக்கா என்ற கண்டகோபாலரும் சமயம் பார்த்திருந்தனர். ஆகவே, சோழனும், பாண்டியனும், தெலுங்குச் சோடனும், ஒய்சளனும் ஆகிய இவர் ஒவ்வொரு வரும், தம் தம் ஆட்சியை நிலைநிறுத்த ஒருப்பட்ட காலம். ஆதலின் இராசேந்திரன் எவ்வாற்ருனும் ஒய்சளனது நட்பைப் பெற முயன்ருன். ஆயினு மென்? சடையவர்மனுன சுந்தர பாண்டியன்,

பாண்டிய அரசை மீண்டும் முன்பிருந்த உன்னத நிலேக்குத் தனது ஏழாவது ஆண்டிற்குள் கொண்டு வந்து விட்டான். இராசேந்திரன் கப்பங்கட்டினன். ஒய்சளன் மைசூர் நாட்டிற்குள் ஒளிய வேண்டிய தாயதுங்கூட, சோமேசுவரன் பாண்டியனுடன் போருக்கு வரவே, கி. பி. 1264-ல் கண்ணனூர்ப் போரில் தன் உயிரையும் இழந்தான். இம்மாதிரி யாகப் பாண்டியன் சடையவர்மனது இராச்சியம் நாளொரு மேனியாக வலுக்கவே, இராசேந்திரன் வலி இன்றித் தனது இருப்பிடம் தெரியாது மறைந்திருக்க வேண்டியதாயிற்று.

இவ்வாருகிய நிலேயில் மூன்ரும் இராசேந்திர னது செல்வாக்கு மிகவும் வளங்குன்றியது. அவன் ஒய்சளனது துணேயுடன் 33 ஆண்டுகள் இராச்சிய பரிபாலனம் செய்திருந்தும், வெகு சில கல்வெட்டுக்களே தோன்றின. அவைகளும் அவனது 15-ஆம் ஆட்சி ஆண்டிற்குப் பின்னில்லே. கடைசியானதொன்று, கி. பி. 1259-இல் கடப்பை ஜில்லா, நந்தலூரிலும், மற்ருென்று, கி. பி. 1261-ஆம் ஆண்டிலுள்ளது கர்நூலிலும் காணப் படுவன.

ஆகவே, இராசேந்திரனேப் பற்றிய குறிப்புகள் மிகச் சிலவே. சோழ ராச்சிய குழப்பங்களினுலும், பாண்டியர்களின் ஆதிக்கம் தலேசிறந்த ஒரு வீர ஞகிய சடையவர்மன் முதலாம் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251-1271) கீழ் ஏற்பட்டதனுலும், சோழர் பேரரசு நாளடைவில் சீர்குலேந்தது. மற்றும், சோழர்களின் நல்வினே முதிர்ச்சியாலும் திருவாற் றல்களாலும் நிரம்பிய தலேநகராகிய கங்கை

கொண்ட சோழபுரம், பகை அரசர்களால் முற்றிலும் அழிக்கப் பெற்றுச் சிறுமை எய்தியது. ஆதலின் போதிய குறிப்புகள் வெளிவந்தில. அரசனும் தன் இல்லற வாழ்க்கையில், உறவின் முறையினர் களிடத்தும் நட்புடன் நடந்துகொள்ளாது, தான் இடம்பம் பேசியும், தன் மாமன் முதலியவர்களுடன் விரோதித்ததன் பயனாகவும் அவனுடைய இறுதி ஆக்கம் மிகக் குறைந்தது.

மூன்றாம் இராசேநதிரனது தேவியின் பெயர் சோழகுல மாதேவியார் எனத் திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டு ஒன்றால் தெரிகிறது. பிள்ளை களைப் பற்றிய குறிப்பில் "சேமப்பிள்ளை" என்ற ஒருவனை "நம்மகன்" என்ற பதங்களால் கூறி யிருப்பதால் அவன் குமாரன் என உறுதியாகக் கூற இயலவில்லை. அவனுடைய சிற்றரசர்கள் இருவர் சோழகங்கன், களப்பாளன் என்று குறிக் கப்படுகின்றனர். அவனது வழிபாட்டுத் தெய்வம் தில்லையுளாடும் நடராசனே எனவும் தெரிகிறது.

## சோழர்களின் இறுதி

மூன்றாம் இராசேந்திரனுக்குப் பிறகு, ஒரு அரசன் சோழர் அரசு கட்டிலில் வீற்றிருந்தான் எனக் கூறவும் இடமில்லாது, சோழராச்சிய முழுதும் பாண்டிய இராச்சியத்தில் ஐக்கியமாகி விட்டதெனவும் தெரிகிறது. சில குறுநில மன்னர் கள் சோழர் மரபினர் என 15-ஆம் நூற்றாண்டு வரை ஆங்காங்குத் தோன்றலாயினர். இன்னும் நமக்குக் கிடைத்துள்ள ஆதரவுகளில், தெலுங்குச் சோடர்களும் விஜயநகர அச்சுததேவராயனின் பிற்காலத்தே சோழர்களது பெயரையும் குறிக்

கிறதைத் தவிர வேறு கிடைத்திலது. இறுதியாக, கி.பி. 1554-ஆம் ஆண்டில் கும்பகோணம் ஆதி கும்பேசுவரர் ஆலயத்துக்கு இரண்டு கிராமங்கள் நிபந்தமாக விடப்பட்ட விபரம், சோழர் மரபி லுதித்த, "மகாமண்டலேசுர கிருராஜ ருத்ரதேவ சோழ மகாராஜா"* என்பவர் காலத்தே என்பது தான். இதைத் தவிர, யாதொரு குறிப்பும் பின்னர்க் கிடைத்திலது.

படைப்புக் காலந் தொடங்கிய சோழ மரபினர் பதின்மூன்ரும் நூற்ருண்டிற்குள் இரண்டு தடவை தோன்றி மறைந்தனர். அவர்களது குடும்பத்தினர் எங்கு மறைந்தனரோ! விசயாலயன் காலத்தில் இரண்டாம் முறை ஆரம்பிக்கப் பெற்றும், முதல் பராந்தகனுல் நிலைநாட்டப் பெற்றும் முதல் இராச ராசனுல் விருத்தியாக்கப்பட்டும், நான்கு நூற் ருண்டுகளாகத் (கி. பி, 879-1279) தக்க சிறப்புடன் விளங்கி வந்த சோழராச்சியம் சக்தியற்ற மூன்ரும் இராசராசன், அவன் மகன் மூன்ரும் இராசேந் திரன் என்னும் அரசர்கள் கையிலகப்பட்டுச் சீர் குலைந்து அழிந்தது.

இத்தமிழ் வேந்தர்களான சோழர்கள் தங்கள் ஆட்சியும், வீரமும் இழந்து தாழ்வுற்றனர் எனி னும் அவர்களது ஆதரவின்கீழ் வெளிவந்துள்ள தமிழ் நூல்களும், அவர்களால் எடுப்பிக்கப்பெற்ற கணக்கற்ற திருக்கோயில்களும், வெட்டப்பெற்ற பேராறுகளும், கட்டப்பெற்ற அணைகளும், இன் னும் நிலைபேறுடையனவாய், ஆன்ருேரது பெருமையனைத்தும் தமது பின்ருேருக்கு உணர்த் தும் கலங்கரை விளக்கமென நின்று நிலவுதல் நமக்கு மன ஆறுதலளிக்கின்றது.

# சோழர் கோயிற் பணிகளும் மக்கள் வாழ்க்கையும்

பண்டைக்காலத்துத் தமிழ் மக்கள் வாழ்க்கையில் கோயில்களே தலைமை பெற்றிருந்தன. அக்காலத்தில், கோயில்கள் அரசர்களாலும் பிற அன்பர்களாலும் அளிக்கப்பெற்ற பெரும் பொருளும், நிலமும் உடையனவாய் விளங்கின. கோயிற் காரியங்களை எல்லாம் அவ்வூர்ச் சபையார் நன்கு நடத்திவந்தனர். அரசனும் அரசாங்க அதிகாரிகளும் நாட்டைச் சுற்றிப் பார்த்து வருங்கால் கோயில்கள் திட்டப்படி நடத்தப்பட்டு வருகின்றனவா என்று ஆராய்ந்து வருவது வழக்கம். கோயிற்குரிய செலவு போக எஞ்சிய பொருளின் ஒரு பகுதியைக் கல்வி வளர்ச்சிக்குச் செலவிட்டு வந்தனர் என்றும், ஒரு பகுதியை மருத்துவ நிலையத்திற்குச் செலவிட்டு வந்தனர் என்றும் புலனுகின்றன. மற்றும், கோயில்களின் சில பாகங்களைக் கல்லூரிகளாகவும், பொது மண்டபங்களாகவும் உபயோகப்படுத்தி வந்தனர்.

ஒவ்வொரு பெரிய கோயிலிலும் உள்ள விசாலமான மண்டபங்களிலே திருமுறைகளும், ஏனைய அறிவு நூல்களும், பயன்தரு கலைகளும் பயிலப் பெற்று வந்தன. ஒருபால் வேதமும், திருமுறைகளும், மற்றொருபால் பாரதம், தருமசாத்திரம், புராண இதிகாசங்கள், வியாகரணம், யாப்பு, தர்க்கம், சோதிடம், வான நூல், மருத்துவம் என்பன

வும், மற்றும், பல கலைகளும் ஆலய மண்டபங்களில் கற்கும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வந்தன. செந்தலைக் கல்வெட்டொன்றால் அவ்வூர்ச் சுந்தரேசுவரரது கோயிலில் 'பாரதம்' வாசிக்கப் பெற்றதென்றும், 10-ஆவது நூற்றாண்டுக் கல்வெட்டொன்றால் குடந்தை நாகேசுவரரது கோயிலில் 'பிரபாகரம்' விளக்கப்பெற்ற தென்றும் அறிகிறோம். திருவொற்றியூர்க் கோயிலில்* **வியாகரணதான வியாக்கியான மண்டபம்** ஒன்று அமைக்கப்பெற்ற தென்றும், அதில் வியாகரணம், சோமசித்தாந்தம், பாணினீயம் ஆகிய இவை கற்பிக்கப்பட்டன என்றும், அதற்காக 60 வேலி நிலமுள்ள 'குலோத்துங்கன் காவனூர்' என்ற சிற்றூரைக் குலோத்துங்கன் இறையிலியாக்கினான் என்றும் அக் கோயில் ([60a]) கல்வெட்டு தெரிவிக்கிறது. கி. பி. 1036-இல் முதலாம் இராசேந்திரனின் 25-ஆவது ஆட்சி ஆண்டினில், மறைநூல் கல்லூரி ஒன்றும், அதில் 300 மாணவர்களும் 10 கற்பிப்போரும், கோயிலை ஒட்டித் தங்குவதற்கான விடுதி ஒன்றும் கட்டித் தானஞ் செய்ததாகத் தென் ஆர்க்காடு சில்லா, எண்ணாயிரம், இராசராச விண்

---

* திருவொற்றியூர் சென்னைக்கு வடக்கு 5 மைலிலுள்ள ரெயில், (Bus) வசதிகளுள்ள திருத்தலம். கோயில் பழமையும் பெரிதுமானது. மூவர் பாடல் பெற்றது. சுவாமி ஆதிபுரி சுரர். அம்பிகை வடிவுடையம்மை. திருவிளக்குத் தொண்டு செய்து முத்திபெற்ற கலிய நாயனாருடையதும், சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலி நாச்சியாரை மணம் புரிந்த தலமுமாகும். சுந்தரர் சங்கிலியார் இவர்களுடைய திருமேனிகள் மணவாளக் கோலமாய் இருக்கின்றன. பட்டினத்துப் பிள்ளையார் முத்தியடைந்ததும், சோழ மன்னர்களது பெரு மதிப்பிற்குரிய தொண்டை நாட்டுத் திருப்பதியுமாகும்.

60a Ins. 201 of 1931.

ணகரிலுள்ள கல்வெட்டுக்[59] கூறுகிறது. மற்றும் அக்கோயிலில் திருவாய்மொழி இசைக்கும் நால் வரும், கோயில் மடத்திலுள்ள இருபத்தைந்து வைணவர்களும் உண்ண வசதிகளை ஏற்படுத்தி யுள்ளதாகவும் அது குறிக்கின்றது.

இன்னும், வீரராசேந்திர சோழனது (கி. பி. 1063—70) கட்டளைப்படி திருமுக்கூடல்[60] மஹா விஷ்ணு கோயிலில் மாதவன் எனப் பெயரிய வைசி யன், **ஜனநாத மண்டபம்** என்றதொரு பெயரிய மண் டபமும், மற்றும் அதைச் சூழ்ந்த மண்டபங்களை யும் நிறுவி, அங்கு மறைகள், மற்ற கலைகள் ரூபா வதாரம் முதலிய நூல்கள் கற்பிக்கக் கலாசாலை யும், மாணவர்கள் (சாத்திரர்) தங்க விடுதியும், 15 படுக்கைகளுடைய **'வீரசோழன்'** எனப் பெயரிய (Hospital) மருத்துவ ஆதுலர் சாலையும் ஏற்படுத் தினனென்பது அத்திருமுக்கூடல் கல்வெட்டால் தெரிகிறது. மாணவர்களுக்குத் தங்க விடுதியே யன்றி, உணவும், சனிதோறும் நீராட எண்ணெ யும், விளக்கெரிக்க விளக்கெண்ணெயும் கொடுக் கப்பட்டன. இவைகளைச் சேர்ந்த வேலைகளுக் காகப் பரம்பரை வழியாக வந்த ஒரு வைத்தியனும், ஒரு சல்லியக்கிரியை பண்ணுவானும் (ரணவைத் தியன்-Surgeon), மருந்து மூலிகைகள் கொணரு வதற்கு இரண்டு ஆட்களும், நோயாளிகளைக் கவ

---

(59) Ins. *335, 343,* of *1917;* Epi: Bop, *1918.* p. *145—147.*

*(60)* Ins. *182* of *1915;* Epi Ind XXI. p. *220* ff; also Ins. *192* of *1928.* *கோவிந்தபுத்தூர் திருத்தொண்டத் தொகையான் திருமடம்.* A. R. E. *1929.* ii *39;* T. A. R. *1920-21. 64.* *மக்களுக்கன்றி, மிருகங்களுக்கும் சிசிச்சை கள் திருவாங்கூர் நாட்டில் நடந்தமை தெரிகின்றது.*

ளிக்க இரண்டு பெண்களும் (**Nurses**), வியாகரணம், சிவாகமம், சித்தாந்தம் கற்பிக்க ஆசிரியரும், மற்றும் பொது வேலைக்கு என ஒரு ஆளும் (விசன்) நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறுகக் கோயிலுக்கு விடப்பட்ட தானங்கள், கோயில் நடைமுறைப் பூசை பராமரிப்புக்கேயன்றியும், மேற்கூறிய வண்ணம் கல்விக்கும், ஆதுலர்சாலைக்குமாகக் குறிக்கப்பெற்று அத்தருமங்கள் நடைபெற்றன என்பதும் அறியத்தக்கது.

அன்ன சத்திரங்களை நடத்துவதற்காகவும், ஆலயத்தைப் பழுது பார்ப்பதற்காகவும், வேதமோதும் அந்தணர்களுக்கு வெகுமானங்கள் கொடுப்பதற்காகவும், கோயில் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகவும் பிரத்தியேகமாய் ஏற்பட்ட நிலதானம், வரிதானம், பணக்கொடை முதலியவற்றைப் பற்றிப் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கோயிலில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கும், அவ்வப்போது ஏற்படும் மராமத்து வேலைகளைக் கவனிப்பதற்கும், கோயில் சிப்பந்திகளைப் பராமரிப்பதற்கும் உரிய நிபந்தங்களும் பல அமைக்கப்பெற்றன. கி. பி. 1122-ஆம் வருடத்தியக் கல்வெட்டொன்று துறவிகளுக்குச் சோறுந் துணியும் கொடுக்கவும், மறை ஓதுவோருக்கும் கற்பாருக்குந் தானம் அளிக்கவும், 44 கிராமங்கள் தேவதானமாகக் கொடுக்கப்பட்டனவெனக் கூறுகின்றது.

பொதுவாகக் கோயில்களில் **சரஸ்வதி பண்டாரம்** என நூல் நிலையங்கள் இருந்தன.[61] இவ்வாறு

61 Ins. 277 of 1913.

கக் கல்விப் போதனைகளுக்கும், மற்றக் கலைகளை யொட்டிய ஆராய்ச்சிகளுக்கும் ஆலயமே நடுவிட மாக அமைந்திருந்தது.

மற்றும், நமது பேராலயங்களிலேதான் அரசர் களது துலாபாரம், இரணியகர்ப்பம், முடிசூட்டுதல் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கமா யிருந்தது. அவைகளும் அவரவர்கள் தம் பட்டத் தரசிகளுடனிருந்து இயற்றப் பெற்றமை கவனித் தற்குரிய தொன்றாகும். உதாரணமாக, திருவிய லூரில் நடந்த இச் சிறப்பொன்றினைக் குறித்து ஒரு கல்வெட்டு[62] கூறுவதாவது :

"ஸ்ரீ கோவிராச கேசரிவன்மரான ஸ்ரீ ராசராச தேவ ருக்கு யாண்டு இருபத்தொன்பதாவது இராஜேந்திர சிங்கவள நாட்டு மண்ணி நாட்டுப் பிரம்மதேயம் வேம்பற்றூராகிய சோமமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்து மகாசபையோம் கையெழுத்து : நம்முடைய சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீராச ராசதேவர் இவ்வூர்த் திருவிசலூர் மகாதேவர் ஸ்ரீ கோயிலிலே துலாபாரம் புக்கருளின் அன்று நம்பிராட்டியார் தந்தி சக்தி விடங்கியார் இரணியகருப்பம் புக்கருளி, இத்திருவிசலூர் மகாதேவர்க்கு அக்காரவடிசில் அமுதுக்கு வேண்டும் நிபந்தங் களுக்காக வைச்ச காசு" என்பது.

மற்றும், சடையவர்மன் முதலாவது சுந்தர பாண் டியன் 13-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீரங்கம் பெரிய கோயிலில் துலாபார மண்டபங்களைக் கட்டி வைத் ததும் அறியற்பாலது.

## பழங் கோயில்களைப் புதுப்பிக்கும் முறை

பல கல்வெட்டுக்கள் பழங்கோயில்களைப் புதுப் பிக்கும் முறைகளைத் தெரிவிப்பனவாகும்.

---

62 Ins. 42 of 1907.

'திருமழுவாடி உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் அருளிச் செய்த திருக்கற்றளி எடுக்க ஸ்ரீ விமானம் வாங்கி ஸ்ரீ விமானத்துள்ள கல்வெட்டுப்படி பொத்தகத்தில் சேர்ப்பிக்க''; என்றும்,

''ஆக இவ்வனைவர் கண்காணியாலும், இவ்வனைவர் கணக்கினாலும் கல்வெட்டுவித்தபடி முன்பு கல்வெட்டுச் சேர்ந்த பொத்தகப்படி''**

என்றும் உள்ள கல்வெட்டுக்களால்[63] திருமந்திர ஓலை நாயகர் அரசன் அருளிப்பாட்டினைத் தம் கையெழுத்திட்டுத் திருமுகத்தினைத் தூதுவர் வாயிலாக ஊர்ச்சபைக்கும், ஊரதிகாரிக்கும் விடுப்பர். அவர்கள் திருப்பணி செய்வோர், விமானம் வாங்குமுன் அதன் கண் உள்ள கல்வெட்டுக்களை அவர்களைக்கொண்டுஓலையில்எடுத்தெழுதுவித்து, விமானம் வாங்கிக் கட்டி முடித்த பின்னர்ப் பலர் கண்காணிப்பின் பேரில், தாம் காட்டுமிடத்தில் அவற்றை மீளவும் வெட்டுவிக்கும் வழக்குண்மை தெரியலாம். இம்மாதிரியாகவே பராந்தகன்[64] காலத்துத் திருவிடைமருதூர்க் கோயிலிலும், இராசராசன் காலத்துத்[65] திருவல்லம் கோயிலிலும், முதலாம் குலோத்துங்கன் காலத்துச் சித்தலிங்கமடம் வியாக்ரபாதேசுவரர் கோயிலிலும்,[66] மூன்றும்

---

63 Nos. *91, 92,* of *1895.* **கல்வெட்டுக்களை இவ்வாறு கவனிப்ப, சிற்ப உருவங்கள்கொண்ட கற்களை எண்ணிட்டு, இறக்கி, திருப்பணி முடிந்தவுடன் அவைகளை அவ்வாறே பூட்டுவது வழக்கமாகும். அவ்வாறாயின், திருவியலூர்ச் சிற்பங்களை இழந்திருக்கமுடியாததாகும். திருப்பணி காலத்தில், கோயில் முழுதும் புதிய தோற்றத்தை உண்டாக்கக் கருதி முழுவதும் கொத்துவது விலக்கப்படவே வேண்டும்.

64 Ins. *199; 234* of *1907.*

65 Also V. R. I. N. Arcot; pp. *331-2;* Chittoor p. *63;* Ins. *77, 78* of *1889; 229* of *1903 :* F. R. XI, *224.*

இராசராசன் காலத்து முனையூர் கோயிலிலும்,[66a] நடந்தேறினமை அறியற்பாலது.

## கோயில்களில் திருப்பதிகம், பிரபந்தம் ஓதுதல்

சிவன் கோயில்களில், திருமுன்னர், பூசாகாலங்களில் தேவாரத்[67] திருப்பதிகங்களும், மணிவாசகர் திருச்சாழல்[68] திருவெம்பாவை[68a] முதலிய பாக்களும், அகோபிலம் போன்ற வைணவத் திருப்பதிகளில் நாலாயிரப் பிரபந்தங்களும் பாடுதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தஞ்சாவூர் இராசராசேச்சரத்தில் தேவாரத் திருமுறைகளை விண்ணப்பஞ்செய்ய, இசைத் தமிழ்வல்லார் நாற்பத்தெண்மர் நியமனம் பெற்றிருந்தனர் என முன்னர்க் கண்டோம். திருமுறைகளையும், நாலாயிரப் பிரபந்தங்களையும் தொகையாக முறையே நம்பியாண்டார் நம்பியாலும் நாதமுனிகளாலும் வகுக்கப் பெறுமுன்னரே கோயில்களில் இவை ஓதப்பெற்றன வென்று பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. முதல் ஆதித்த சோழனுட்சியில் (கி.பி.

---

66 Epi : Rep : *1900.* p. *81.* 66a Ins. *157* of *1911.*

67 Ins. *97* of *1932.* கும்பகோணம் தாலுக்கா, மானம்பாடிக் கல்வெட்டில் இராசேந்திரன் தேவார நாயகம்—மறைக்காடன் பதஞ்சலி பிடாரன் என்றிருப்பதால் அரசன் அரண்மனையிலும் தேவாரம் பாடுகின்றவர்களிருந்ததாகவும், அவர்களுக்கும் முதன்மையோன் "தேவார நாயகம்" என்று வழங்கப்பெற்றதாகவும் அவன் கோயில்களில் திருப்பதியம் ஓதுவதைக் கண்காணித்து வந்ததாகவும் தெரிகின்றது.

68 Ins. *165* of *1906.*

68a Ins. *512* of *1905, 421* of *1912.* திருப்பாவை எனவும், திருவாதவூராளி நாயனர் எனவும் கண்டிருப்பன.

873-ல்) திருஎறும்பியூரிலும்;[1] (கி.பி. 876-ல்) பழுவூரிலும்[2], முதற்பராந்தக சோழன் ஆட்சியில் (கி.பி. 910-ல்) திருவாவடுதுறையிலும்[3], (கி.பி. 911-ல்) அல்லூரிலும்[4], (கி.பி. 944-ல்) திருத்தவத்துறையிலும்[5] உத்தமச் சோழனுட்சியில் (கி.பி. 977-ல்) கோனேரிராசபுரம்[6] என்னும் திருநல்லத்திலும், (கி.பி. 984-ல்) அந்துவநல்லூரிலும்[7], வாத்தியங்களுடன் திருப்பதிகங்கள் தினசரி பூசாகாலங்களிலும் பாடுவதற்கு நிபந்தங்கள்வழங்கப்பட்டுள்ளன. இன்னும் இதற்கு முன்னதாகவே, கோயில் சிப்பந்திகளில் திருப்பதியம் பாடுதற்கான ஓதுவார்கள் நியமனம் பெற்றிருந்தனரெனப் பல்லவன் விஜய நந்தி விக்கிரமவர்மன் காலத்துத்[2] திருவல்லம் கல்வெட்டுக் கூறுகின்றது. முதல் பராந்தகன் காலத்திலும், சோழ—தொண்டைமண்டலங்களில், பல கோயில்களில், வாத்தியங்களுடன், திருப்பதியங்கள் ஓதப்பெற்றமை பல கல்வெட்டுக்களால்[3] தெரிகின்றது. ஆகவே, நம்பியாண்டார் நம்பிகளுக்கு முன்னரே திருப்பதியங்கள் தெய்வீக வழிபாட்டிற்குத் தெய்வீகத் தன்மை எய்திய செய்தி கிடைப்பதாகின்றது. திருவிடைவாசல் கல்வெட்டு[4] ஒன்றில் ஒரு திருமுறையிலும் இதுவரை அகப்படாத ஞானசம்பந்தர்து தேவாரப்பதிகம் ஒன்று பொறிக்கப்பட்டிருப்பதும் இங்குக் குறிக்கத்தக்கதாகும்.

---

1 *129* of *1914*. 2 *349* of *1918*. 3 *139* of *1925*.
4 S. I. I. viii No. *687;* 5 *99* of *1929*. 6 S. I. I. iii. No. *151*. 7 S. I. I. Vol. iii. Ins. *139*.

2 S. I. I. III. p. *93;*

3 Ins. *129* of *1924; 349* of *1—18, 358* of *1903, 199* of *1915*. Ins. *8* of *1918*.

இரண்டாம் ஆதித்தன் சிவபத்தனய் விளங்கி, முழுதும் மறைபட்டிருந்த திருமுறைகளைத் தேடி நம்பியாண்டார் நம்பி அடிகளின் உதவியால் தில்லையில் அவைகளைக் கண்டு, பின்பு அவைகளைப் பன்னிரு திருமுறைகளாக வகுக்கச் செய்தமையும் ஆராய்ச்சியாளர்களால் சமீபத்தில் அறிந்ததொன்ருகும். [பக்கம் - 77 காண்க.]

இரண்டாம் குலோத்துங்கனது நான்காவது ஆண்டுக் கல்வெட்டொன்ருல், சீர்காழி திருஞான சம்பந்த சுவாமிகள் கோயிலில் நெடுநாளாகத் தேவாரத் திருமுறைகள் எழுதிவைக்கப்பெற்றிருந்தன என்றும், அவற்றைப் பூசித்துக் கண்காணிக்க ஒரு தமிழ் விரகர் நியமிக்கப்பெற்றிருந்தார் எனவும், அவர் கடமை, திருமுறை ஏடுகள் பழுதடையாமல் பாதுகாத்துக் கொள்ளுதலும், பழுதடையின், அவற்றை எழுதிப் புதுப்பிப்பதுடன் அவற்றைப் பூசிப்பதும் என்றும் தெரிகிறது.

மூன்ரும் குலோத்துங்கனது இருபத்து நாலாவது ஆண்டில் நாயன்மார்களது விழாக்களை நடத்தத் தேவதானம் கொடுத்த செய்தியைக் கல்வெட்டொன்று குறிக்கின்றது.

# நாயன்மார்களுக்குப் பூசையும் விழாக்களும்

பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் வாழ்ந்து மறைந்த இடங்களில் இருந்த கோவில்களிலே அவ ரவர்களுடைய உருவச் சிலைகளும், முதலாம் இராச ராசனுக்குப் பின்னர் செப்புப் படிமங்களும் எழுந் தருளப் பெற்றிருத்தல் வேண்டும். சிறப்பாகச் சுந் தரர் திருத்தொண்டத் தொகை பாட உதவியாகத் திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் நாயன்மார் களின் படிமங்கள் இருந்திருத்தல் வேண்டும். இங் ஙனம் நாயன்மார்க்கு உருவச் சிலைகள் அமைப் பதும், தனிச் சிறு கோவில்கள் அமைப்பதும் செப் புப் படிமங்கள் எடுப்பதும் அவற்றுக்குப் பூசை விழாக்கள் செய்வதும் சோழர் காலத்தில் பெருக லாயின என்பது கல்வெட்டுக்களால் அறியப்படு கிறது. இடச்சுருக்கம் கருதிச் சில கோயிற் பெயர் கள் மட்டுமே இங்குக் குறிக்கப்பட்டுள்ளன.

| | | | கல்வெட்டு எண் | ஆண்டு அறிக்கை |
|---|---|---|---|---|
| *1.* | திருவதிகை | திருவாகீசுவரம் (கோயில்) | *368* | *1921* |
| *2.* | கூகூர் | நம்பி ஆரூரன் (மூர்த்தம்) | *299* | *1917* |
| *3.* | செங்காட்டங்-குடி | சிறுத்தொண்டநம்பி (மூர்த்தம்) | *59* | *9 113* |
| *4.* | திருப்புகலூர் | திருநாவுக்கரசு (மூர்த்தம்) | *68* | *1928* |
| *5.* | தஞ்சை இராச-ராசேச்சரம் | சண்டீசர் வரலாறு உணர்த்தும் நான்கு திருவுருவங்கள் | | *1929* |
| *6.* | தஞ்சை இராச-ராசேச்சரம் | நம்பி ஆரூரர், நங்கை பரவையார், அப்பர், சம்பந்தர் திருமேனிகள் | | *1938* |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | தஞ்சை இராசராசேச்சரம் | 'தத்தா, நமரேகான்' என்ற மிலாடுடையார் படிமம் | | 1940 |
| 8. | தஞ்சை இராசராசேச்சரம் | சிறுத்தொண்டர் வரலாறு உணர்த்தும் ஐந்து திருமேனிகள் | | 1943 |
| 9. | திருநாகேசுவரம் | மிலாடுடையார் பள்ளி (கோயில்) | | 1912 |
| 10. | திருமழபாடி | அப்பர், சுந்தரர், சம்பந்தர் திருமேனிகள் | 37 | 1920 |
| 11. | திருநல்லம் | சண்டேசர் கோயில் | 558 | 1909 |
| 12. | திருவாரூர் | சுந்தரர், பரவையார் திருமேனிகள் | 7 | 485 |
| 13. | புதூர் | சம்பந்தர் சிலை | 412 | 1922 |
| 14. | திருக்கழுமலம் | சம்பந்தர் கோயில் | 375 | 1918 |
| 15. | திருக்கழுமலம் | சம்பந்தர், மங்கையர்க்கரசியார் சிலைகள் | 375 | 1918 |
| 16. | திருவாய்மூர் | அப்பர் | 137 | 1934 |
| 17. | திருக்கடவூர் | குங்குலியக் கலயர் | 25 | 1906 |
| 18. | தீர்த்தநகரி | அப்பர் | 121 | 1904 |
| 19. | உசாத்தானம் | அப்பர் கோயில் | 186 | 1908 |
| 20. | உசாத்தானம் | சம்பந்தர் கோயில் | 216 | 1908 |
| 21. | அச்சிறுபாக்கம் | அப்பர் சிலை | 137 | 1933-4 |
| 22. | தஞ்சைப் பெரிய கோயில் | சண்டேசர் கோயில் | | |
| 23. | குடந்தை - கீழ்க்கோட்டம் | சம்பந்தர் கோயில் | 258 | 1911 |
| 24. | கொள்ளம் புதூர் | திருநீலகண்ட யாழ்ப்பாணர் சிலை | 245 | 1917 |
| 25. | திருக்கோடிகா | சண்டேசர் கோயில் | 49 | 1930-31 |
| | | மாணிக்கவாசகர் சிலை | 53 | 1930-31 |
| 26. | திருவலஞ்சுழி | மாணிக்கவாசகர் கண்ணப்பர் சிலைகள் | 628 | 1902 |

| | | | | |
|---|---|---|---|---|
| 27. | மருதநல்லூர் | மாணிக்கவாசகர் சிலை | 285 | 1927 |
| 28. | வழுவூர் | மாணிக்கவாசகர் சிலை | 421 | 1912 |
| 29. | சிதம்பரம் | திருத்தொண்டத் தொகை ஈசுவரம் | 262 | 1933 |
| 30. | திருக்கச்சூர் | அப்பர் சிலை | 317 | 1933 |
| 31. | அகத்திய மலை | அப்பர் சிலை | 559 | 1906 |
| 32. | ஆச்சாபுரம் | சம்பந்தர், சொக்கியார், (அவர் மனைவி) | 527 | 1918 |
| 33. | தலைஞாயிறு | சம்பந்தர் சிலை | 149 | 1927 |
| 34. | திருமழ பாடி | சம்பந்தர் சிலை | 76 | 1920 |
| 35. | திருவீழி மிழலை | மாணிக்கவாசகர் சிலை | 409 | 1908 |
| 36. | திருப்பாலைவனம் | காரைக்காலம்மையார் சிலை | 329 | 1929 |
| 37. | திருவரத்துறை | சம்பந்தர் சிலை | 221 | 1929 |
| 38. | திருப்பாலைத்துறை | சம்பந்தர் கோயில் | 437 | 1912 |
| 39. | கோயில் தேவ-ராயன் பேட்டை | அப்பர் சிலை | 278 | 1923 |
| 40. | களத்தூர் | சண்டேசர் சிலை | 334 | 1911 |
| 41. | திருக்கோளிலி | அதிபத்தர் சிலை | தமிழ்ப்பொழில் | 23-6-11 |
| 42. | நீடூர் | சேரமான் பெருமாள் கோயில் | 535 | 1921 |
| 43. | திருஒற்றியூர் | 63 நாயன்மார் சிலைகள் | 137 | 1912 |
| 44. | திருச்செம்பொனார்-கோயில் | 63 நாயன்மார் சிலைகள் | 171 | 1925 |
| 45. | ஆடுதுறை | 63 நாயன்மார் சிலைகள் | 35 | 1913 |

—"சைவ சமய வளர்ச்சி" (டாக்டர் இராசமாணிக்கனார்)

## ஆடலும் கூத்தும்

அக்காலத்தில் நடனங்களும் நாடகங்களும் அநேகமாய் ஆலயங்களிலுள்ள அரங்க மண்டபங்களிலேயே நடைபெற்றன. காமரசவல்லி ஆலயத்தில் மார்கழி, வைகாசித் திருவாதிரை விழாக்களில் மூன்று நாள் சாக்கைக் கூத்து நடித்த சாக்கை மாராயனுக்கு நிலதானம் ஒருவர் வழங்கினுரென்றும் [69]; விக்கிரம சோழன் 14-ஆவது யாண்டுக் கல்வெட்டொன்றில், திருவேங்கைவாசல் ஈசஞர் முன் என்பது கூத்துக்கள் நடித்ததற்கு எழுநாட்டு நங்கை என்பாளுக்கு நிலதானம் செய்யப்பட்டது[70] எனவும் கூறப்பட்டிருத்தல் காண்க.

மூன்ரும் இராசராசன் கி. பி. 1235-இல் திருவொற்றியூர் ஆவணித் திருநாள் விழாவில் பதியிலார்களால் சிலப்பதிகாரப் பகுதியொன்றை அகமார்க்கம் என பாடல்களுடன் ஆடல் கூத்தியர்களைக் கொண்டு நடத்தியதை நேரிற் கண்டானென்ற செய்தியைக் கல்வெட்டொன்று [70 (a)] கூறுகிறது.

இன்னும் இவன் காலத்தே கோப்பெருஞ் சிங்கன் சிதம்பரம் நடராசர் கோயில் கிழக்குக் கோபுரத்தைக் கட்டியும், இக் கிழக்கு மேற்குக் கோபுர நிலைகளில் பரத நாட்டிய சாத்திரத்தில் கூறும் 108 நாட்டிய நிலைகளைச் சிற்ப உருவங்களாகச் சித்தரித்துக் காட்டியிருப்பதும் அதன் விளக்கங்களைப் பரத சாத்திர சுலோகங்களுடன் பொறித்திருப்பதுவும் காணத்தக்கனவாகும்.*

---

69 Ins. 65 of 1914, 69(a) Ins. 506 of 1912.
70 Ins. 253 of 1915. 70(a) Ins. 211 of 1912. சிலப்பதிகாரம், V. v. 1-150.

* Epi. Report 1914 p. 82.

இவைகளைக் கொண்டு, பொதுவாக இக்கலைகள் அரசர்களாலும் மக்களாலும் போற்றப்பெற்ற தன்மையை நன்கு அறியலாம்.

## கோயில் ஆளுகை முறை

கோயில் ஆளுகை முறைகளில் சோழர்கள் மிக ஊக்கங்காட்டினமை பல கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. அரசர்களும், அரசியல் அதிகாரிகளும் ஊர்தோறும் போய்க் கவனித்து வருகையில், கோயில்களையும் அவற்றின் பொருள்களையும் கண்காணித்தனர் எனலாம். திருமாற்பேறு[71] அக்னீசுவரர் கோயில் நிபந்தங்கள் நடவாமல் நிற்ப, அதன் தேவதானங்கள் பிறரால் அபகரிக்கப்பெற்றுத் தினசரி திருவமுது இரண்டு நாழியாகக் குறைவுபட்டிருந்ததால் மதுராந்தகன் கண்டராதித்தனர், தாமும் அவ்வூர்ப் பஞ்சாயத்தாரும் விசாரித்து, கோயில் அறைகாரனுக்கு அபராதம் விதித்துத் தேவதான நிலங்களை மறுபடியும் சேர்த்துக் கொண்டதாக ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. மற்றும், அச்சோழனே வட ஆர்க்காடு சில்லா திருவல்லத்தில்[72] அம்மாதிரியான நடவடிக்கை நடத்தியதாகவும் தெரிகிறது. கூகூர்க்[73] கல்வெட்டொன்றில், அவ்வூர்க் கோயில் நிபந்தங்கள் நடைபெறாது போகவே, முதலாம் இராசராச சோழனது அரசியல் பணியாளர் ஒருவரால் அது கண்டுபிடிக்கப்பட்டு, களவாடியவனுக்கு அபராதம் விதித்து அப்பொருளைக் கொண்டு ஒரு தங்கத் தட்டு செய்து கோயிலுக்குக் கொடுத்ததாகப் புலப்படுகிறது.

71 Ins. 282, 283 of 1906. 72 S. I. I. iii. p. 102.
73 Nos. 285 of 1918.

இராசராசன் I ஊர்களில் , பவனி வரும்போது, திருவெறும்பியூர்க் கோயிற் கணக்குகளைச் சிறுகுடையூர்க் காளி ஆதித்தன் என்பான் தணிக்கை[74] (Audit of accounts) செய்தானென்பதும், அதனால் கோயில்களின் வருமானம், செலவுத் திட்டங்கள் அரசனின் காப்புக்குள் அடங்கியிருந்தன என்பதும் தெரிகிறது. முதற் குலோத்துங்கன் காலத்து அரசியல் பணியாளர்கள் திருப்பனந்தாளில் [75] கோயில் திருக்கைக் கோட்டிப் பண்டாரத்தைத் தணிக்கை செய்யுங் காலத்து அர்ச்சகர்கள் மூன்று தடவைகளில் நகைகளையும் பரிகலங்களையும் அபகரித்துள்ளமை கண்டு அரசன் முன் கொணர்ந்து 540 காசு அபராதம் விதிக்கவே, அவர்களில் ஒருவன் தன் பகுதியான தொகையைக் கொடுக்க முடியாது, கோயில் முறையான தனது பாகத்தில் $4\frac{1}{2}$ நாள் விட்டுக்கொடுத்தான் என்பதையும் கல்வெட்டுக் கூறுகின்றது. மூன்றும் குலோத்துங்கன் திருவொற்றியூர் [76] இராசராசன் மண்டபத்தில் அமர்ந்திருந்தபோது ஒரு தேவதானக் கிராமம் விளைவின்றிக் கிடப்பதாக முறையிட, அது பின்னர்ச் சரியான குத்தகைக்கு விடப்பட்டது என்பதையும் கல்வெட்டுக்களால் அறிகின்றோம்.

## திருமடங்கள்

திருக்கோயில்கள் மாத்திரமின்றி, கோயில்களை அடுத்த மடங்களும் மக்களின் சமய வளர்ச்சியில் ஈடுபட்டன. இவைகளைப் பற்றிய குறிப்புக்

74 Ins. *109* of *1914*.
75 Epi. Rep. *1915*, p. *46*. 76 Ins. *368* of *1912*.

கள், இராசராசன் காலத்தனவாக, திருவாவடு துறையிலும்,[1] திருவொற்றியூரிலும்[2] காணப்படு கின்றன. இவை, ஒழுக்கம், உயர்குலம், சமய அறிவு படைக்கப்பட்ட சந்தான ஆசாரியர்களால் நிறுவப் பெற்று, பல தலை முறையாகக் குருக்கள் வழியில் வந்தவையாகும். இம்மடங்கள் பெரும்பாலும் சைவ சமயத்தவை. சிற்சில ஆர்யதேசம், காசிபாசுபதர், காஷ்மீரத்தைச் சேர்ந்த கபாலிகர்களது ஆகும். நாயன்மார் காலத்திலேயே சுத்த சன்மார்க்க சைவம் வளரத் தொடங்கவே, கபாலிகம், பாசுபதம், காளாமுகம், பைரவம், வாமம் முதலிய சமயங் களின் வளர்ச்சி குன்றியது. பின்னர் ஆதிசங் கரர் (கி.பி 788-820) தோன்றி அத்வைத சமயத்தை நாடெங்கும் பரப்பியதாலும், புறச் சமயங்கள் வன் மையாகக் கண்டிக்கப்பட்டு, இவற்றின் செல்வாக் கும் குறைவதாயிற்று. நான்கு[3] சைவ மடங்களைப் பற்றிய குறிப்புகள், மூன்றும் இராசராசன், மூன் றும் இராசேந்திரன் காலங்களில் காணப்படுகின் றன. முதலாவது, கும்பகோணத்திற்கடுத்த திருவிடைமருதூர் முதலியார் மாளிகை மடத்துச் சந்தான வழியில் ஈசானதேவர் என்ற குரு பரம் பரையைக் குறிக்கின்றது. இவர் நாலூர் என்ற ஊரில் இருந்தமையும், இறக்குந் தருவாயில், தன் புருஷன் கட்டளையிட்ட நிலதானத்தை, ஒரு சிஷ்யை, அவர் பெயருக்கு மாற்றியதாகவும் தெரி கின்றது. அடுத்தது தஞ்சாவூர் சில்லா, முனையூர் கிராமத்து, திருவகத்தீசுவரம் உடையார் கோயி லில் தென்பாகத்திலுள்ள திருஞான சம்பந்த மட

1 13 of 1925. 2 181 of 1912. 3 49 of 1911.

மாகும்.[4] மற்றொன்று, அவ்வூர் மக்களால் நில தானம் விடப்பெற்ற திருக்கழுமலத்துத் (சீர்காழி) திருமுறை தேவாரச் செல்வன்[5] மடமாகும். நான்கா வது வலிவலம் மனத்துணை நாயனார் கோயில் மடைவிளாகத்தில் இருந்த தவப்பெருமான் திரு மடம்[6] ஆகும். இதன் குருபீடம், திருச்சத்தி முற் றத்து ஆதினகர்த்தர் வழியில் எதிரொப்பிலாதார் என்ற சிறப்புப் பெற்ற சோமநாத முதலியாரால் தலைமை பூண்டதாகும். மூன்றாவது இராசேந்திரன் காலத்ததான இம்மடத்திற்கு நிலதானங்கள் விடப்

---

4 156 of 1911. 5 158 of 1911.
6 Epi. Rep. 1909, p. 103, para 53.

***சீர்காழி :*** *சிதம்பரத்திற்குத் தெற்கு 11 கல் தொலைவி லுள்ள இருப்புப்பாதை நிலையம். திருஞானசம்பந்தர் திருவவ தாரத்தலம். சுவாமி பிரமபுரீசுரர், அம்பிகை திருநிலைநாயகி; கோயில் மூவராலும் பாடல் பெற்றது. சம்பந்தரது பாடல் ஒன்று தனது வரலாற்றையும் தல வரலாற்றையும் குறிப்பதாகும் :*

*"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்*
*தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்*
*காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்*
*பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே"*

*சோழர்களில், இரண்டாம் குலோத்துங்கன் கல்வெட்டு 3-ம், இரண்டாம் இராசராசனது 5-ம், மூன்றாம் குலோத் துங்கனது 7-ம், வீர ராசேந்திரனது 3-ம், இராசாதிராசனது 1-ம், மூன்றாம் இராசராசனது 2-ம், கோயிலில் காணப் படுவன.*

*கோயிலில் திருஞானசம்பந்தருக்குத் தனி ஆலயம் இருக் கின்றது. அவர் ஞானப் பாலுண்ட தடாகம் கோயிலுக்குள் இருக்கிறது. கோயிலுக்குள் மலைக்கோயில் உச்சியில் சட்டைநாதர் ஆலயமும். அதற்கு அடுத்த கீழ் நிலையில் தோணியப்பர் சந்நிதியுமிருக்கிறது. சீர்காழிக் கோயில் தரும புரம் ஆதினகர்த்தர்களது ஆளுகைக்குட்பட்டதாகும்.*

பெற்ற செய்திகளையும், அங்கிலங்களின் குத்தகை தாரர்கள், அவர்களுக்குப் பின் அங்கிலத்தை வாங்கு பவர்கள், ஸ்ரீதனமாகப் பெறுபவர்கள் அங்கிலங் களின் வரிகளைத் தாங்களே கொடுப்பதாக ஒப்புக் கொண்டமையையும் தெரிவிக்கின்றது.

இவன் காலத்தேதான், கி. பி. 1248-இல் விடுத்த கோவிந்தபுத்தூர் கல்வெட்டொன்று, ஆங்குள்ள திருவிசயமங்கைத் திருக்கோயிலை அடுத்த திருத்தொண்டத் தொகையான் திருமடத் தில் பொதுவாகச் சமய ஞானத்தைப் போதிப் பதுடன், சிறப்பாக அதன் சிஷ்யர்கள் நோயுற்ற போது அவர்களுக்கு மருத்துவ வசதிகள் அளித்து, மடத்தை அடைந்த வழிப்பயணத்தார் களுக்கு உப்பும் ஆமணக்கெண்ணெயும் தந்துத வியதாகக் குறிக்கின்றது. இன்னும் அவ்வப்போ துள்ள குருமார்கள் தங்களுக்குப் பின் வரும் தலை வர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்கள் தேர்ந்தெடா விடில், சிதம்பரத்திலுள்ள மற்றொரு மடத்துத் தலைவரால் நியமிக்கப்படவேண்டிய நிமித்தம் ஆகிய இவைகளைக் குறிக்கின்றது. சைவ மடங் களேயல்லாது வைணவ மடம் ஒன்றும் முதலா வது குலோத்துங்கன் காலத்துத் திருவடந்தை யில் இருந்தது. அது கலிச்சிங்கன் மடம்[3] எனப் பட்டது. அங்கு ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தன்று, ஐம்பது பிராமணர்களுக்கு உணவு அளிக்கச் செய்த ஏற்பாடு காணப்படுகின்றது.

---

(1) 108 and 109 of 1911. (2) 192 of 1928.
3 281 of 1910.

## சைவ மடங்கள்

சோழர்கள் காலத்தில், திருக்கோயில்களைத் தவிர மக்களின் சமயப்பற்றைப் பரப்புவதற்காகச் சைவ மடங்களும் ஆங்காங்கு நிறுவப்பெற்றன. மடங்களைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் சோழ பாண்டிய இராச்சியங்களில் மிகக் காணப்படுகின்றன. இவைகளில் சைவ சந்நியாசிகள் மடாதிபதிகளாகத் திகழ்ந்தனர். இத்தலைவர்கள் பொதுவாகச் சைவ சமயாசாரியர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் பெயருடனும், சிவ யோகிகள் மாகேசுவரர் என்ற பெயருடனும் விளங்கினர்.

இம்மடங்கள் 10-ஆம் நூற்றுண்டு முதல் சாதாரணமாகக் கோயில்களை ஒட்டி ஏற்பட்டன. இவை கோயில்களின் பொறுப்பையும், மடத்திற்கு வரும் வழிப் பயணத்தார்களையும் பராமரித்தன. அறிவு வளர்ச்சிக்கும், அறிஞர்களைப் போற்றுவதற்கும் இவை நிலைக்களமாயின. அங்குச் சாத்திர வளர்ச்சிக்கான பாடங்கள் சொல்லப்பட்டு ஆராய்ச்சிகள் நடந்தன. புராணங்கள் ஓதப்பெற்றன. திருப்பதிகம் என்ற தேவாரத் திருமுறைகளைப் பண்ணுடன் பாடுவிப்பதற்குப் பயிற்சி கொடுக்கப்பெற்றது. இவ்விதமாகச் சைவ சமயம் வளர்க்கப்பெற்றது.

சோழ மன்னர்களது கல்வெட்டுக்களில் அடிக்கடி, திருச்சத்திமுற்றம், செம்பைக்குடி இவைகளின் மடங்களைப் பற்றியும், முன்னதான ஞான சம்பந்தப் பீடம் மிகப் புராதனமான முதலிமார்களிடம் இருந்ததாகவும், பின்னர் அது ஞான சிவம், பரிபூர்ண சிவன், ஈசான சிவாசாரியார்

போன்ற தலைவர்களால் பரிபாலிக்கப் பெற்றதெனவும், திருச்சத்தி முற்றத்து மடத்தின் கிளை ஒன்று திருவானைக்கா கோயிலில் இருந்ததாகவும் தெரிகிறது. அது இப்போது சங்கராச்சாரிய சுவாமி மடமாகக் காணப்படுகிறது. எப்போது இம்மடம் முதலிமார்களிடமிருந்து சங்கராச்சாரிய சுவாமிகளது பிராமணமடமாக ஆகியதென்பது தெரியவில்லை. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், திருவாவடுதுறையில், ஆதின சைவமடம்* ஒன்று ஸ்ரீலஸ்ரீ ஆதி நமசிவாய மூர்த்திகளாலும், தருமபுரத்தில்** மற்றொரு ஆதீன மடம் ஸ்ரீலஸ்ரீ குரு ஞானசம்பந்த தேசிகர் அவர்களாலும் தோன்றியவையாகும். இன்னுமொன்று ஸ்ரீலஸ்ரீ நமசிவாய மூர்த்திகளது காலத்தவரான ஸ்கந்த பரம்பரை ஸ்ரீலஸ்ரீ சிவாக்கிராயோகிகள் சூரியனார் கோயில் ஆதீனத்தையும் தாபித்த வரலாறும் தெரிகிறது. இவற்றின் ஆதீன கர்த்தர்கள், சைவ சமயாசாரியர்கள் பெயரால் தமது மடங்களைத் தாபித்துக் கொண்ட விபரம் கருதுதற்குரியவையாகும். மதுரையில் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன மடம் இருப்பதும், அம் மடத்தில் திருஞான சம்பந்தரது திருமேனி பூசையிலிருப்பதும், ஆதீனகர்த்தர் அவர்களால் மடம் பரிபாலிக்கப்பெறுவதும் யாவரும் அறிந்ததாகும். இவ்வாதீனங்கள் தம்பிரான்களென்ற சிஷ்ய பரம்பரைகளையுடையன

* இப்போது திருவாவடுதுறை பட்டத்திலுள்ளவர்கள் இருபத்தொன்றாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமியவர்களாவர்.

** இப்போது தருமபுரம் பட்டத்திலுள்ளவர்கள் இருபத்தைந்தாவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளாவர்.

வாய்ச் சமயத்தை எங்கும் பரப்பும் பணியை மேற் கொண்டு இருக்கின்றன. இன்னும், ஸ்ரீலஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் காசியில் குமாரசாமி மடம் ஒன்று தாபிக்க, அதற்குக் கிளையாகத் திருப்பனந் தாளில் காசி மடம்* ஒன்று தோன்றிச் சைவ சம யப் பணி புரிந்து வருகின்றது. காஞ்சிப்புராணம் ஆசிரியரான சிவஞான முனிவரது மடமும், தாயு மானவரது மடமும இங்குக் குறிக்கத்தக்கன.

## சோழர்காலச் சைவ இலக்கியம்**

## சைவத் திருமுறைகள்

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் பாடிய முதல் எட்டுத் திருமுறைகளும் 10-ஆம் திருமுறை யாகிய திருமந்திரமும் பல்லவர் காலத்தவை. 11-ஆம் திருமுறையில் உள்ள காரைக்கால் அம் மையார், ஐயடிகள், சேரமான்பெருமாள் நக்கீர தேவர், பரணதேவர், கபிலதேவர், கல்லாடதேவர், ஆகியோர் இயற்றிய பாடல்களும் பல்லவர் காலத் தவை. அவை நீங்கலாகவுள்ள 11-ஆம் திரு முறைப் பாடல்களும் 9-ஆம் திருமுறையும் சேக்கி ழார் இயற்றிய பெரிய புராணமாகிய 12-ஆம் திரு முறையும் சோழர் காலத்தில் செய்யப்பட்ட திரு முறைகளாகும்.

ஒன்பதாந்திருமுறையில் ஒன்பது அடியார்கள் பாடிய பாடல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு

---

* இப்போது திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகளாவர்.

** பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனாரது சைவ சமய வளர்ச்சி 1958. பக்கம் 245-267 தழுவியது.

பாவும் திருவிசைப்பா எனப்படும். ஒன்பது அடியாராவார்—திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனர், புருஷோத்தம நம்பி, சேதிராயர் என்பவர் (1) **திருமாளிகைத் தேவர்** திருவிடைமருதூர், மாளிகை மடத்தைச் சேர்ந்தவர்; இவர் தில்லையைப் பற்றியே நான்கு திருவிசைப் பாக்கள் பாடியுள்ளார். (2) **சேந்தனர்** திருவீழிமிழலையில் வாழ்ந்தவர்; தில்லையில் இருந்தபோது தேர் ஓரிடத்தில் நின்றுவிட்டதைக்கண்டு திருப்பல்லாண்டு பாடி அதனைப் போகச் செய்தனர் என்பர். இவர் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி மீது 3 திருவிசைப் பாக்களும், தில்லைமீது திருப்பல்லாண்டும் பாடியுள்ளார். தில்லையில் மூவாயிரவர் இருந்தாற் போலத் திருவீழிமிழலையில் ஐந்நூற்றுவர் இருந்தனர் என்று இவர் குறித்துள்ளார். (3) **கருவூர்த் தேவர்** முதலாம் இராசராசன் காலத்தவர்; தஞ்சைப் பெரிய கோயிலின் இலிங்கத்தை ஆவுடையாரில் அசையாது பொருத்திய பெரியார். இவர் சமாதி அப்பெரிய கோயில் திருச்சுற்றில் இருக்கின்றது. இவர் தில்லை, திருக்களந்தை—ஆதித்தேசுவரம், கீழ்க்கோட்டூர்—மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோழேச்சரம், திருப்பூவனம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சரம், திருவிடைமருதூர் ஆகிய பத்துத் தலங்களில் பத்துத் திருவிசைப் பாக்கள் பாடியுள்ளார். (4) **பூந்துருத்தி நம்பி காடநம்பி** என்பவர் திருப்பூந்துருத்தியில் பிறந்தவர். இவர் திருவாரூர், தில்லை என்னும் இரு

பதிகள்மீது இரண்டு திருவிசைப்பாக்கள் பாடியுள்ளார். இவர் கணம்புல்லர், கண்ணப்பர், ஆரூர் நாவுக்கரசர், சம்பந்தர், சேரமான் பெருமாள், சுந்தரர் ஆகிய நாயன்மார்களைத் தம் பாக்களில் பாராட்டியுள்ளார். (5) **கண்ட ராதித்தர்** முதற்பராந்தக சோழனின் மகனார். இவர் மனைவியாரே சைவத் திருப்பணிகளை மிகப் பலவாகச் செய்த செம்பியன் மாதேவியார். கண்டராதித்தர் தில்லையைப்பற்றியே ஒரு திருவிசைப்பாப் பாடியுள்ளார். இவர் தம் தந்தை சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தான் என்பதைக் குறித்துள்ளார். (6) **வேணாட்டடிகள்** என்பவர் தென் திருவாங்கூர்ப் பகுதியை (வேள் நாட்டை)ச் சேர்ந்தவர். இவரும் தில்லையைப் பற்றியே ஒரு திருவிசைப்பா பாடியுள்ளார். (7) **திருவாலி அமுதனார்** சீர்காழியை அடுத்துள்ள திருவாலி என்னும் ஊரைச் சேர்ந்தவர். நான்கு திருவிசைப் பாக்கள் தில்லையைப் பற்றியே பாடியுள்ளார். தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம் என்று குறித்ததிலிருந்து, இவருடைய தமிழ்ச்சுவையும் இசை அறிவும் அறியற்பாலன. (8) **புருஷோத்தம நம்பி** தில்லை ஒன்றைப் பற்றியே இரண்டு திருவிசைப்பாக்கள் பாடியுள்ளார். (9) **சேதிராயர்** என்னும் பட்டம் திருக்கோவலூர் மன்னர்களே பூண்டிருந்தனர். ஆதலின் இவர், பல்லவர் காலத்து மெய்ப்பொருள் நாயனாரைப் போலச் சோழர் காலத்திருந்த திருக்கோவலூர் மன்னராகக் கருதுதல் தகும். இவர் தில்லையைப் பற்றி ஒரே திருவிசைப்பா பாடியுள்ளார். இது முன் சொன்ன சேந்தனாரது திருப்பல்லாண்டு நூலின் இறுதியில் வைக்கப்பட்டுள்ளது.

ஒன்பதாம் திருமுறையில் பல பாக்கள் தில்லையைப்பற்றியே காண்பதற்கு என்ன காரணம்? ஐந்து தொழில் இயற்றுவதற்கு ஏதுவாகிய திருநடனம் செய்யப்படும் ஒளி நிலையமாகத் தில்லை விளங்குவதால், அதனை எல்லாத் தலங்களிலும், உயர்ந்ததாகச் சைவ நூல்கள் கூறும். அத்துடன் முதற் பராந்தகன் காலமுதல் சோழர்கள் தில்லையைப் பல்லாற்ருனும் சிறப்பித்து வந்ததும், தில்லைப் பெருமானைத் தம் குலநாயகன் எனக் கூறி வந்ததும் தில்லையைச் சோழர் காலத்தில் உயர்த்தி விட்டன. இத்தகைய காரணங்களாற்ருன் தில்லை மேற்சொன்ன ஆசிரியர்களால் பெரிதும் போற்றப் பட்ட தென்னலாம்.

**11-ஆம் திருமுறை:** இத் திருமுறையில் குறிப்பிட்டுள்ள இளம் பெருமாள் அடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப்பிள்ளையார், நம்பி யாண்டார் நம்பி என்னும் நால்வர் பாடிய நூல்களே சோழர் காலத்தவை.

**இளம்பெருமான் அடிகள்** என்பது ஓர் இளவரசனைக் குறிக்கலாகும். எந்த மரபினர் என்பதைத் தெரிய வழியில்லை. இவர் சிவபெருமான்மீது முப்பது பாக்களையுடைய மும்மணிக் கோவை ஒன்று பாடியுள்ளனர்.

**அதிரா அடிகள்:** இவர் பாடிய நூல் மூத்த பிள்ளையார்—திரு மும்மணிக்கோவை. 30 செய்யுட்கள் உள்ள நூலில் 23-தாம் அச்சிடப்பட்டுள்ளன.

**பட்டினத்துப் பிள்ளையார்** காவிரிப்பூம்பட்டினத்து திருவெண்காட்டினர். இவரது நூல்களாவன: கோயில் நான்மணி மாலை, (2) திருக்கழுமல

மும்மணிக் கோவை, (3) திருவிடைமருதூர் மும் மணிக் கோவை, (4) திரு ஏகம்பமுடையார் திரு அந்தாதி, (5) திருவொற்றியூர்- ஒருபா ஒரு பஃது. திருக்கழுமல மும்மணிக் கோவையில் சம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாறு கூறப்பட்டுள்ளது. திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் பிற சமயத்தார் செயல்களும் சைவர் வாழ்க்கையும் அழகுறக் கூறப்பட்டுள. இதில் மற்றும் வரகுண பாண்டியனின் சிவ பத்தி கூறப்பட்டுள்ளது. இன்னும், சண்டீசர், சிறுத்தொண்டர், சாக்கியர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகரும் பாராட்டப்பட்டுள்ளனர். திரு ஏகம்பமுடையார் திரு அந்தாதி, மூவர் பாடிய க்ஷேத்திரக் கோவை போல அமைந்துள்ளது. ஒருபா ஒரு பஃதின் 2ஆம் செய்யுளில், ஒவ்வொரு சமயத்தவரும் வணங்கும் கடவுளாக இருந்து அவ்வவரை ஆட்கொள்ளும் செயல் கூறியிருப்பதும் சிந்தனைக் குரியதாகும்.

**நம்பி ஆண்டார் நம்பி** திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரின் பெரும் பேறு பெற்றவர்; தேவாரப் பகுதிகளைத் தில்லையில் தேடித் தெரிந்து, திருமுறையாகத் தொகுத்தவர். இவர் பாடியுள்ள பத்து நூல்களுள் (1-6) சம்பந்தர்—திருவந்தாதி தொடங்கிய ஆறு சம்பந்தரைப் பற்றியவை. இவற்றுள் சம்பந்தரது வரலாற்றுக் குறிப்புக்கள் யாவையும் அடங்கியுள்ளன. (7) **திரு ஏகாதசமாலை**—அப்பரைப்பற்றியும், (8) **கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில்** கண்ணப்பர், சேரமான், சுந்தரர், சாக்கியர், அதிபத்தர், கலிக்காமர், மாணிக்கவாசகர், வரகுணபாண்டியர் குறிக்கப்பட்டுள்ளனர்.

(9) **விநாயகர் இரட்டை மணிமாலை** இருபது செய்யுட்களடங்கியது. (10) **திருத்தொண்டர் திரு அந்தாதி** என்பது, சுந்தரரது **திருத்தொண்டத் தொகையை** விரித்துக் கூறியதாகும். இதில் அறுபத்து மூன்று நாயன்மார்களது வரலாற்றுக் குறிப்புக்களும், ஒன்பது தொகை அடியார் பற்றிய குறிப்புக்களும், சேக்கிழாரது, திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்திற்குச் சிறந்த அடிப்படை நூலாகும்.

**12-ஆம் திருமுறை** சேக்கிழாரது திருத்தொண்டர் புராணமாகும்; ஏறத்தாழக் கி. பி. 300 முதல் 900 வரை இருந்த நாயன்மார்களது வரலாற்றினைக் கூறும் தமிழ்ப் பெரும் காப்பியமாகும்; ஏறக்குறைய 4250 செய்யுட்களடங்கியது. தமிழகத்தில், சைவ சமயம்பற்றி, திருமுறைகளையும், கர்ண பரம்பரைச் செய்திகளையும், நாயன்மார் வரலாறுகளை ஆங்காங்கே குறிக்கும் தில்லை உலாப் போன்ற பிற நூல்களையும், சமண-பௌத்த சமய நூல்களையும், நாயன்மார்களது பிறப்பிடம், சாதி, செய்த சமயத்தொண்டு முதலிய செய்திகளைத் திருமுறைகளை மட்டும் ஆதாரமாகக் கொள்ளாமல், சேக்கிழார் தாமே நன்கு விசாரித்தும், பல இடங்களுக்கும் நேரிற் சென்று ஆராய்ந்தும், யாவற்றையும் திரட்டிக்கொண்டே பாடினார். இச் செய்திகள் சோழர் கால இலக்கியங்களில் எதனினும் கிடைக்கா. "ஒரு பக்கம் பல்லவர் கால வரலாற்றையும், மற்றொரு பக்கம் சோழர் கால நாட்டு நிலையையும், மொழி நிலையையும், சைவ சமய நிலையையும் உள்ளடக்கிக்கொண்ட இந்நூல் தமிழர் நற்பேற்றின் பயனாய்த் தோன்றியதென்றால் மிகையாகாது." பெரிய புராணம் தோன்றிய பின்னரே, 63 நாயன்மார்களுக்கும் உருவத் திருமேனிகள் ஏற்பட்டும், திருக்கோயில்தோறும், அவர்களுக்கும் விழாக்கள் பெருகியதென்னலாம்.

## தேவதானங்கள்

சோழ மன்னர் கோயில்களுக்கென விடுத்த தேவதான நிலங்களும், நிபந்தங்களும் எண்ணில. வரி விதிக்கப்பெறாமல் ஒதுக்கப்பெற்ற நிலங்கள் **இறையிலி** எனப்பட்டன. பெரும்பாலும் அவை கோயில்களுக்கும் சிறந்த அறிவாளிகளுக்கும் அளிக்கப்பட்டவை. திருக்கோயில்களுக்கு இறையிலியாக விடப்பட்ட நிலங்கள் **தேவதானம்** எனவும், சமண-பௌத்த பள்ளிகளுக்கு விடப்பட்டவை **பள்ளிச்சந்தம்** எனவும், மறையவர்களுக்கு விடப்பட்டவை **பிரமதேயம், பட்டவிருத்தி** எனவும், மடங்கள் அறநிலையங்களுக்கு விடப்பட்டவை **சாலாபோகம்** எனவும், புலவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் **புலவர் முற்றூட்டு** எனவும் பெயர் பெற்றிருந்தன. அவர்கள் கொடுத்த நிலங்களுக்குக் குடிமையைத் தவிர்த்து, அவற்றிற்குக் கடமை இன்ன விளைபொருளில் இவ்வளவென்பதையும் வரையறுத்திருந்தார்கள். முதலாம் இராசராசன் பெரும்பற்றப்புலியூரில்[77] அறப்பெருஞ் செல்வி என்னும் அறச்சாலையை உண்டாக்கி, அதற்குரிய நிலப் பட்டயங்களைக் கோயிலிலுள்ள திருக்கைக்கோட்டியில் (Temple - treasury) சேர்ப்பிக்கவேண்டுமெனக் கட்டளையிட்டதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. மூன்றாம் குலோத்துங்கன்[78] கல்வெட்டொன்றில், எண்ணெய், விளக்கேற்றுவதற்காக *1,100* காசு மூலதனமாக வைத்து, அம்மூலதனத்தை ஐந்து வருடத்திற்கொருமுறை கோயில் அதிகாரி தன் முன்பு கொணர்ந்து காட்டவேண்டு

---

77 No. 267 of 1913.
78 No. 264 of 1913.

மென்ற செய்தி காணப்படுகிறது. அக்காலத்திய அரசியலில் பொருள் மறையாதிருக்கவேண்டிச் செய்த முறைகளுள் இஃது ஒன்றாகும். தேவதானங்கள் போதாத முறையில், சுற்றூரிலுள்ள விளை நிலங்களில் மா ஒன்றொன்றுக்குக் குறுணி வீதம் தானியமும், பாக்கு மரம் ஒன்றுக்குப் பாக்கு ஒன்றும், ஒவ்வொரு குடியானவனும் ஓர் உழக்கு எண்ணெய்யும் கொடுக்கவேண்டியதென்றும், அவற்றையெல்லாம் அரசனின் குடிமையை வசூலிக்கும் அதிகாரியே வசூலித்துக் கோயிலுக்குக் கொடுக்கவேண்டியதென்றும் காமரசவல்லிக்[79] கல்வெட்டொன்று குறிக்கிறது.

## கிராம ஆட்சி

சோழர் காலத்துக் கிராம ஆட்சி[80] மிக மேன்மையடைந்திருந்ததென்பது வெளிப்படை.[81] ஊர்ப் பொதுக் காரியங்களைக் கவனிப்பதற்குக் **கணப் பெருமக்கள், கணவாரியப் பெருமக்கள்** என்ற கூட்டங்கள் (Assembly) இருந்தன. அவர்களின் கீழ்ச் சிறிய கூட்டங்களாகக் (Sub-Committees) கிராமப் பொதுக் காரியங்களைக் கவனிக்கக் கிராம

---

79 No. *139* of *1915*.

80 Vide, S. K. Ayyangar, "Hindu Administrative Institutions" also K. A. N. Sastry, "Studies in Chola History and Administration"

81 Ins. *156* of *1919* இராசராசன் I காலத்துத் தென் ஆர்க்காடு, பிரமதேயம் கிளியனூர் கல்வெட்டில், கிராம சபை ஒரு ஒற்றஞல் கொம்புகள் ஊதி அழைக்கப்பட்டமையும், அதற்காக அவன் அக்கிராமத்திலிருந்து இரண்டு சோறுகள் பெறக்கடவன் என்றும் குறிக்கப்பெற்றுள்ளமை காண்க.

**காரியம்** என்ற சபை ஒன்று அமைக்கப்பெற்றிருந்தது. **ஸ்ரீ காரியம்** அல்லது **கோயில் வாரியம்** என்பது கோயில்களின் காரியங்களைக் கண்காணித்து வந்தது. கிராமக் கணக்குகளை எழுதுபவர் தினம் நான்கு நாழி நெல்லும், ஆண்டுக்கு ஏழு கழஞ்சுப் பொன்னும், ஓரிணைக் கூறையும் (இரண்டு ஆடை) யும் பெறுவர். இவர்கள் கணக்குகளுக்கு உத்தர வாதம் செய்யப் பழுக்கக் காய்ச்சிய மழுவைப் பிடித்து உறுதி கூறவேண்டும். அது சுடாது போயின், உண்மை விளங்குவதுடன அவருக்கு அவ்வருட வருவாயிற் 'பாதசேஷ'மெனக் காற் பங்கு அதிகமாக வழங்கப் பெறும். சுட்டுவிடுமாயின் பத்துக் கழஞ்சுப் பொன் அபராதம் கொடுக்க வேண்டும். இச் செய்தி வட ஆர்க்காடு சில்லா, செய்யாறு தாலுக்கா, கரைக் கோட்டுப் பிரமதேசம் கல்வெட்டொன்றால்[82] தெரிகிறது.

பொதுவாக, கோயில்களின் நன்மைக்கெனக் கிராம சபையோர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலவாகும். முதல் ஆதித்தன் காலத்து, குமார மார்த்தாண்டபுரம் நகரத்தார் (guild-of-merchants) வருடம் விட்டு வருடம், தம் வரவுகள் முழுதும், அவ்வூர்க் கோயில், கோபுரங்களைப் புதுப்பிக்கவும், நந்தனவனம் வைக்கவும் செலவிட்டார்களென்பதும்,[83] முதல் இராசராசன் காலத்தில், காஞ்சி இராசசிம்மேசுவரர் கோயிலிலிருந்து வாங்கிய மூலதனத்திற்காக, ஆண்டுதோறும் கோயில் "சிவபண்டாரியிடம்" ஓர் அளவை நெல் அளந்தமையும், காலம் கடந்தால், தினம் கால் பொன்

82 Epi. Rep. *1916*, p. *115*. 83 S. I. I. III. iii. p. *224*.

அபராதத்துடன் கொடுத்தமையும்,[84] அம்மன்னன் காலத்திலேயே (A. D. 1007) பெரியாழ்வார் சபையோர் ஜெயங்கொண்ட சோழ விண்ணகர் ஆழ்வாருக்கு, அக்கோயில் நிலம் முழுவதையும், கிராமத்தாரே உழுது சாகுபடி செய்து, "ஜெயங்கொண்ட சோழன்" மரக்காலால் ஒரு அளவு நெல் அளக்க ஏற்றுக்கொண்டமையும்[85] கல்வெட்டுக்களால் புலப்படுகின்றன.

இவை போன்ற சரித்திர காலச் சோழர்கள் திருப்பணி செய்வித்த கோயில்களேயல்லாமல், சைவ சமயாசாரியர் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடிய கோயில்கள் பல சோணாடு முழுதும் நிலவுகின்றன. அவைகளிற் பெரும்பாலானவற்றின் பெயர்கள் மாத்திரமே தேவார க்ஷேத்திரக் கோவை, அடைவுத் திருத்தாண்டகம் முதலிய திருப்பதிகங்களில் காணப்படுகின்றன. அவை சைவ சமயாசாரியர்களின் சைவத் தொண்டினுக்கும், சோழ நாட்டினரது ஆழ்ந்த சமயப்பற்றிற்கும் சான்றுவன.

சோழ மன்னர்கள் தொன்றுதொட்டு வெற்றியும் புகழுமே தம் அணிகலன்களாகக் கருதித் தமிழர்களது பேரரசைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்தியும், இமயம் வரையில் தங்கள் கீர்த்தியை நிறுவியும், ஆண்டவன் அருளைப் பெறுதற்கு முயன்று கடவுள் பத்தியில் சிறந்தும் விளங்கினார்கள். அவர்கள் எடுப்பித்த கற்றளிகளும், அவற்றிற்கு விட்ட நிபந்தங்களும், அவைகளை என்றும் நினைப்பூட்ட அங்குப் பொறித்துவைத்த கல்வெட்டுக்களும்

84 S. I. I. I. p. 140. 85 S. I. I. III. p. 18.

என்றும் அழியாதிருப்பன. அவர்களின் அரசியல் முறையும், ஊர்களை அமைதியுடன் பரிபாலித்து வந்த கிராம சபைகளும், அவற்றின் சட்டதிட்டங் களும் பிறவும் இக் கல்வெட்டுக்களால் நன்கு புலப் படுவனவாகும். அவற்றை நோக்கும்போது, பண்டைச் சோழ மன்னர்களின் பேரறிவையும் அரசியற்றிறனையும் வியந்து பாராட்டுகிறோம். தெய்வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்களிலே, அரசியற் செய்திகளையும் தம்மகத்துக் கொண்டு அவற்றை உண்மைக்கும் அன்புக்கும் உரியனவாக ஆக்கியதை உணர்ந்து பெரிதும் மகிழ்வதோடு பெருமிதமும் கொள்கின்றோம்.

# தஞ்சை இராசராசேச்சரத்துத் திருப்பதிகம்

---

## கருவூர்த் தேவர் திருவிசைப்பா

**"தஞ்சை இராசராசேச்சரம்"**

**பண் - பஞ்சமம்**

*திருச்சிற்றம்பலம்*

*உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதி*
*ஒன்று நூறுயிர கோடி*
*அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ*
*அங்ஙனே அழகிதோ வரணம்*
*பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்*
*பருவரை ஞாங்கர்வெண் திங்கள்*
*இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை*
*இராச ராசேச்சரத் திவர்க்கே.* (1)

*பொருள் :—காவல்கள் பல நெருங்கி (அமைந்து), பல விதமான படைகள் அமைக்கப்பட்ட நீண்ட நிலைகளையுடைய பெரிய மலைபோலும் மிக உயர்ந்த மாடங்களின் பக்கங்களில் வெள்ளிய சந்திரன் தவழப் பெற்ற தழைகள் விரவப் பெற்ற மதிலுள் மேடை (பதணம்) களையுடைய மதில் சூழ்ந்த தஞ்சை இராச ராசேச்சரத்து வீற்றிருக்கும் இவருக்கு, உலகத்தவர்கள் வணங்கும்படியாக வந்து எழுகின்ற கிரணங்களையுடைய சூரியன் பல ஆயிர கோடி சேர்ந்தாற் போன்றிருக்கும் திருவுருவம் (அவ்வளவு ஒளியுடையது எம்பெருமான் திருமேனி) எவ்வளவு அழகுள்ளதாயிருக்கிறது !*

நெற்றியிற் கண்என் கண்ணின்நின் றகலா
நெஞ்சினில் அஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடியென் குடி முழுதாளப்
புகுந்தன போந்தன இல்லை
மற்றெனக் குறவென் மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராச ராசேச்சரத் திவர்க்கே. (2)

பொருள் :—மடங்கி விழுகின்ற அலைகளையுடைய வடவாற்றின் நீர் செல்லும்படியான மதகில் வாழும் முதலைகள் மோதும்படியான நீர் நிறைந்த அகழ்சூழ்ந்த மதில்கள் சுற்றி இருக்கும்படியான தஞ்சை இராசராசேச்சரத்து வீற்றிருக்கும் இவருடைய நெற்றிக் கண்கள் என் கண்களைவிட்டு அகலவில்லை. ஒளி வீசுகின்ற சிலம்புகள் ஒலிக்கும்படியான பொன் போலும் அழகிய இவர் பாதங்கள், என்னுடைய குடி முழுவதையும் ஆட்கொள்ள என்னெஞ்சினுள் புகுந்தன. புகுந்த அவைகள் திரும்பவேயில்லை. (அதாவது எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருத்தல் பற்றி, ஆதலின் எனக்கு வேறு இவரைத் தவிர உறவினர் எதற்கு ?)

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்,
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல் செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (8)

பொருள் :—மின்னல் போலும் ஒளி வீசுகின்ற நீண்ட புருவத்தினையுடைய இள மயிலைப்போன்ற பெண்கள், பெரிய நாடகசாலைகளில் இனிய நடனம் செய்யும்படியானதும், மதில்கள் சூழப்பெற்றிருப்பதுமாகிய தஞ்சை இராச ராசேச்சரத்தில் அமர்ந்த இவர், நெடுங்காலமாகத் தங்களால் இயன்ற தொண்டுகளைச் செய்து முன்னோர்கள் பலர் எம் பெருமான் அருள் கிடைக்கப்பெறாது ஏமாறிக்கொண்டிருக்க, என்னுடைய பெரிய கோயிலாகிய நெஞ்சில் வந்து தங்கியிருக்கும் எம்பெருமானின் எளிமைத் தன்மையை யான் எப்பொழுதும் மறக்கவேமாட்டேன்.

தனியரெத் தனேயோ ராயிர வருமாம்
தன்மையர் என் வயத்தினராம்
கனியரத் தருதீங் கரும்பர் வெண் புரிநூற்
கட்டியர் அட்டஆர் அமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினியரெத் தனேயும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (10)

பொருள் :—அநேக மதில்கள் சூழ்ந்த தஞ்சை இராசராசேச்சரத்து வீற்றிருக்கும் இவர் தனிமையானவர். எவ்வளவு ஆயிரம் பேர்களினுடைய தன்மையையும் உடையவர்! என்னிடத்துக் கனிந்த அன்பினேயுடையார். இனிய தித்திப்பான கரும்பு போல்பவர். வெள்ளிய முப்புரி நூலேயுடையவர். கடைந்தெடுக்கப்பட்ட அரிய அமிர்தம் போல்பவர். தூய்மையானவர். பொன் மயமான வீரகண்டையைத் தரித்தவர். முறுக்கடங்கின சடையினேயும், மகுடத்தினேயும் உடையவர். புண்ணியர். பொய் பேசாத உண்மை உடையவர்களுக்கே இனியராவார்.

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்வுரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி அல்லர்தீர் கருவூர்
அறைந்த சொல்மாலே ஈரைந்தின்
பொருள்மருந் துடையோர் சிவபத மென்னும்
பொன்னெடுங் குன்றுடையோரே. (11)

பொருள் :—தேவதாரு, மந்தாரம், சண்பகம், வகுளம் (மகிழமரம்), சந்தனம் இவைகள் நிறைந்த நந்தவனத்தின் இருள் பரவியிருக்கிற உச்சியினேயுடைய மதில்கள் சூழ்ந்த தஞ்சை இராசராசேச்சரத்து அமர்ந்த இவரிடத்து, மனத்தைச் செலுத்துதலாகிய அரிய மருந்தை அருந்தி, துன்பம் நீங்கப்பெற்ற கருவூரன் சொல்லிய இப்பாட்டுக்கள் பத்தின் பொருளேயறிந்து தெளிதலாகிய ஓர் அரிய மருந்தை உடையோர், சிவபதம் என்னும் பொன் மயமான நீண்ட குன்றினே ஏறி அதனேத் தமக்கு இருப்பிடமாகக் கொண்டவர்களாவார்கள். (அதாவது சிவபதத்தை அடைந்து சிவபெருமான் கிருபையைப் பெறுவர் என்பது கருத்து).

திருச்சிற்றம்பலம்